
# தார்மீகக் கோபங்கள்




கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/0534

06/10/05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தார்மீகக் கோபங்கள்

(சிறுகதைத் தொகுதி)

"ஜோசப்பால் சிவம்"

வெளியீடு:

இணுவில் கலை இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: தார்மீகக் கோபங்கள்
(சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர்: 'கோப்பாய் சிவம்'

உரிமை: ஆசிரியருக்கு

வெளியீடு: இணுவில் கலை இலக்கிய வட்டம்.

முதற்பதிப்பு: 16-05-2004.

கணினி வடிவமைப்பு: ஸ்ரீவித்யா கணினி அச்சகம்
கந்தசுவாமி கோவிலடி,
இணுவில், சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு ஸ்ரீ மீனாட்சி அச்சகம்.
கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: xii + 124

விலை: 150/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இந்நூல் இணுவில் கலை இலக்கிய வட்டத்தினூடாக வெளிவருவதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

1981 இல் கால்கோள் கொண்ட எங்கள் இலக்கியவட்டம் ஆரம்பத்தில் இலக்கியப் படைப்புக்களைக் கைவரப்பெற்று நூலாசிரியரைக் கௌரவிப்பதும், நூலை விமர்சிப்பதும், விற்பனையில் உதவுவதும் என்ற வகையில் செயற்பட்டது. அதேபோல் கலைப் படைப்புக்களையும் மேடையேற்றி விமர்சித்து நயம் கண்டோம். இதனால் எம் இளைஞர் பலர் புதிய தேடல்களில் முனைப்புப் பெற்று வளர்ந்தனர். தேடலின் பட்டறிவு இலக்கிய வட்டத்தின் தோற்றத்துக்கான நோக்கை எளிமையாக்கியது.

பின் வந்த அரசியற் பிறழ்வுகள் எம்மவரையும் சிதறடித்துச் சென்றது. பலர் நாட்டைவிட்டே வெளியேறினர் சிலர் நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்தனர். நலிவுகள் பலப்பல....

ஆயினும் எம்மவருள் சிலர் தொடர்ந்தும் தாக்குப் பிடித்து உழைத்து வருகிறார்கள். அதன் பெறுபேறாகவே இதுவரை நான்கு நூல்கள் எம்மால் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்றும் மத்திய, மற்றும் மாகாண கலாச்சார அமைச்சுக்களின் பரிசில்களைப் பெற்றுக் கொண்டன. அண்மையில் வெளியீடு செய்யப்பட்ட *நாடக வழக்கு* என்ற நூலும் தகுதிக்குரிய வெளியீடே.

இதன் வழி இன்று *தார்மீகக் கோபங்கள்* என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளிக் கொணர எமக்கு நல்வாய்ப்புக் கிட்டியுள்ளது. நிச்சயம் இந்நூல் பலரதும் நெஞ்சைத் தொட்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை. தக்கோர் சபைமுன் விளக்கம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியர் தமிழறிவு நிரம்பப் பெற்றவர். கலை இலக்கிய வடிவங்களில் பலவற்றை தொட்டு நீண்ட காலம் எழுதிவருபவர். சிறந்த எழுத்தாளர். எல்லாவற்றுக்கும் மேலாக பழகுவதற்கு இனியவர். மனித நேயம் மிக்கவர். இத்தகைய ஒருவரது படைப்பு மதிப்பு மிக்கது. இவை வெறும் புகழ்ச்சியில்லை. இலக்கிய உலகம் உவந்தேற்கும் தகுதியுடைய நூலை வெளிக் கொணருவதில் இலக்கிய வட்டம் பெருமையடைகிறது. என்பதை மீண்டும் கூறி விடைபெறும்,

**திரு இ. துரைஎங்கரசு (காப்பாளர்)**
**திரு ந. ஞானசூரியர் (பொருளாளர்)**

**இணுவில் கலை, இலக்கிய வட்டம்**
**இணுவில்.**
**22 .04. 2004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"நியாயமான போராட்டங்கள்" என்ற சிறுகதைத் தொகுதியை 1985 ஆம் ஆண்டில் வெளியிட்டு, ஆற்றல் வாய்ந்த சிறுகதை எழுத்தாளனாகத் தன்னை இனங்காட்டிய கோப்பாய் சிவம் அவர்களின் இரண்டாவது சிறுகதைத்தொகுதி - தார்மீகக் கோபங்கள்.

இவருடைய தந்தையார் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா (1916 - 2003) தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையும் மலையாளம், ஆங்கிலம், பாளி, ஹிந்தி ஆகிய மொழிகளை வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் சிங்களம், தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் நியாயமான அளவு பரிச்சயமும் உடையவராகி அம் மொழிகளில் எழுந்த சிறந்த இலக்கியங்களுட் சிலவற்றை மூலத்திலேயே வாசித்து இரசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்.

சில மொழிபெயர்ப்புக்களாலும் பிற மொழி இலக்கியங்கள் சம்பந்தமான கட்டுரைகளாலும் விமர்சனங்களாலும் சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் போன்றவற்றாலும் தமிழை வளம்படுத்தி ஈழத்துப் பேனா மன்னர்களுள் ஒருவராகக் கணிக்கப்பட்டவர்.

ஈழத்து இலக்கிய விமர்சகர்களாலும் எழுத்தாளர்களாலும் வாசகர்களாலும் இன்றும் விதந்து பேசப்பட்டுவரும் "மறுமலர்ச்சி" சஞ்சிகையைப் பற்றி, "பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா இல்லையென்றால் "மறுமலர்ச்சி"யே இல்லை" என அதன் நிறுவக ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான "சாகித்திய ரத்தினம்" தி. ச. வரதராசன் (வரதர்) குறிப்பிடுமளவிற்கு அந்தச் சஞ்சிகையின் ஆதாரசக்தியாக - உயிர் நாடியாக விளங்கியவர்.

இலங்கை, இந்திய அறிஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் போன்றோருடன் நேரிலும், கடித மூலமும் தொடர்பு கொண்டு இலக்கண இலக்கியக் கருத்துப் பரிமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தானும் பயன் பெற்று அவர்களையும் பயன் பெறச் செய்தவர்.

முப்பது ஆண்டுகட்கு மேல் ஆசிரியராகப் பணி புரிந்து இலக்கிய வேட்கையும் தமிழ் மொழிப் பற்றும் நிறைந்த மாணவர் பலரை உருவாக்கியவர். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

இதமான இலக்கியச் சூழலில் வாழ்ந்து வளரும் வாய்ப்பைப் பெற்ற கோப்பாய் சிவம் தந்தையின் பெயரில் குளிர் காயாமல் அவர்வழி தான் பெற்ற இலக்கிய ஆர்வத்தையும் அறிவையும் அனுபவங்களையும் தன் போக்கிற்கும் நோக்கிற்குமேற்ப இசைவாக்கம் செய்து தனக்கென ஓர் இலக்கிய ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

"வீரகேசரி" நிறுவனத்தின் வெளியீடான "ஜோதி" இதழில் 1967 ஆம் ஆண்டில் எழுதிய 'ஈழவளநாடு' என்ற கவிதையுடன் இவர் எழுத்துலகிற் புகுந்தார். வீரகேசரி, தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, சுடர், சிரித்திரன், மல்லிகை, அமிர்த கங்கை போன்ற பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் விசேட மலர்கள் சிலவற்றிலும் 'ஆனந்த பைரவி', 'கோப்பாய் சிவம்', 'சங்கீதா' ஆகிய புனைபெயர்களில் இவருடைய சிறுகதைகள், கவிதைகள், குறுநாவல்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

"கனவுப் பூக்கள்"(கவிதைத் தொகுதி), "நியாயமான போராட்டங்கள்" (சிறுகதைத் தொகுதி), "வெள்ளோட்டம்" (குறுநாவல்), "இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் - சஞ்சிகைகள்", "சைவாலயக் கிரியைகள்", "சைவ விரதங்களும் விழாக்களும்" "ஆற்றல் பல நல்கும் ஆஞ்சனேயர்"ஆகியவை இதுவரை வெளியான இவருடைய பல்துறை சார்ந்த நூல்கள்.

இவரது இந்த இரண்டாவது சிறுகதைத் தொகுதியில் 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரையிலான பன்னிரண்டு வருடங்களில் இவர் எழுதிய 18 சிறுகதைகள் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலே நாம் காண்கின்ற சில மனிதர்களை நாம் காணத் தவறுகின்ற கோணங்களிற் பார்த்து அவர்களின் பிரச்சினைகளை, ஏக்கங்களை, அவலங்களை, கனவுகளைத் தன் கதைப் பொருள்களாக்கி அவற்றை அனுதாபத்துடன் நோக்க வைக்கின்றார், சிந்திக்க வைக்கின்றார்.

திடீர்த் திருப்பங்களை, குறிப்பிட்ட சில பருவத்தினர்க்குக் கிளுகிளுப்பூட்டும் விரஸங்களைத் தவிர்த்துத் தான் சொல்ல விரும்பும் செய்திக்குப் பொருத்தமான சம்பவங்களை எளிய, இனிய தமிழ் நடையில் ஆசிரியர் சொல்வது பாராட்டிற்குரியது.

பிள்ளைத் தமிழ், குழந்தை, தார்மீகக் கோபம் தலை தூக்குகின்றது ஆகியவை குழந்தைகள், சிறுவர்கள் சம்பந்தமான கதைகள். பிள்ளைத் தமிழில் "நான்" ஆகவும் மற்றைய இரண்டு கதைகளிலும் "அவன்" ஆகவும் குழந்தைகள் மேல் தான் கொண்டுள்ள பாசத்தையும் பரிவுணர்ச்சியையும் ஆசிரியர் வெளியிடுகின்றார்.

ஏழைமை காரணமாக, வீட்டு வேலைக்காரியாக இருந்து கஷ்டப்படுகின்ற - தேநீர் குடித்தால் தான் மேலும் கறுப்பாகி விடுவேன் என நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஓர் அப்பாவிச் சிறுமிக்கு மீட்சி அளிக்கும் முயற்சி அந்தச் சிறுமியாலேயே தோற்கடிக்கப்படுவதை உருக்கமாகக் கூறுகின்றது "பிள்ளைத் தமிழ்". அந்த வீட்டுக் குழந்தையில் வேலைக்காரச் சிறுமி வைத்துள்ள அப்பழுக்கற்ற பாசத்தின் முன்னால் அவளுடைய வயதுக்கு ஒவ்வாத வேலைச்சுமை பெரிதாகத் தெரியவில்லை.

தன்னுடைய திறமையான நடிப்பினால் போட்டியில் முதற் பரிசு பெறும் தகுதியை நாடகத்துக்கு உருவாக்கிக் கொடுத்த ஒரு சிறுவன் ஏதோ காரணத்தினால் அவனுடைய ஆசிரியர்களால் ஒதுக்கப்படுவதைக் கண்டு நடுவர் ஒருவர் குமுறுவதை, அதைத் தட்டிக் கேட்பதா வேண்டாமா என்ற மனப் போராட்டத்திற் சிக்கித் தவிப்பதை, இறுதியிற் சரியான முடிவொன்றை எடுப்பதை, 'தார்மீகக் கோபம் தலை தூக்குகின்றது" என்ற கதை சுவையாகச் சொல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம விதிப்படியும் அந்தரங்க சுத்தியுடனும் பக்தி பூர்வமாகவும் ஆலயக் கிரியைகளை ஆற்றும் கோயிற் குருமார் பொருளாதார முடையால் அடையும் கஷ்டங்களை, அவற்றைச் சீர் செய்ய வேண்டியவர்களின் அக்கறையின்மையை "அன்னை சிரித்தாள்", "கூனல்" ஆகிய கதைகளில் ஆசிரியர் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார். ஆபத்துக்குப் பாவமில்லை என்ற சமாதானத்துடன் யோகநாதக் குருக்கள் செய்த செயல் (அன்னை சிரித்தாள்) கோவில் ஐயர் எடுத்த முடிவு (கூனல்) ஆகியவற்றின் சரி - பிழைகளை விட, அவர்களின் உள்மனப் போராட்டங்கள் சமய, சமூக, பொருளாதார ரீதியிலான சிந்தனைகள் முக்கியமானவை.

அற்புதமான சக்தி வாய்ந்த அந்தச் சுவாமிகளை நேரிலேயே தரிசித்து ஆசிர்வாதம் பெறவேண்டும் என்ற ஆசையுடன் வந்த அந்த அறுபது வயதுப் பெண் எத்துணை நேரம் "தவம்" கிடந்தாள்! தரிசிக்கும் பாக்கியம் அவளுக்குக் கிடைக்கவேயில்லை. பொறுமை இழந்து, வீட்டிற்குத் திரும்பிச் செல்லலாமோ எனச் சிந்தித்த வேளையில் அவளுக்கு ஆசிர்வாதம் கிடைத்தது! அதை வழங்கியவர்......? "அம்மாவுக்கு உண்மை புரிந்துவிட்டது" என்ற கதையில் ஆரோக்கியமான கருத்துப் புரட்சியொன்றை ஆசிரியர் புகுத்துகின்றார்.

ஆஸ்திகர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந் திருப்பது சோதிடம். வேதங்களின் அங்கமான சோதிடத்தின் நம்பகத்தன்மையை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளது, "சோதிடம் பிழையென்றால் கிரகணத்தைப் பார். வாகடம் பிழை யென்றால் வைத்தியத்தைப் பார்" என்ற முதுமொழி.

எனினும் சோதிடபலன்கள் சில சமயம் பொய்த்துப் போகின்றனவே! காரணம் என்ன? "நான் சோதிடத்தை நம்புகின்றேன் ஆனால்: சோதிடரை நம்பவில்லை" எனச் சமீபத்தில் யாரோ கூறியதை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது "மூன்றிற்குப்பிறகு" என்ற சிறுகதை.

சம்பவங்களைவிட, பாத்திரங்களின் பலவண்ணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வீச்சுக்களே "மௌனங்கள் உடைகின்றன", "இரசனைகள்" ஆகிய கதைகளில் நம்மை ஈர்க்கின்றன.

நடைமுறைக்கும் எதிர்பார்ப்புக்குமிடையேயுள்ள இடைவெளியைச் சமன் செய்யும் சுகமான சிந்தனைகள். அலுப்போ ஆயாசமோ ஏற்படாத ஆக்கபூர்வமான சிந்தனைகள்.

"விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு" என்ற ஆக்கபூர்வமான கருத்தொன்று இழையோடுவதையும் உணரலாம்.

அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறுவது கணவனை இழந்த இளம் பெண்ணின் சோகத்தைப் பன்மடங்காக்கி விடுமோ எனத் தயங்கும் ஒருவனின் சிந்தனை ஓட்டத்தை "இழப்பு" கதையிலே காண்கின்றோம்.

அற்புதமான வேணுகானத்துடன் இழையோடும் சோக பாவத்தின் பின்னணியில் அந்தக் கலைஞனின் காதல் தோல்வி விரவி யிருப்பதை "முற்றுப்பெறாத இராகங்கள்" உருக்கமாக உணர்த்துகின்றது.

முதலாளி - தொழிலாளி பிரச்சனைகள், அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மக்களின் அவலங்கள் அவற்றின் யதார்த்த பூர்வமான காரணங்கள் விடிவிற்கான நம்பிக்கைகள் போன்றவை மட்டுமே சமுதாய நோக்குடைய இலக்கியத்தின் முக்கியமான அம்சங்கள் என்று சொல்லிவிட முடியாது.

படிக்க வேண்டிய இளம் பருவத்திலே பாடசாலையை எட்டியும் பார்க்க அனுமதிக்கப்படாமல் வீடொன்றிலே வேலைக்காரியாக அடைபட்டுக் கிடக்கும் அவலம் (பிள்ளைத் தமிழ்) கோவிற் குருக்கள்மாரைக் கசக்கிப் பிழியும் பொருளாதரச் சிக்கல் (அன்னை சிரித்தாள், கூனல்) திறமை நிறைந்த - ஆனால், வேறு பின்பலம் இல்லாத மாணவர்கள் சில சந்தர்ப்பங்களில் எதிர்நோக்கும் புறக்கணிப்பு (தார்மீகக் கோபம் தலை தூக்குகின்றது) திறந்த மனதுடன் திருந்திய உள்ளத்துடன் சிறையிலிருந்து வெளியேறுவோர் மீது சமுதாயம் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்ப்புணர்ச்சி (எனக்குரிய இடம்) பெண்களின் நியாயமான ஆசைகளுக்குக் குறுக்கே நிற்கும் சீதனக் கொடுமை (அரங்கேறாத ஆசைகள்) போன்றவை இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தோன்றும் தனிமனிதப் பிரச்சனைகள் அல்ல.

புற்றுநோய்போல் சமுதாயத்தை மெல்ல மெல்ல அரித்துச் சிதைக்கின்ற, உடனடித் தீர்வை அவாவி நிற்கும் நிதர்சனங்கள்.

இவைமீது வாசகர்களின் கவனத்தை ஈர்க்கின்ற ஆசிரியரின் சமுதாயப் பொறுப்புணர்ச்சி பாராட்டப்பட வேண்டியது.

"சிறுகதை, கவிதை, நாடகம், குறுநாவல், கட்டுரை ஆகிய பல்துறைகளில் கோப்பாய் சிவம் ஈடுபட்டுள்ள போதிலும் அவரது ஆக்கங்களிலிருந்து அவரைச் சிறந்த ஒரு சிறுகதை ஆசிரியராக இனம் காணலாம்" என ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவரும் ஆற்றல் மிக்க நாவலாசிரியருமான செங்கை ஆழியான் "ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்ற நூலிற் குறிப்பிட்டதை நன்கு உறுதிப்படுத்தும் வகையில் "பிள்ளைத் தமிழ்", "தார்மீகக் கோபம் தலை தூக்குகின்றது", "அன்னை சிரித்தாள்", "கூனல்", "முற்றுப்பெறாத இராகங்கள்", "அம்மாவுக்கு உண்மை புரிந்துவிட்டது" போன்ற கதைகள் அமைந்துள்ளன.

சமீப காலமாக ஆக்க இலக்கியத் துறையிலிருந்து சற்று ஒதுங்கியிருக்கும் கோப்பாய் சிவம் தன் ஆற்றலைப் பயன்படுத்தி நவநவமான சிறுகதைகள், நாவல்கள் மூலம் தமிழ் மொழிக்கும் தமிழ் வாசகர்களின் சிந்தனைக்கும் வளம் சேர்ப்பார் என எதிர்பார்க்கின்றேன்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**சி. சிவ சரவணபவன்**
**(சிற்பி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி. 1985 இல் வெளியான முதலாவது தொகுதி "நியாயமான போராட்டங்கள்" விமர்சகர்களின் கணிப்பீட்டில் உள்வாங்கப்பட்ட போதிலும் வாசகர்களை அதிகம் சென்றடையவில்லை என்பதை உணர்கிறேன். மிகக் குறைவான பிரதிகள் அச்சிடப்பட்டமையும், வெளிவந்த காலச் சூழ்நிலையும், வெளியிடப்பட்ட இடமும், அதற்கான காரணங்களாயமைந்தன.

"நியாயமான போராட்டங்கள்" தொகுதியில் ஏழுகதைகள் மட்டும் இடம்பெற்றிருந்தன. அவை ஒரு போட்டிக்காக அனுப்பப்பட்டுப் பரிசும் பெற்ற கதைகள்.

இப்போது வெளிவரும் "தார்மீகக் கோபங்கள்" தொகுதியில் பதினெட்டுச் சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் வேறுபட்ட பல களங்களையும் கருப்பொருள்களையும் கொண்டவையாக இருப்பினும் இரு விடயங்களில் ஒருமைப்பாடு கொண்டவை.

அதிகமான எனது கதைகள் அகவயப்பட்டவையாக - மனஉணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமைந்திருக்கக் காணலாம்.

இரண்டாவது விடயம் "தார்மீகக் கோபம்"

சமூக முரண்பாடுகளைக் காண்கின்றபோது பொங்கி எழும் தார்மீகக் கோபங்களைச் சுட்டி நிற்பதன் மூலமாகவும் மன உணர்வுகளை ஆழ்ந்து கவனித்து வெளிப்படுத்துவதன் மூலமும் சில செய்திகளைச் சொல்ல நான் முயன்றிருக்கிறேன்.

இவை வெறும் கதைகளல்ல என்பதை வாசகர்கள் நன்கு புரிந்து கொள்வர். கண்முன்னே உலவிவரும் பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகளில் நடமாடுகின்றனர். இக்கதைகளில் காணப்படும் சம்பவத்துணுக்குகள் ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழ்கின்றன.

நீண்டகாலம் இலக்கிய உலகில் அஞ்ஞாதவாசம் செய்தபின் 1975 - 1986 காலத்திற்கிடையில் எழுதப்பட்ட இச் சிறுகதைகளின் வெளியீட்டுடன் மீண்டும் இலக்கிய உலகில் பிரவேசம் செய்கிறேன்.

வழக்கம் போலவே என்னை உற்சாகமூட்டி இக்கதை களை நூல்வடிவில் வெளியிடத் தூண்டிய உயர்திரு *"செங்கை ஆழியான்"* அவர்களுக்கும் எனது இக்கதைகளை ஆழ்ந்து படித்துச் சுவைத்து அழகிய முன்னுரை ஒன்றை வழங்கியிருக்கும் மூத்த எழுத்தாளர் *"சிற்பி"* அவர்களுக்கும் முக்கியமாக இந்நூலைத் தமது வெளியீடாக வெளியிட முன்வந்த "இணுவில் கலை இலக்கிய வட்டத்தினர்"க்கும் பணிவன்பான எனது நன்றிகள் உரியன.

இக்கதைகளுள் சிலவற்றைக் கணினியில் பொறித்துத் தந்ததுடன் offset பதிப்பில் உருவாக்கித்தந்த மீனாட்சி அச்சகத்தினருக்கும் அட்டைப்படத்தை அழகுற வரைந்துதந்த ஓவியர் "ரமணி" அவர்களுக்கும் அட்டைப்படத்தை அச்சிட்டு வழங்கிய 'குரு' பதிப்பகத்தினருக்கும் சில கதைகளை கணினியில் பொறித்து நூலை வடிவமைத்த செல்வி இ. ஜெகத்ஜெனனிக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கந்தசாமி கோவில் அருகில்,
இணுவில், சுன்னாகம்.

கோப்பாய் - சிவம்
(ப. சிவானந்த சர்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# சமர்ப்பணம்



எம்மை இப்புவியில் உருவாக்கி, இனிய பண்புகளை ஊட்டி வளர்த்து, "Three bad pups" ஆங்கிலக் கதைகள் முதல் "இதோபதேசம்" சம்ஸ்கிருதக் கதைகள் வரை மொழி பெயர்த்து வாசித்துக் காட்டியும்

பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன தமிழ் இலக்கியம் வரை அறிமுகம் செய்தும் நல்ல வாசகராக்கி -

எழுத்தாளராகப் பரிணமித்தபோது நேரில் பாராட்டாது பிறரிடம் பெருமிதத்தோடு புகழ்ந்து கூறி எம்மை வளர்த்தெடுத்து,

கலை, இலக்கியம், ஆன்மீகம், அறிவியல், விஞ்ஞானம், வைத்தியம், சோதிடம், சினிமா என்று எல்லாத்துறைகளிலும் நட்போடு உரையாடி எமது அறிவை வளம்படுத்தி,

சமூகத்தில் ஒரு நன்மனிதனாகத் தலை நிமிர்ந்து வாழச் செய்து,

தமது 87 ஆவது வயதில் 24 - 09 - 2003 இல் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எமது அன்புத் தந்தையார்,

பன்மொழிப் புலமையாளர், சுரபாரதி சேவாதுரந்தரர், வித்வசிரோமணி, வித்யாகலாபமணி, சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர் அமரர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்களின் நினைவஞ்சலியாக இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

- கோப்பாய் சிவம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைத்தமிழ்

எனக்கு அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு பழைய புலவரின் பாடலொன்று நினைவுக்கு வரும். காளிதாசன் பாடிய வடமொழிப் பாடல் அது என நினைக்கிறேன். "பூவிலே பூவின் உற்பத்தி கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஆனால், அழகிய பெண்ணொருத்தியின் செந்தாமரை மலர் போன்ற முகத்திலே இரண்டு நீலோற்பல மலர்கள் மலர்ந்ததுபோல அழகிய இரு விழிகள் காட்சியளிக்கின்றன" என்பது அந்த இனிய கவியின் பொருள். மலர்மீது தோன்றும் மலர் பற்றிய அந்த அற்புத வர்ணனையை நான் அவளைக் காணும்போதெல்லாம் நினைத்துக்கொள்வேன். "குழந்தையின் கைகளில் குழந்தை" என்று நான் எனக்குள் சொல்லிக் கொள்வேன். நானும் காளிதாசனாக இருந்தால் அதை வைத்து ஒரு காவியமே பாடியிருப்பேன்.

எல்லாம் நான் புதிதாகக் குடிவந்திருக்கும் வீட்டிற்கு அயல்வீட்டில் இருக்கும் வேலைக்காரப் பிள்ளையைப் பற்றியதுதான். அவள் அந்த வீட்டு எஜமானியின் பிள்ளையைத் தூக்கி வைத்திருகின்றபோதுதான் அந்த வர்ணனைகள் நினைவில் வரும். தள தளவென்று தக்காளிப்பழம்போலக் காட்சிதரும் குழந்தையைக் கருகருவென்று காட்சிதரும் இந்த நாவற்பழக் குழந்தை தாங்கியிருக்கும் அழகே அழகு என்று நானும் புதுக் கவிஞனாகிக் கற்பனைகள் பண்ணுவேன். (தக்காளிப் பழத்தைவிட நாவற்பழம் சிறியது என்பது வேறு விஷயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் அவளுக்குப் பத்து வயதுதான் இருக்கும். அவளே ஒரு குழந்தை. அவள் கையில் வேறொரு குழந்தையா? என்று நான் நினைப்பதுண்டு. ஆனால், நான் அவளைக் காணும் போதெல்லாம் அவள் அந்தக் குழந்தையைத் தாங்கியபடிதான் இருப்பாள்.

அந்தக் குழந்தை தொட்டிலிலோ அல்லது ஏணையிலோ படுப்பதில்லையோ என்னவோ? தாய்கூட அதனை அதிகம் கவனிப்பதாகத் தெரியவில்லை. அவள் ஏதாவது படித்துக்கொண்டோ தெருவைப் பார்த்துக் கொண்டோ உட்கார்ந்திருப்பாள். இந்தப் பெண்தான் குழந்தையை அணைத்துத் தூக்கிக்கொண்டு முற்றத்தில் அங்கும் இங்கும் உலாவுவாள்.

தாயைக் கண்டால்கூட அந்தக் குழந்தை அழுவதில்லை. இவளோடு ஒட்டிக்கொண்டிருக்கும். பால் கொடுக்கும்போது மட்டும் வாங்கிக்கொள்வாள் போலும்! குழந்தைக்கு ஒரு வயதுகூட இருக்காது. செக்கச் செவெல் என்று அழகிய குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு கன்னத்தோடு கன்னம் வைத்து அதனை அணைத்தபடி முகத்தைச் சாய்த்துத் தன் மண்ணிறக் கண்களால் அவள் என்னைப் பார்த்துப் புன்னகைக்கும்போது நான் கிறங்கிப் போய்விடுவேன்.

கன்னங்கரேலென்ற அவள் நிறத்திலே ஓர் அற்புதமான கவர்ச்சி. அழகான முகவெட்டு. சிவந்த-எந்நேரமும் புன்னகைப்பதற்கென்றே அமைக்கப்பட்ட உதடுகளின் இடையே பளீரென்று மின்னலடிக்கும் பற்கள். மெலிந்த தேகம். சுகந்தி என்பது அவளுடைய பெயர். நான் இங்கு வந்த முதல் நாளில் கையில் குழந்தையோடு வாசலில் நின்றுகொண்டு வியப்போடு துருதுருத்த விழிகளால் பார்த்துக்கொண்டிருந்த அவளை நான் அவதானித்தேன். அவள் விழிகளில் ஏதோ ஒரு சோகம் மண்டிக் கிடக்கிறதோ? கனவு கண்டுகொண்டிருந்த அந்த விழிகளும் சேர்ந்து நகைக்க , அவள் எனக்கு ஒரு புன்னகையை வீசினாள். அன்றைக்கு அறையை ஒழுங்கு செய்து எல்லாச் சாமான்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த பிறகு வீட்டின் முன் விறாந்தையில் உள்ள அரைச் சுவரில் வந்து அமர்ந்த நான் அவளையும் குழந்தையையும் பார்த்துக்கொண்டே அந்த மாலைப்பொழுதைக் கழித்துவிட்டேன்.

தூரக் கனவில் இலயிக்கும் அந்த விழிகளில் ஏக்கத்தையும் மீறிய ஒரு குதூகலம் மிதந்து பொங்கிப் பிரவகிக்க அவள் அந்தக் குழந்தையோடு கொஞ்சி விளையாடுவாள். நான் அவளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருப்பேன். ஒவ்வொரு மாலைப் பொழுதும் இப்படியே கழியும். நான் இருந்த வீட்டிற்கும் அவர்கள் இருந்த வீட்டிற்கும் இடையிலிருந்த கம்பிவேலியின் மேலாக அந்தக் குழந்தையை எப்போதாவது ஆசையுடன் வாங்கிக் கொஞ்சிவிட்டுக் கொடுக்கும்போது அந்தப் பெரிய குழந்தையையும் ஒருகால் கட்டிக் கொஞ்சவேண்டும்போல் தோன்றும்.

ஒரு நாள் மாலை நான் அந்த அரைச் சுவரில் அமர்ந்தபடி தேநீர் அருந்திக்கொண்டிருந்தேன், வழமைபோல் அவள் குழந்தையுடன் விளையாடிக் கொண்டு நின்றாள். "தேத்தண்ணி குடிச்சிட்டியா? சுகந்தி" நான் ஒரு பேச்சுக்காக அவளைக் கேட்டேன். ஒரு நிமிட மௌனம்.

"நாங்கள் தேத்தண்ணி குடிக்கிறேல்ல.... குடிச்சாக் கறுப்பா வருவினம்...." அவள் மறுபுறம் திரும்பி நடந்தாள். அந்தக் குழந்தையின் பதில் என்னைச் சிந்திக்க வைத்தது.

சில வாரங்கள் கழிகின்றன. அந்தக் குடும்பத்தினருடன் எனக்கு நெருக்கம் அதிகமாகிவிட்டது. நான் அடிக்கடி அங்கே போய்வருவது வழக்கமாகிவிட்டது.

அன்றைய அவளது பதிலுக்கு விளக்கம் ஓரளவு கிடைக்கிறது எனக்கு. அவளுக்குத் தேநீர் கொடுப்பதில்லை அவர்கள். அதனால்தான் அன்று அப்படிச் சொல்லியிருக்கிறாள். அதேநேரம் அதற்கு அவள் தானாகக் கற்பித்துச் சொன்ன குழந்தைத்தனமான "தேத்தண்ணி குடிச்சாக் கறுப்பாக வருவினம்" என்ற பதிலின் விவேகத்தை நான் வியந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவீட்டில் ஏதோ கிடைப்பதைச் சாப்பிட்டுக்கொண்டு அவள் இருக்கிறாள். சாதாரண வேலைக்காரியாகத்தான் அவள் நடத்தப்படுகின்றாள் என்பதை நான் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்தபோது, எனக்கு அதிர்ச்சியாகவும் வேதனையாகவும் இருந்தது. பத்து வயதுகூட நிரம்பாத அந்தக் குழந்தை இன்னொரு குழந்தையைச் சீராட்டி வளர்ப்பது மட்டுமல்லாமல் அதன் உடுப்புகளைத் தோய்ப்பது போன்ற வேலைகளைக் கூடச் செய்வதைக் கவனித்தேன். ஆனால், அவளை அங்கு அவர்கள் சரியானபடி வளர்க்கவில்லை என்பதையும் நான் உணர்ந்தேன். எவ்வளவு கொடுமை இது.

என்னால் அதன் பிறகு அந்தக் குழந்தையை இரசிக்க முடியவில்லை. என்னை நோக்கிப் புன்னகைக்கும் அந்தப் பிஞ்சு முகத்தில் தோன்றும் கலகலப்பையும் குதூகலத்தையும் காணும் போதெல்லாம் என்னால் இயல்பாகச் சிரிக்க முடியவில்லை. அந்த முகத்தினுள்ளே மறைந்திருக்கும் ஏக்கங்களையும் துயரங்களையும்தான் என்னால் உணர முடிந்தது.

அவளுடைய அந்த ஏக்கத்தைத் தீர்ப்பதற்கு முயலாமல் அவளை இரசிக்கவும் அவளோடு மகிழ்ச்சியாகச் சிரித்துப் பேசவும் எனக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற ஒரு குற்ற உணர்வு குறுகுறுத்தது. தினமும் காலையில் அலுவலகம் போகும்போதும் பின்பு திரும்பி வரும்போதும் அவள் என்னையே பார்த்துக் கொண்டிருப்பாள். தூரத்தில் நான் வருவதைக் கண்டவுடன் ஒரு கையில் குழந்தையைத் தூக்கியவாறு மறுகையை அசைப்பாள். நான் போகும்போது 'டாட்டா' காட்டுவதாயும் வரும்போது வரவேற்பதாயும் அமைகின்ற அந்த ஒரேவிதமான-அவளுக்கேயுரிய கையசைப்பு அவளது குதூகலத்தையே தெரிவிப்பதென்றாலும், எனக்கென்னவோ அதைப் பார்க்கும்போது கூண்டிற்குள் அடைபட்டிருக்கும் பச்சைக்கிளி தன்னை விடுதலை செய்யுமாறு கோரி இறக்கைகளை அடிப்பது போலத் தோன்றும்.

அந்தச் சிறையிலிருந்து அவளை விடுதலைசெய்ய முடிந்தால்.....? ஆனால் அவள் எங்குதான் போவது? அவளுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் இல்லை. இரண்டு சகோதரர்கள். எங்கோ தொழில் புரியும் தந்தை இவளையும் இவளது ஒரு சகோதரனையும் இப்படித்தான் யாரிடமோ கொடுத்துப் பணம் வாங்கிக்கொண்டு போய்விட்டான். அவன் எங்கே என்பதே தெரியாது. விற்றபொருளை அவன் வாங்கிக்கொள்ள வருவானா என்ன? எப்படி அவளுக்கு வாழ்வு கொடுக்கலாம்?

கடைசியாக ஒரு யோசனை வந்தது. இப்படியான சின்னஞ்சிறு பிள்ளைகளை வீட்டில் வேலைக்கு வைத்துக் கொள்வது சட்டப்படி குற்றமாகும். எனவே இதைச் சட்டத்திற்கு முன் கொண்டுவருவதுதான் சரி. சட்டம் அவளை விடுவித்து எங்காவது அநாதை இல்லத்தில் சேர்க்குமல்லவா? ஆனால், இதை நேரடியாகச் செய்து, என் அயலவர்களாயும் நண்பர்களாயும் உள்ள அடுத்த வீட்டுக்காரரைப் பகைக்கமுடியாது. ஆகவே மொட்டைக் கடிதம் ஒன்று போடுவதுதான் சரியான வழி என்று தீர்மானித்தேன்.

அன்று மாலை நான் அரைச்சுவரில் இருந்தபடி அடுத்தவீட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பொலீசார் அந்த வீட்டிற்குள் நுழைகிறார்கள். சில நிமிடங்களின் பின் ஒன்றும் தெரியாதவனாக - தற்செயலாகச் செல்பவன் போல நான் அங்கு போகிறேன். பொலீஸ் விசாரணை நடக்கிறது. வீட்டுக்காரர் செய்வதறியாமல் விழித்துக்கொண்டு நின்றனர். குழந்தை ஒருபுறம் தூங்கிக்கொண்டிருக்கிறது. சுகந்தி ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தவாறு நிற்கிறாள். என்னைக் கண்டதும் அவள் முகத்தில் ஒரு நிம்மதியும் தெளிவும் பிறக்கிறது.

அந்தப் பொலீஸ் இன்ஸ்பெக்டரும் சற்றுக் கருணையுள்ளவராக இருந்தார். கடைசியில் அவர், "இதைச் சட்டப்பிரச்சினையாக்கி உங்களுக்குத் தொல்லைதந்து அவமானப்படுத்தாமல் விடுகிறதற்கு நான் சம்மதிக்கிறேன், இந்தப் பிள்ளையை விடுங்கள். நாங்கள் அவளை அநாதை விடுதியில் சேர்த்துக் கொள்கிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு இப்போது நிம்மதியாக மூச்சு வந்தது. எனக்கும் என் எண்ணம் பூர்த்தியானதையிட்டு மகிழ்ச்சி. இன்ஸ்பெக்டர் எழுந்தார். "தங்கச்சி வாங்கோ!" என்று சுகந்தியின் கையைப் பிடித்து அழைத்தார். அவள் ஒன்றும் புரியாமல் பயந்து நடுங்கினாள். நான் இன்ஸ்பெக்டருக்கு சைகைகாட்டிவிட்டு அவளருகில் போனேன்.

"சுகந்தி! இவை பொலீஸ்காரர் என்றிட்டுப் பயப்படாதை, இவை உன்னை ஒரு பள்ளிக்கூடத்திலை சேர்க்கப்போகினம். நீ அங்கையே இருந்து படிச்சுப் பெரிசா வரலாம். உன்னை மாதிரிக் கனபேர் அங்கை இருக்கினம். அங்கை இருக்கிற ஆக்கள் உன்னை அன்பாய் நடத்துவினம்" என்று சொல்லி அவளுக்கு மட்டும் கேட்கத் தக்கதாக மெல்லிய குரலில், "இஞ்சை மாதிரிக் கஷ்டப்பட்டு வேலைசெய்யத் தேவையில்லை. நல்ல சாப்பாடு தருவினம்" என்று சொல்லி முடித்தேன். அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் ஒரு சலனம், விடுதலைபெறும் ஆவல். திரும்பி அங்கிருந்த யாவரையும் ஒருமுறை பார்த்த அவள் விழிகள் குழந்தையில் படிந்தன. மறுபடி என்னைப் பார்த்துவிட்டு ஓடிப்போய்க் குழந்தையை அள்ளி அணைத்துத் தூக்கிக் கொண்டாள்.

"மாட்டன், நான் குழந்தையைவிட்டிட்டு எங்கையும் போகமாட்டன். எனக்கு ஒண்டும் வேண்டாம்" அவள் கண்கள் கலங்கின. குழந்தையைக் கொஞ்சியவாறு என்னருகில் வந்து ஒட்டிக் கொண்டாள். "என்னை அனுப்பிவிடாதீர்கள்!" என்ற பாவனையில் என்னைப் பார்த்துக் கெஞ்சின அவள் விழிகள்.

என் கண்கள் பனித்தன, தலை நிமிர்ந்தபோது கண்களைத் துடைத்தபடி இன்ஸ்பெக்டர் ஜீப்பில் ஏறினார். வீட்டுக்காரரின் கண்களிலும் கண்ணீர் துளித்திருந்தது.

*தினகரன் 29-07-1979*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுப்பெறாத ராகங்கள்

பொழுது மெல்ல மங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. நான் விரைவாக பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடக்கிறேன். இன்று 'ஓவர்டைம்' செய்ததனால் நேரம் நன்கு பிந்திவிட்டது. பஸ்ஸை எதிர்பார்த்து நிற்கும்போது மனதிற்குள் ஒரு குறுகுறுப்பு. பொதுவாகவே இப்படித் தாமதமாகப் போகிறவேளைகளில் பசி, களை, சோர்வு இவற்றையும் மீறி எனக்கு இப்படி ஒரு உணர்வு ஏற்படுவது வழக்கம்.

நான் இப்படித் தாமதமாகப் போகின்ற வேளைகளிலெல்லாம் 'அவன்' அந்த ஒற்றைப் பாறையில் இருந்துகொண்டு புல்லாங்குழலை இசைத்துக்கொண்டிருப்பதைக் காண்பதுண்டு. அவன் அமர்ந்திருக்கின்ற அந்தத் தோற்றமும் அவன் வாசித்துக் காதில் விழுகின்ற அந்த இசைத்துளியும் ஏதோ ஒரு சோக சித்திரத்தை என்னுள் எழுப்புவதையும் நான் உணர்வதுண்டு.

ஆனால், அவனை நன்றாகப் பார்க்கவோ, அவன் என்ன வாசிக்கிறான் என்பதைக் கேட்கவோமுடியாதபடி பஸ் விரைவாக அவனைக் கடந்து போய்விடும். சில நண்பர்களிடம் போயிருக்கின்ற வேளைகளில் அவர்கள் வானொலியை முறுக்கிக்கொண்டு போகும்போது இடையில் ஏதாவதொரு நிலையத்தில் வீணை இசையின் ஒருசில கமகப் பிரயோகங்களை மட்டும் ஒலித்துக்கொண்டு மீற்றர்கம்பி நகரும்போது அவர்களால் ரசிக்க முடியாத அந்த இசையைப் போடும்படி கூறவும் முடியாமல் அந்தக் கமகங்களை முழுமையாகக் கேட்கவும் முடியாமல் ஒருவித தவிப்பை அடைகின்றேனே-அதேபோன்ற ஒரு தவிப்பை நான் இவனைத் தாண்டி எனது பஸ் போகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அனுபவிக்கிறேன்.



-கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ பஸ் வந்து விட்டது. நான் ஏறியதும் வழமைபோல வலதுபக்க ஆசனங்களில் வெற்றிடத்தைத்தேடி ஓரிடத்தில் அமர்கிறேன். அந்தப் பக்கத்தில் அமர்ந்தால்தான் அந்த சோக சித்திரத்தைக் காணமுடியும்.

அலுவலகப் பகுதிகள், கடைகள், வீடுகள் போன்ற கட்டிடங்கள் சந்தடிகள் அகன்று புதியநகரம் போய்மறைகின்றது. பழைய நகரின் ஆரம்பத்திற்கும், புதிய நகருக்கும் இடைப்பட்ட சுமார் கால்மைல் தூரம் இடையிடையே மரங்கள் அமைந்த பொட்டல் வெளியாக இருக்கும். அந்தப் பெரிய திருப்பத்தில் திரும்பியதும் ஒரு பஸ் நிறுத்தம். அவ்விடத்தில் பஸ் திரும்பி நின்றதும் தொலைவில் அவன் பாறையில் இருப்பது தெரிகிறது. சற்றுத் தள்ளி ஒருகுடிசை. அதில்தான் அவன் வசிக்கிறான் போலும். இதன்பின் பஸ் விரைந்து போய் பழையநகரின் ஆரம்பத்தில்தான் நிற்கும்.

நான் கண்களையும் காதையும் தீட்டிக்கொண்டு அவனையே அவதானிக்கிறேன். பஸ் விரைந்து செல்கிறது. அவனது இசையின் சில துளிகள் காதில் விழுகின்றன. என்ன அதிசயம். பஸ் திடீரென்று நிற்கிறது. எல்லோரின் கவனமும் சாரதியைநோக்கித் திரும்ப அவர் என்ஜினைத் திறந்து நோட்டம் விடுகிறார். பஸ்ஸில் ஏதோஒரு பிழை ஏற்பட்டுவிட்டது.

எனது கவனம் அவனில் லயிக்கிறது. இப்போது அவன் கூப்பிடுதூரத்தில் தான் இருக்கிறான். அவனது குழலிசை நன்றாகக் கேட்கிறது. நான் கண்ணாடியைக் கழற்றி நன்கு துடைத்துப் போட்டுக் கொள்கின்றேன். அவனில் இந்த பஸ் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. கர்மயோகியாகக் குழலை இசைத்து அதிலேயே மூழ்கி நாதோபாசனை செய்து கொண்டிருந்தான்.

நான் அப்போதுதான் நன்றாக அவதானித்தேன். சுத்தமான ராக ஆலாபனை நடக்கிறது. இவ்வளவு நாளும் நான் நினைத்ததுபோல் அவன் வெறுமனே புல்லாங்குழலை ஊதிக்கொண்டிருக்கவில்லை. உண்மையான ஞானத்துடன்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கிறான் என்று அறிந்து வியந்தேன். உலகத்திலுள்ள சோகம் முழுவதையும் ஒன்றுதிரட்டி ஒலிவடிவம் கொடுத்து அந்தக் குழலிலிருந்து அவன் வெளிப்படுத்த, அது ‘தேஷ்’ ராகமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ஸ்வரங்களும் மெல்ல மெல்ல அசைந்து வந்துகொண்டிருந்தன. அவனது கண்கள் சிறிது கலங்கியிருப்பது போலத் தோன்றியது.

அப்போது பஸ்ஸினுள் சிலர் அவனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. அவன் ஏதோஒரு பரீட்சையில் தோல்வி அடைந்ததால் மனமுடைந்து பைத்தியமாகி அந்த இடத்திலே இருந்து குழல் வாசித்துப் பொழுதைப் போக்குகிறான். என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். அதுபற்றிய ஆச்சரியம், அலட்சியம், கேலி, அனுதாபம் எல்லாம் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வார்த்தைகளாகப் பிறந்தன. ஆனால், அந்த ‘தேஷ்’ ராகத்தின் உன்னதமான பிரயோகங்கள் பற்றியோ அதில் வழிந்தோடி மனத்தைக் கசக்கிப்பிழிந்த அந்த சோகத்தைப் பற்றியோ யாருக்கும் பேசத் தோன்றவில்லை. என்னால் அவர்கள் கூற்றை நம்பமுடியவில்லை. பஸ் புறப்படமுன் இறங்கிப்போய் அவனோடு ஏதாவது பேசிப் பார்ப்போம் என்று எண்ணினேன். அதற்கிடையில் பஸ் புறப்பட்டுவிட்டது.

எனக்கு ஒரே அவலமான நிலையாகிவிட்டது. இதயம் கனத்துக் கிடந்தது. ஓர் அற்புதமான ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்து ஆரோகணத்தில் கொண்டுவந்து அந்த அளவில் வாத்தியத்தையே முறித்துவிட்டது போன்ற ஓர் இறுக்கமான உணர்வு. மறுபடியும் மீதி ராகம் முழுவதையும் கேட்டால் தான் அந்த இறுக்கம் தளரும்போல் தோன்றியது. இரவு சாப்பிடப் பிடிக்கவில்லை. ஏதுவுமே செய்ய மனமில்லாமல் வாசற்படியில் குந்தியிருந்தேன்.

சந்திரன் உதயமாகிறது. அன்றைக்குப் பூரணை முடிந்த இரண்டாவதோ மூன்றாவது நாள். நிலவைக்காண எனக்குப் பைத்தியம் பிடிப்பது போல இருந்தது. சோகம் ததும்பும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகத்தின் ஒவ்வொரு ஸ்வரங்களும் என் இதயத்தை ஊசியாய்க் குத்துவது போலிருந்தது. பூரணமாக அதனைக் கேட்டால் மட்டுமே நான் சமநிலையடைய முடியுமென்று தோன்றியது. என்னையும் அறியாமல் ஏதோ ஒரு துணிவில் எழுந்து புறப்பட்டுவிட்டேன். மிக விரைவாக அந்த நெடுஞ்சாலையில் நடந்தேன். இடையிடையே ஒருசில வாகனப் போக்கு வரத்துக்களைத்தவிர வேறு சந்தடி இல்லை. எனது வீட்டிலிருந்து அவனது குடிசைவரை சுமார் ஒன்றரை மைல் தூரத்தைக் கடந்து அங்கு வந்துவிட்டேன். அவன் அப்படியே அந்தக் கல்லில் அமர்ந்திருக்கிறான். வாசித்து வாசித்துக் களைத்திருக்கிறான் என்பது தெரிந்தது.

நான் அவனுக்கு மிக அருகில் போகும் வரை அவனில் எந்தவித சலனமுமில்லை. கையில் குழலை வைத்துக்கொண்டு நாடிக்கு கைகளை முட்டுக் கொடுத்துக்கொண்டு வெகு தூரத்தில் தெரியும் — அந்த நெடுஞ்சாலை வளைவை வெறித்துக் கொண்டிருந்தான். சுமார் நூறுயார் தொலைவில் தெரியும் அந்த வளைவில்தான் புதிய நகரம் ஆரம்பமாகியது. இந்தப் பக்கம் கண்ணுக்கெட்டியவரை வெறும் வெளிதான். இடையிடையே சிறுசிறு பற்றைகளும் மரங்களும் தலைகாட்டின.

நான் அவனுக்குமிக அருகில் வந்ததும் அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவன் பார்வை என்மேல் படிந்தது என்றாலும் அதில் அர்த்தம் எதுவும் இருக்கவில்லை. ஒரு வெறுமை குடிகொண்டிருந்தது. நான் அவன் முகத்தையும் கையிலுள்ள புல்லாங்குழலையும் பார்த்தபடி,

"நான் உங்களோட கொஞ்சம் கதைக்க விரும்பிறன். ஆட்சேபனையில்லைத்தானே"

என்று கேட்டுக்கொண்டு அருகில் நிலத்தில் என் கைக்குட்டையை விரித்துவிட்டு இருந்தேன். அவனும் பாறையைவிட்டு எழுந்து சற்றுத் தள்ளி நிலத்தில் அமர்ந்தான். என்னை வியப்போடு பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கணங்களை நகர்த்தியபின் நான் ஆரம்பித்தேன்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை இதிலை ஒரு பஸ் பழுதுபட்டுக் கொஞ்ச நேரம் நிண்டதைக் கண்டிருப்பியள். அந்த பஸ்ஸிலை நானும் இருந்தனான். அப்ப நீங்க வாசிச்ச தேஷ் ராக ஆலாபனையைக் கேட்டன். ஆனால் அதை முழுதும் கேக்க முடியாமல் பஸ் வெளிக்கிட்டிட்டுது. வீட்டை போய் இறங்கின என்னாலை ஒண்டுமே செய்ய முடியாமல் போச்சுது. அரைகுறையாகக் கேட்ட அந்த அற்புதமான ராக ஆலாபனையும் அதிலை இருந்த சோகமும் என்னை என்னவோ செய்தது. அதை முழுமையாகக் கேட்டால்தான் எனக்கு நிம்மதி வரும். அதினாலை தான் இவ்வளவு தூரம் இந்த இரவிலையும் நடந்து வந்திருக்கிறேன். பிளீஸ் , அந்த தேஷ் ராகத்தைக் கொஞ்சம் வாசிக்கிறியளா?"

இவ்வளவும் நான் பேசும்போதும் மௌனமாக என்னையே வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்த அவன் சலனமில்லாமல் சிரிப்பை உதிர்த்தான். அவனுடைய மௌனம் எனக்குப் பயத்தையும் ஏற்படுத்தியது. ஒருவேளை அவன் உண்மையிலேயே பைத்தியம்தானோ? அதற்குள் அவன் சொன்னான்.

"என்னைப் பைத்தியம் என்று சொல்லிற ஆக்களைத்தான் நான் இவ்வளவு நாளும் கண்டிருக்கிறன். என்ரை சங்கீதத்தை ரசிக்கிற முதலாவதாள் நீங்கள்தான்...."

"அதிகமாக நான் வேலை முடிஞ்சு போற நாட்களிலை உங்களைக் காணிறதுண்டு. உங்களைப் பைத்தியம் எண்டு கனபேர் கதைக்கிறதைக் கேட்டிருக்கிறன். ஆனால், நான் அதை நம்பேல்லை. உங்கடை வாழ்க்கையிலை ஏதோ ஒரு பெரிய ரகசியம் இருக்குதெண்டு நான் நினைக்கிறன். அந்த அந்தரங்கங்களிலை தலையிட நான் விரும்பேல்லை. இப்ப எனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பைத்தியத்தை நீங்கள்தான் தீர்க்கவேணும்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரு நீண்ட பெருமூச்சை உதிர்த்து விட்டுப் புல்லாங்குழலை வாயில் வைத்து வாசிக்க அரம்பித்தான். மறுபடி ராகவெள்ளம் பாய்ந்து வந்தது. அந்த வெள்ளத்துள் மூழ்கி நான் என் இதயக்கனத்தை இறக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அவன் இதயத்தில் துயரக்கனம் ஏறிக் கொண்டிருந்தது. அதற்கு அடையாளமாக அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

என்மனம் குற்ற உணர்வில் தவித்தது. அவன் துயரங்களை நான் நினைவூட்டி விட்டேனோ?

இசை முடிவுக்கு வந்ததும் நான் மன்னிப்புக் கோரும் பாவனையில் கேட்டேன்

"என்னாலை உங்கடை பழைய துயர நினைவுகள் கிளறப்பட்டுவிட்டன போலும்....."

"இல்லை, இது தினமும் கிளறப்பட்டுக் குருதி பாய்கிற இதயம்தான். புதிதாக எதுவுமில்லை...."

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நீங்கள் உங்கட துயரத்தை என்னட்டச் சொல்லலாம். ஆனால் நான் வற்புறுத்தேல்லை"

"என்ரை வாழ்க்கை அப்பிடி ஒன்றும் பெரிய சரித்திரமோ அல்லது சுவையான காவியமோ அல்ல! நான் ஒருத்தியைக் காதலிச்சன். அவளைக் கைப்பிடிக்க முடியேல்லை. இவ்வளவுதான் கதை...."

இப்படிச் சொல்லி நிறுத்தியவன் மேலும் தொடர்ந்தான்.

"நான் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் புல்லாங்குழல் படிச்சன். அதே நேரத்திலை ஆஷா எண்ட பெண் ஒருத்தி கலைப் பிரிவிலை படிச்சாள். எப்படியோ எங்களுக்கை காதல் வந்திட்டிது. ஆனால் சாதாரண பல்கலைக்கழகக் காதல் மாதிரி இல்லாமல் அளவோடையும் மிக இரகசியமாகவும் இருந்தது எங்கடை தொடர்பு. கடைசியிலை என்ரை படிப்பு முடியிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திலை என்ரை ஆலோசனைப்படி அவள் தன்ரை தகப்பனிட்டை எங்கடை தொடர்பைச் சொல்லி அனுமதி கேட்டாள்.

“தன்ரை மகள் தம் சாதி அல்லாதவனைக் காலிக்கிறாள் எண்டதை அறிஞ்ச அவர் அதுக்கு மேலை ஒண்டையுமே விசாரிக்கேல்லை. என்னைப்பற்றிய விபரங்களைக் கேட்கவே இல்லை. ஆனால் அவளை அப்படியே படிப்பை விட்டு நிப்பாட்டிவிட்டார். உடனே வேறை கல்யாண ஏற்பாடுகளும் நடந்தது.

“எனக்குப் பரீட்சை முடிஞ்சு வெளிக்கிட்ட கொஞ்ச நாட்களில் நான் ஆஷாவின் கல்யாணச் செய்தியை அறிஞ்சன். தற்செயலாக ஒருநாள் தனியாக என்னைச் சந்தித்த ஆஷா கண்ணீர் விட்டாள். தன் தந்தையைமீறித் தான் எதுவும் செய்யமுடியாதென்று சொல்லிவிட்டாள்.

“அடுத்தநாள் நான் சோதனையில் தோல்வி அடைஞ்சிருந்ததாக முடிவு வெளிவந்தது. மறுபடி படிக்கும் நிலையிலே நான் இல்லை. இரண்டு ஏமாற்றங்களும் சேர்ந்து என்னை ஓரளவு பைத்தியமாக்கியிருந்தன. என்னைப் பலர் அப்படியே நினைத்தார்கள். இது எனக்கு வசதியாக இருந்தது.

“கடைசியாகச் சந்தித்த பொழுது மிகவும் அதிசயமான ஒரு வேண்டுகோளை ஆஷா விடுத்திருந்தாள். தன் கல்யாண வீட்டிலன்று இரவு தன் வாழ்க்கை ஆரம்பமாகின்ற போது எனது குழலோசை தனது காதில் விழவேண்டும் எண்டது அவளது ஆசை. அந்த அதீத ஆசையை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. அண்டைக்கு இரவு நான் இந்தக் கல்லிலை வந்திருந்து மிக நீண்ட நேரமாய் கல்யாண வசந்தத்தை வாசிச்சுக் கொண்டிருந்தன்.

“அதோ தெரியுதே அந்தத் திருப்பத்திலை தெரியிற முதலாவது பங்களாவிலைதான் ஆஷா இருக்கிறாள். அண்டைக்கு நிச்சயமாக நான் பைத்தியம்தான் என நினைச்சு எல்லாரும் என்னை என்ரை போக்கில் விட்டுவிட்டார்கள். நான் போசாமல் இதிலை ஒரு குடிசையைப் போட்டுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திட்டன். என்ரை வாழ்நாள் பூராவும் எனது குழலிசை அவள் காதிலை விழச் செய்யிறது தான் என்ரை லட்சியம்!

"ஒரு நாள் இரவு ஆஷா தனிய இங்கை வந்தாள். நான் வேற கல்யாணம் செய்துகொண்டு வாழவேணுமெண்டு சொன்னாள். நான் மறுத்துவிட்டேன். அவள் அழுதுகொண்டே போய்விட்டாள். அதிகமாக இரவு நேரங்களில் அவள் கணவன் வெளியே போனபிறகு வேலைக்காரி மூலம் சாப்பாடு அனுப்பிவைப்பாள். எப்போதாவது சிலநாள் அவளே வருவாள். ஒன்றுமே பேசிக்கொள்ள மாட்டாள். கண்கலங்க இமை கொட்டாமல் என்னையே சில நிமிடம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுப் போய்விடுவாள்.

"எப்போதாவது ஒரு நாள் அவள் வருகின்ற அந்த வேளையில் அவள் பார்வையில் சொல்கின்ற அந்த ஓராயிரம் கதைகள் தான் எனக்கு உயிரூட்டுகின்றன. அந்தப் பார்வைதான் எனக்கு உணவு"

அவன் கண்கலங்க இதைச் சொல்லி முடித்துவிட்டுச் சிறிது இளைப்பாறினான். நான் மௌனமாக அவனது கையிலிருந்த புல்லாங்குழலையே பார்த்துக் கொண்டிருந்தேன். என்னால் எதுவும் பேசமுடியவில்லை. அவன் என்னை ஒருமுறை பார்த்துவிட்டுப் புல்லாங்குழலை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். எப்படி இவனால் அலுக்காமல், களைக்காமல் தொடர்ந்து வாசிக்க முடிகிறது என்று வியந்தவாறு அவனது இசையைக் கவனித்தேன்.

ஏக்க உணர்ச்சியை வடிவமைத்துக்கொடுக்கிற தன்யாசி ராகம் ஆரம்பமானது. நுட்பமான நெளிவுகள் சுளிவுகள் ஏற்ற இறக்கங்களைத் தாண்டி அந்த ராகம் விஸ்தாரமாகத் தவழ்ந்து வந்தது. அப்போது தூரத்தில் ஓர் ஓசை. அவனுடைய வாசிப்பில் சிறிது சலனம் ஏற்பட்டது. பார்வை ஆஷாவின் பங்களாவை நோக்கியிருந்தது. ராகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் அவன் முனைவதை உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தினமும் அந்த ஓசை அவன் உள்ளத்தில் ஓர் எழுச்சியையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறதென்பதை நான் புரிந்துகொண்டேன். எதிர்பார்ப்புக்கள் தினமும் ஏற்பட்டாலும் அவளுடைய வருகை மிகச் சிலநாட்கள்தான் கிடைக்கிறது. இன்றும் அவள் வரக்கூடுமோ...?

நான் மெல்ல நகர்ந்து பாறையின் நிழல் மறைவில் உட்கார்ந்து கொண்டேன். அவனது வாசிப்புத் தேய்ந்து வந்து முடிவுற்றபோது தூரத்தில் முக்காடிட்ட ஓர் இளம்பெண் மெல்ல நடந்துவருவதை நான் காணமுடிந்தது. சற்று முன் அவன் வாசித்த ராகத்தை நான் நினைத்தேன்.

அந்த தன்யாசி ராகத்தைப் பற்றி சில நாட்களுக்கு முன் வானொலியில் கேட்ட விளக்கம் எனக்கு நினைவுக்கு வந்தது.

'காதல் பாடல்களுக்கு உகந்த இந்த ராகம் ஏக்கத்தைப் பிரதிபலிப்பது. காதலரைத்தேடி, அவரை நினைந்துருகி, அவரை மறக்கமுடியாமலும், மறந்துவிடுவேனோ என்ற அச்சத்திலும் தனது சேலைத்தலைப்பில் காதலரின் படம் எழுதிவைத்திருப்பவளாக இந்த ராக தேவதை வர்ணிக்கப்படுகிறாள்'

அந்த ராக தேவதையே இப்போது புறப்பட்டு வருவது போல எனக்கொரு மயக்கம். அவள் தான் கொண்டுவந்த உணவை அவன் முன் வைத்துவிட்டு அசையாமல் அவன் விழிகளையே பார்த்தபடி சில கணங்கள் நின்றிருந்தாள், பின் விழிகள் கலங்க பரபரப்புடன் விரைவாகத் திரும்பி நடந்தாள்.

அவன் மௌனமாக அந்த உணவுப் பார்சலை எங்களிருவருக்குமிடையில் பிரித்து வைத்தான். நான் மறுத்துவிட்டேன். அதை அவன் ஆவலோடு சாப்பிட்டான். சிறிது நேரம் மௌனம். எனக்குப் புறப்படவேண்டுமென்ற எண்ணம் அப்போதுதான் ஏற்பட்டது. அதற்கிடையில் அவன் மறுபடி புல்லாங்குழலில் கை வைத்ததும் அந்த எண்ணம் தடைப்பட்டது. என்னுடைய ஆசையை மெல்ல வெளிப்படுத்தினேன்.

"சஹானா ராகத்தில் கொஞ்சம் வாசிக்கிறீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வசனத்தை முடிக்க, அவன் வாசிப்பை ஆரம்பித்தான். ராகம் பிறந்தது. அவனுடைய மூச்சிலும் விரல்களிலும் முன்னரைக் காட்டிலும் வேகம் மிகுந்திருந்தது. மிகநிதானமாக ஆரம்பித்து ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல ஏறிக்கொண்டிருந்தது! மிக மிக விஸ்தாரமான எடுப்பு. சுமார் மூன்று நான்கு மணிநேரம் வாசிக்கக்கூடிய எடுப்பு. நான் மெய்மறந்த நிலையில் கண்களை மூடியபடி கேட்டுக்கொண்டிருந்தேன். இதயம் முழுவதும் ஏதோ வந்து நிறைவது போன்ற உணர்வு. ராகம் நீண்டுகொண்டே போயிற்று.

மறுபடியும் நான் ஒரு குற்ற உணர்வுடன் கண்களை விழித்து அவனை நோக்கினேன். அவன் மிகவும் களைத்துப் போய் மூச்சு இரைக்க வாசித்தான். உடல் சோர்வினால் தளர்ந்துகொண்டிருந்தது. அவனை வீணாக வருத்தி நான் அதில் இன்பம் காண்கிறேனே என்ற ஒரு கழிவிரக்கம் ஏற்பட்டது. ஆனால், நான் சொன்னால்கூட இப்போது அவன் நிறுத்தமாட்டான் என்று புரிந்தது.

நான் மறுபடியும் கண்களை மூடி ரசித்தேன். சில நிமிடங்கள் கழிந்தன சஹானா ராகம் உச்சக்கட்டத்தை அடைந்து பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்தபோது சட்டென்று அந்த வேணுகானம் நின்றது. நான் திடுக்கிட்டபடி அவனைப் பார்க்க அவன் மயங்கிச் சரிந்திருந்தான்.

உடனே குடிசைக்குள் ஓடி நீர் எடுத்து வந்து அவனுக்குத் தெளித்தேன். அவனை மடியில் தூக்கிப் போட்டுக்கொண்டு நீரைப் பருக்க முயற்சித்தேன். அவன் கண்களைத் திறக்கவில்லை. அசையாமல் கிடந்தது அவன் உடல். எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. மூக்கில் விரலைவைத்துப் பார்த்தேன். மூச்சுவரவில்லை. உடல் குளிர்ந்து கொண்டு வந்தது. இவ்வளவு காலமும் வேணுகானமாய் ராகங்கள் இசைத்த மூச்சு அந்த சஹானாவுடன் சேர்ந்து காற்றில் கலந்துவிட்டது. அந்த நேரத்திலும் அவனது கைகள் புல்லாங்குழலை இறுகப்பிடித்திருந்தன. எனது கண்ணீர்த்துளிகள் அவன் முகத்தில் விழுந்து சிதறின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எவ்வளவு கொடிய பாவி. அவனைக் கொன்றது நான் தானே! இதை நினைத்ததும் கவலையையும் மீறிப் பயம் எழுந்தது. மேலே நிமிர்ந்து பார்த்தேன். சந்திரன் நடுவானத்திலிருந்து இறங்கியிருந்தது. நேரம் இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும். இந்த நள்ளிரவில் ஒரு பிணத்தருகில் காட்டுப்பிரதேசமொன்றில் தன்னந்தனியே இருப்பதை நினைத்ததும் கிலி பிடித்துக் கொண்டது.

மெல்ல அந்த உடலை விட்டு எழுந்தேன். நெடுஞ்சாலையில் வெகமாக நடக்க ஆரம்பித்தேன். பிசாசுகள் துரத்துவது போன்ற ஓர் உணர்வு. முழுதும் இசைக்கப்படாத அந்த இராக தேவதை வழிமறிப்பதாக ஒரு பிரமை. எல்லாவற்றையும் மீறி அவனது இழப்பும் அவனால் அரைகுறையாக நிறுத்தப்பட்ட சஹானா ராகமும் சேர்ந்து இதயத்தை அழுத்தின. எப்படியோ வீட்டையடைந்து படுக்கையில் விழுந்தேன்.

மறுநாள் அலுவலகம் செல்லும்போது அந்தப் பாறையருகில் சனக்கூட்டம் இருந்தது. அதைத் தாண்டி அந்தத் திருப்பத்தில் பஸ் நிறுத்தப்பட்டபோது அதில் ஏறியவர்கள் இரண்டு புதினங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

'ராத்திரி அந்தப் பைத்தியம் பேயடிச்சுச் செத்துப்போச்சு'
என்பது ஒன்று.

'வேதவனம் முதலாளியின் மனைவி ஆஷா விடியக் காலமை மாரடைப்பில் செத்துப்போனாள்'
என்பது மற்றொன்று.

எனக்கு இது மற்றொரு அதிர்ச்சி. நேற்று நள்ளிரவில் அரைகுறையாக அவனது ராகம் நிறுத்தப்பட்டபோது அவளுடைய மூச்சும் நின்றிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன். அவனது குழலோசைதான் அவளுக்கு உணவாக இருந்திருக்கிறது என நினைத்தபோது என் கண்கள் கலங்கின

வீரகேசரி 24-06-1979.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனங்கள் உடைகின்றன

**மௌ**னம்.

அதுதான் இப்போதெல்லாம் அவனது பாஷை.

அதிகமாக எங்கும் போவதில்லை. யாரோடும் அதிகம் பேசுவதில்லை. அமைதியாகத் தானும் தன்பாடுமாக யோசனையில் ஆழ்ந்திருக்கிறான்.

மௌனம் -

ஓ! இந்த மௌனத்தில்கூட எத்தனை இன்பம் இருக்கிறது! அவன் அந்த மௌனத்தின் இன்பத்தை சிறிது சிறிதாகப் புரிந்து- அந்த மகிழ்ச்சியில் திழைத்து வருகிறான். மௌனத்தின் பின்னணியில் அமைதியான இயற்கை அழகில் தன்னை மறந்து- சமூகத்தின் நெளிவு சுளிவுகளைச் சிந்தித்து- அதன் பின் ஒரு படைப்பை சிருஷ்டிக்கும் போது, அதில் தான் எத்தனை இன்பம்!

இயல்பாக அவன் அமைதியான சுபாவம் கொண்டவனல்ல! மிகவும் கலகலப்பான-எப்போதும் சிரித்த முகத்தோடு காட்சி தருகின்ற ஓர் இளைஞன் அவன்.

அவனருகில் எப்போதும் ஒரு கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். அவனில்-அவனது நடைமுறைகளில்-பேச்சுக்களில் எல்லாம் ஏதொ ஒரு கவர்ச்சி இருக்கும்.

ஆனால், இப்போது சில காலமாக அவனுக்குள்ளே ஏதோ ஒரு மாற்றம், இதை அவன் உணர்கிறான். தனக்கே புரியாத வகையில் தன்னிலேயே நிகழ்கின்ற அந்த மாற்றம், சூழ்நிலையின் மாற்றத்தால் தன்னில் நிகழ்கிறதா அல்லது தனது மாற்றத்தால் சூழ்நிலைகள் தடுமாறுகின்றனவா? என்று அவன் திகைக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிந்திக்கின்றான்.

இந்தச் சிந்தனைதான் இப்போது அவனது பொழுதுபோக்கு!

வித விதமான கேள்விகள், விசித்திரமான பிரச்சினைகள், அவனுக்குள்ளே கிளர்ந்தெழும்.

தனக்குத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டு அதற்கான விடைகளைத் தன் மனக்குகைக்குள்ளே தேட முயற்சித்து,

தனக்குள் தான் மூழ்கி முக்குளித்து...........

சிந்தனை! சிந்தனை!!

இந்த முடிவே இல்லாத சிந்தனை அவனது பதிலே இல்லாத கேள்விகளுக்கான பதில்களைத் தேடி நீண்டு கொண்டேயிருக்கும்.

'இந்த மௌனத்தினைக் கைக்கொள்ளுமுன் நான் எப்படி இருந்தேன்?' என்று அவன் நினைத்துப்பார்க்கிறான்.

'தான் ஒரு உணர்ச்சிக் குவியலாயிருப்பதேன்?' என்று அவன் ஆராய முற்படுகிறான்.

இப்போதெல்லாம் அவன் மிகவும் சுலபமாக உணர்ச்சிவசப்டுகிறான். கோபம், சோகம், இன்பம் இந்த உணர்வுகள் அவனை மிகவும் சுலபமாக ஆட்டி வைக்கின்றன.

வீதியில் போய்க் கொண்டிருக்கும்போது ஒருவர் வாழைப்பழத் தோலில் வழுக்கி விழுவதைக் கண்டு அங்கு நிற்கும் எல்லோரும் சிரிக்கும்போது இவன்மட்டும் சிரிக்காமல் நிற்கின்றான். அங்கே புதிதாக ஒருவன் வந்தால் இவன்தான் விழுந்தவனோ என்று நினைக்கக்கூடிய விதத்தில் இவன் முகம் தொங்கிக் கிடக்கும். விழுந்தவனுக்காக இவன் மனம் வேதனைப்படும். அதே வேளையில் விழுந்தவன்மீது சற்றும் அநுதாபம் கொள்ளாமல் வேடிக்கைபார்த்து ரசிக்கின்ற மனிதர்கள் மீது கோபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகணம் அவன் தனக்குள் சிந்திப்பான்.

தான் ஏன் இவர்கள் மீது கோபப்பட வேண்டும்? அதற்கு என்ன உரிமை இருக்கின்றது?

சிந்தனைகள் வளர...... கேள்விகள் தொடர, அவன் நடந்துகொண்டிருப்பான்.

துயரம் தோய்ந்த ஒரு கதையை வானொலியில் அவனால் கேட்க முடிவதில்லை. சோகமான பாடல்களை அவனால் நிதானமாக ரசிக்க முடியவில்லை. துக்கம் ததும்பும் கதைகளை வாசிக்கும்போது அவன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறான்.

தான் எதற்காக யார் யாருக்காகவோ எல்லாம், வெறும் மாயைகளுக்கெல்லாம் கவலைப்பட வேண்டும்?

அவனைச் சூழ்ந்துள்ளவர்கள் தவறான வழியில் செல்லும் போது அவன் பொங்கி எழுகிறான்.

'இது எந்த வகையில் நியாயம்?'

என்று கேட்டு ஆத்திரத்துடன் கத்துகிறான். இதன் மூலம் எத்தனையோ பகைகளையும் சம்பாதித்துக் கொள்கிறான்.

'தான் இவ்வாறு ஏன் நடந்து கொள்ள வேண்டும்? அவர்கள் எப்படி நடந்தாலென்ன? நான் நலமாக நடந்து கொண்டால் போதாதா?'

என்று தன்னைத் தானே தடைபோட்டும் பார்க்கிறான். சிலவேளைகளில், அத்தகைய மனிதர்கள் அந்த அநீதியான வழியில் நடப்பதன் மூலம் மிகவும் வசதியான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதைக் கண்டு தான் பொறாமைப்படுவதால் தான் அப்படிப் பொங்கி எழுகின்றேனோ?

என்று ஒரு கேள்வியையும் எழுப்புகிறான். மற்றைய கேள்விகளைவிட இந்தக் கேள்வி மூலம் தன்னைத் தானே ஒரு உலுக்கு உலுக்கிவிடுவதையும் உணர்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்படியும் இருக்கலாம்'

என்று அவனது அடிமன உணர்வுகள் விடை இறுக்கும்போது அவன் ஒரு நிமிடம் கூனிக் குறுகிவிடுகிறான்.

மற்றவர்களுக்கு அவன் தன்னாலான உதவிகளைச் செய்யத் தயாராய் இருக்கிறான். எப்பொழுதும் அவன் அப்படிச் செய்தும் வருகிறான். ஆனால் அவனது உதவிகளை எதிர்பார்த்து அது கிடைப்பதாலேயே தமக்கு வேண்டிய மிகச் சிறிய வசதிகளைக் கூடச் செய்து கொள்ளாமல் அவனிலே தங்கி வாழ முயற்சிக்கின்ற அயலவர்களைக் கண்டு அவன் சீறி எழுகிறான்.

அவன் தான் செய்கின்ற உதவிகளை, பயன்கருதாது செய்கின்ற கர்மயோகமாக்கிப் பெருமை பாராட்ட நினைப்பதில்லை. தான் செய்கின்ற உதவிகளுக்காக - தனக்கொரு தேவை ஏற்படும்போது மற்றவர்களும் ஓடோடி வந்து உதவ வேண்டுமென்று அவன் எதிர்பார்க்கிறான். அந்த எதிர்பார்ப்பு முற்றிலும் நியாயமானதாகவே அவன் பரிபூரணமாக நம்புகின்றான்.

ஆனால், அத்தகைய சந்தர்ப்பங்கள் நேரும்போது தனக்கு மிகுந்த ஏமாற்றமே விளைவதை அவன் உணர்கின்றான். தான் எதிர்பார்ப்பது போலத் தனக்கு உதவி புரிவதற்கு மற்றவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை - தனக்குக் கைமாறு புரிவதற்கு அவர்கள் காத்துக்கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டபோது அவன் தன்னைச் சமநிலைப்படுத்த முடியாமல் தவிக்கிறான்.

அவன் தனது ஆசாபாசங்கள், விருப்பு-வெறுப்புக்கள் யாவற்றையும் மற்றவர்களிடம் வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்கிறான். தனக்கென்று எந்த ஒரு இரகசியத்தையும் அவன் வைத்துக்கொண்டதில்லை. அவனது செய்கைகள் யாவுமே வெளிப்படையான நடைமுறையாகவே இருக்கிறது. தனது ஒவ்வொரு செயலையும் தன் நண்பர்களுடன் கலந்துகொண்டே செய்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலவே தனது அயலவர்கள், நண்பர்களின் செய்கைகளும் இருக்கவேண்டுமென அவன் எதிர்பார்க்கிறான். அவர்களுக்குள் எந்த ஒரு இரகசியத்தையும் வைத்திருக்காமல் தன்னோடு கலந்து பேசியே அவர்கள் தமது செயல்களைச் செய்யவேண்டுமென அவனது உள்ளம் பேராசையினால் துடித்தது.

தனது காதலன் தன்னிடம் பூரணமாகச் சரணாகதி அடைய வேண்டுமென விரும்பும் இளம் காதலியைப் போல அவன் நிறைய எதிர்பார்ப்புக்களோடு நட்புக்களை வளர்த்தான். ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் பல இரகசியங்களைப் பொதிந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது அவனது உள்ளம் உடைந்து சிதறுகிறது.

அவர்கள் தமது வாழ்க்கையைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தமது வசதிகளை மட்டும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமது மகிழ்ச்சிக்காக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவன் அப்போதுதான் புரிந்து கொள்கிறான்.

தான் மாத்திரம் எதற்காக இந்த உலகம் பூராவையும் தனக்குள் சிந்திக்க வேண்டும். மற்றவர்களுக்காகத் தான் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்களுக்காகத் தான் ஏன் கோபப்பட வேண்டும்? அவர்களைப் பற்றித்தான் ஏன் சிந்திக்க வேண்டும்?

அவனது இதயத்தில் குமுறி எழுகின்ற, விடைகாண முடியாத வினாக்கள்.

அவற்றிற்கு விடை கண்டாக வேண்டுமென்ற சிரத்தையும் இப்போது அவனுக்கு இல்லை.............

ஆனால், அவன் கேள்விகளைப் பிறப்பிக்கிறான். முடிவில்லாமல் சிந்திக்கின்றான். மௌனத்தில் ஆழ்கிறான், இப்போதெல்லாம் அந்த மௌனம் தான் அவனது மொழி.

அவன் அளவுக்கு அதிகமாக ஆசைப்பட்டான்: ஆனால், மிகக் குறைவாகவே பெற்றுக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அளவில்லாத எதிர்பார்ப்புக்களோடு வாழ்க்கையை நகர்த்தினான். ஆனால், அதிக ஏமாற்றங்களையே சந்தித்தான்.

அவன் இலட்சியக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டான். அத்தகைய ஒரு இலட்சிய வாழ்க்கையை நிதர்சனமாக வாழலாம் எனக் கனவு கண்டான். ஆனால் அது தவறான நினைவு என்று புரிந்து கொண்டான்.

அவனது எதிர்பார்ப்புக்கள் நொறுங்கியபோது வாழ்க்கையை மெல்ல உணர ஆரம்பித்தான்.

வாழ்க்கை என்பது என்ன என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

கேள்விகள் பிறந்தன. சிந்தனைகள் வளர்ந்தன. மௌனம் மலர்ந்தது. வாழ்வின் சகலத்தையும் துறந்து இந்த மௌனத்தில் ஆழ்ந்தாலென்ன என்று நினைத்தான்.

ஒன்றில், மற்றவர்களின் தவறுகளை மன்னித்து-அவர்களின் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் வாழவேண்டும். அல்லது, தானும் மற்றவர்கள் போலவே, சுய நலமும், ஒடுங்கிய மனப்பான்மையும் கொண்டவனாக வாழவேண்டும். இடைப்பட்ட தரத்தில்-மனிதன் என்ற மனிதனாக, மனிதத்தை நேசித்து வாழ முடியாதோ என்று ஏங்கினான்.

மௌனம் தொடர்கிறது. அவனை சில சக்திகள் இந்த உலக வாழ்க்கையில் இழுத்துக் கொண்டிருக்கின்றன. சில கடமைகள் அவனுக்காகக் காத்திருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டு அவன் மௌனத்தில் ஆழ்ந்துவிட முடியுமா? எப்படியாவது இந்த மனித உருவங்கள் மத்தியில் மனிதனாக வாழ்ந்தேயாக வேண்டும். அவனது மௌனம் கலைகிறது, அர்த்தமுள்ள அந்த நீண்ட மௌனத்தின் முடிவில் ஒரு புதிய வாழ்க்கை மலர்கிறது.

மல்லிகை ஜனவரி 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பு

போகத்தான் வேண்டும்.

போகாமலிருப்பது சரியில்லை.

ஆனால், எப்படிப் போவது? எந்த முகத்துடன் அவளைப் பார்க்க முடியும்? அவளுடைய இழப்பு எத்தகையது? இலகுவில் சமநிலைப்பட முடியுமா?

இவனாலேயே அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது. கேட்டவுடன் திகைத்துத் தடுமாறியது மட்டுமல்லாமல் இன்று இத்தனை நாட்கள் கழிந்துவிட்ட பிறகும் கூட இன்னும் சமநிலையடையாமல் தவிக்கிறான்.

அவள் கணவன் இறந்து விட்டான்.

சாகிற வயதா அது? அல்லது சாக வேண்டிய மனிதனா அவன்?

மரணம் என்பது சாஸ்வதமானது தான். யாரைத்தான் மரணம் விட்டு வைக்கிறது?

ஆனாலும் கண்ணுக்கு முன்னே மரணத்தைக் காணும் போது நெஞ்சு பகீரென்கிறதே?

அவள் யார்? அவன் தான் யார்? இவனுக்கு அவர்கள் என்ன வேண்டும்?

வெறும் நண்பர்கள். அவ்வளவு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தான் யாருக்கு உறவு?

எல்லோரும் இந்த வாழ்க்கைப் பயணத்தில் வழிப் போக்கர்கள் தானே! வழித் துணை ஒன்று தவறி விட்டால் பயணம் நின்று விடுகிறதா?

விரக்தி கலந்த கைத்துப் போன சிரிப்பு ஒன்று இவன் உதட்டில் நெளிகிறது.

ஓ! இந்த மரணத்தின் சக்தி தான் என்னே!

எல்லோரையும் தத்துவ விசாரம் செய்ய வைத்து வேதாந்தம் பேச வைக்கிறது. அயலில் இன்று நடந்த மரணம் நாளை எனக்கும் நடக்கலாம் என்ற எண்ணம் எத்தனை விதமான சிந்தனைகளை ஏற்படுத்துகிறது.

மரணத்தைப் பற்றி நினைக்கின்ற பொழுது, மிக அருகிலே நிகழ்ந்த மரணம் -

நிகழ்ந்து பல நாட்கள் கழிந்து விட்ட பிறகும் கூடத் தனக்குள் ஏற்படுத்துகின்ற வேதாந்த நினைவுகளை விலக்க முயன்றபடி அவன் மெல்லச் செலுத்தினான் சைக்கிளை.

அங்கு போய்ச் சேர்வதை எப்படியாவது தாமதப்படுத்தி விடுவது என்று நினைத்தது போல, அவன் மெதுவாக- மிக மெதுவாக சைக்கிளை நகர்த்திக் கொண்டிருந்தான்.

செத்தவீடு நடந்தபோது அவன் ஊரில் இல்லை. அறிந்த உடன் தந்தி ஒன்றை அனுப்பியிருந்தான். ஊர் வந்தும் நான்கு நாட்கள் கழிந்து விட்டன. செத்த வீட்டிற்குப் போய்த் துக்கம் விசாரிக்க வேண்டியது ஒரு கடமை.

அக்கடமை சம்பிரதாய பூர்வமானது மட்டும் தானா? தாங்கள் போவதன் மூலம் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றி விட முடியுமா?

ஆறுதல் கூறுவது, தேறுதல் சொல்வது, அனுதாபங்களைத் தெரிவிப்பது, துக்கம் விசாரிப்பது இவையெல்லாம்கூட அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருப்பவர்களுக்கு எவ்வளவு தூரம் பயன் கொடுக்கக் கூடும் என்று தனக்குள் கேட்டுக் கொள்ளுகிறான்.

வயது போய் - பிறருக்குப் பாரமாய் இருந்தவர்கள், பாயிலே படுத்து நோயென்று கிடந்து அழுந்தியவர்கள், வாழும் போதெல்லாம் மற்றவர்களை வதைத்தவர்கள், இவர்களுக்கெல்லாம் மரணச் சடங்குகள் நடக்கின்ற வேளையில் அத்தகைய சம்பிரதாயங்களெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக - தேவையானவையாக - அவசியமானதாக - இருக்கலாம்.

ஆனால்,

இதோ இதோ என்று நேற்று வரையும்,

இல்லை... இல்லை...

இன்று வரையும்,

இப்போது, இந்தக் கணம் வரை, எமக்கு முன்னே இருந்தவர்கள் எம்மோடு கலந்துறவாடிக் கொண்டிருந்தவர்கள்... திடீரென்று இல்லாமல் போய் விடுகிறபோது............

கண்ணை மூடிக் கும்பிட்டுக் கொண்டிருந்து விட்டுக் கண் விழிக்கையில் விளக்கு அணைந்து போய்ப் புகைந்து கொண்டிருப்பது போல...

நினைவுச் சரங்களாக.... நிழற் புகைகளாக.... கண்களைக் கரகரக்க வைத்துக் கொண்டேயிருக்கின்ற பொழுது....

இந்த சம்பிரதாயங்கள் கேலிக் கூத்துக்கள் போல ஆகிவிடாதா...?

அவனுடைய சைக்கிள் முற்றாகவே இயக்கத்தை நிறுத்தித் தானாகவே அவர்களின் வீட்டிற்கு முன் நின்று கொண்டிருந்தபோது இவன் சுயநினைவிற்கு வந்து.........

திடீரென்று சைக்கிளைத் திருப்பிக் கொண்டு தன் வீட்டிற்கே திரும்பிப் போய் விட்டாலென்ன என்றொரு தீவிரமான உறுத்தலுடன் காலூன்றி நிற்கிறபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளேயிருந்து ஒரு சிறுவனின் குரல்....

அந்த நண்பனின் பாலகனின் குரல் காதில் விழுகிறது.

அவன் எப்படி இந்தத் தந்தையின் இழப்பைப் புரிந்து கொள்ளப் போகிறான்?

அவனுக்கு இதை எப்படி அந்த இளம் தாய் புரியவைக்கப் போகிறாள்.

அவள் இப்போது எப்படியிருப்பாள்?

வெட்டிச் சரித்து விட்ட தென்னங் குருத்தாக,

பூவும் பொட்டும் இழந்து வாடிய முகத்தோடு....

ஓ! விதியே! நீ எத்தனை கொடியவன்!

அந்த முகத்தைப் பார்த்து எதனைக் கதைப்பது?

துக்கம் விசாரிக்கப் போகிறவர்களெல்லாம் அவனைப் பற்றி — அவனுடைய குணநலன்கள் பற்றி, அவனுடைய தோற்றப் பொலிவு பற்றி, அவனுடைய அமைதியான போக்கைப் பற்றி, யாருக்கும் உதவி செய்யும் அந்த மனப்பான்மை பற்றி, மிதித்த இடத்தில் புல்லும் சாகாது என்ற பழமொழியை உதாரணம் காட்டிப் பேசும் போதெல்லாம்,

அவளுடைய அந்த மென்மையான புண்பட்ட இதயத்தில் நகத்தினால் கீறிக் குருதி வடியவும் கண்களில் நீர் வடியவும்.....

அவனுடைய இறப்பைப் பற்றி, அதற்குக் காரணமான நோய்களைப் பற்றி விசாரணைகள் செய்ய...

கடைசி நேரத்தின் அந்தப் புனிதமான துயரம் நிறைந்த கணங்களைப் பற்றிய வர்ணனைகளை அவள் வாயிலிருந்து கிளறிக் கிளறி............

காற்றூதிய பலூனை ஓரிடத்தில் அமுக்க இன்னோரிடத்தில் பிதுங்கி வெளித் தோற்றுவது போல....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசீகமான தனது இதய அந்தரங்கத்தினுள் அவள் புதைக்கும் தோறும் அதைக் கிளறி மேலே கொண்டு வந்து,

இத்தனையும் அவசியம் தானா?

நினைவுகள் கண்ணீரைச் சுரக்கு மென்றாலும்,

அவற்றை மறதிப் போர்வையுள் அழுத்தி வைக்க முடியுமானால்....

இவன் அங்கு போகவேண்டியதன் அவசியத்தை இவன் மனைவி வலியுறுத்திக் கூறியிருந்தாள். சமூக மட்டத்தில் ஏனைய பார்வையாளர் மத்தியில் நாங்கள் நாடக மாந்தராக இருக்கின்ற காரணம் மட்டுமல்லாமல்,

தனது துயரத்தில் பங்கு கொண்டு தனக்கு ஆறுதல் சொல்லத் தனக்கும் சிலர் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை அவளுக்கு இப்போது இவர்கள் கொடுக்க வேண்டுமல்லவா?

இதயம் நிரம்பிய துயரம் ஏதாவது வடிகாலினூடாக வெளிப்பட்டுத் தானே ஆக வேண்டும்.

புண்ணைக் கீறி நோ வரச் செய்துதான் மருத்துவம் செய்கிறார்கள்.

போகாமல் விடுவதால் இவையெல்லாம் சாத்தியமா?

இவனையும் மனைவியையும் விருந்தாட வரும்படி அவர்கள் அழைத்த அழைப்பு இன்னமும் நிறைவேற்றப்படாமல் இனியும் ஒரு போதும் நிறைவேற்றப்பட முடியாத ஒன்றாகக் காற்றில் கலந்து விட்ட பிறகு... இருவருமே இணைந்து போய் இந்தத் துயர நாடகத்தில் கலந்து கொள்ள முடியுமா?.....

இவன் தன் மார்பை வருடித் தன் இதயக் கனத்தை இறக்க முயற்சித்தபடி மெல்ல நுழைகிறான்.

தந்தையின் இழப்பை - அந்த இழப்பின் பரிமாணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாத - இன்னும் புரிந்து கொள்ள முடியாத அந்தப் பாலகன் ஏதோ விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைக் காணும் போது இவன் கண்கள் தாமாகவே கலங்குகின்றன. பேசாமல் நின்று விடுகிறான்.

சில கணங்களை அவன் நகர்த்திவிட்டு நிமிரும்போது அந்த நெற்றி....

அதன் வெறுமை....

அதன் கீழ் இரு குளங்கள்...

தனது புண்ணிற்குள் தானே விரல் நகத்தை நுழைத்துக் கொண்டாற் போல சிலிர்த்துக் கொண்டு.........

விழிகளைத் துடைக்கிறான் இவன்.

*வீரகேசரி 24-03-1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சீர்த்தாள்

யோகநாதக் குருக்கள் நொந்துபோய் உட்கார்ந்திருந்தார். அவரருகில் படுக்கையில் கிழித்துப்போட்ட நாராக அவர் மனைவி பங்கஜம் படுத்திருந்தாள். சோபையிழந்த அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த குருக்களுக்குக் கண்ணீர் பொங்கியது.

'இந்தப் பேதை என்ன பாவம் செய்தாளோ' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார், யோகநாதக் குருக்கள். 25 வருடங்களுக்கு முன் ஏழைமை, ஏழைமையுடன் சேர்ந்து கொண்டது. அந்தக் குக்கிராமத்தில் எந்த முன்னேற்றமோ வசதிகளோ இல்லாத சின்னஞ்சிறிய அந்தக் கிராமத்திலே யோகநாதக் குருக்களுடன் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கினாள் பங்கஜம்.

இந்த 25 வருடங்களும் சுரத்தின்றி நகர்ந்துவிட்டது. பிள்ளைச் செல்வத்தை ஏனோ தெய்வம் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அதுதான் போயிற்றென்றால் மற்றச் செல்வங்களாவது குவிந்து கிடந்தனவோ என்றால் அதுவும் இல்லை. ஏதோ அன்றாட வாழ்க்கை பிரச்சனையின்றி நடந்தது. அதற்கு அன்னை குறைவிடவில்லை.

அந்தக் கிராமத்தின் மத்தியிலே கோயில் கொண்டிருக்கும் மாரி அம்மனுக்கு நித்திய நைமித்திகங்கள் நிறைவேற்றுவதுதான் யோகநாதக்குருக்களின் பணி. நித்திய, நைமித்திகங்கள் என்று மரபுமுறைப்படி சொல்வதே அல்லாமல் அங்கு நைமித்திகங்கள் என்று குறிப்பிடும்படி விசேஷ உற்சவங்கள் எதுவும் இல்லை.

நித்தியம் காலை, மாலை விளக்கு வைத்து அபிஷேக ஆராதனைகளைச் செய்து அமுது செய்விப்பதோடு சரி. ஆனால் அத்தனையும் குருக்கள் அதிபக்குவமாக அபாரபக்தியுடன் செய்வார்

ஊரிலுள்ளவர்கள் அவ்வப்போது தங்களுக்கு ஏதாவது விசேஷங்கள் ஏற்படும்போதோ அல்லது நோய்நொடி கஷ்டங்கள் என்று ஏற்படும்போதோ மாரியம்மனிடம்தான் ஓடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் யோகநாதக் குருக்கள் கையிலும் ஏதாவது கிடைக்கும். அவருக்கென்ன பவுடர், சென்ற் போன்ற அநாவசியச் செலவுகளோ நாகரிக உடைகளுக்கான ஆடம்பரச் செலவுகளோ இல்லைத்தானே. உப்பு புளிக்கென்று அன்றாடத் தேவைகட்கு ஏதோ கிடைத்தால் சரி.

அரிசியும் காய்கறியும் அவ்வப்போது நடக்கும் புரோகிதங்களால் கிடைக்கும். இடையிடையே நடக்கும் வீட்டுக் கிருத்தியம் ஆட்டுத்திவசங்கள் அவருக்கு வேண்டிய நாலுமுழத்தையும் மேல் துண்டையும் மட்டுமல்லாமல் மனைவிக்கு வேண்டிய நூல் புடவைகளையும் கூடக் கிடைக்கச் செய்துவிடும். ஏதோ வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

நகரத்திலிருந்து மிகத் தொலைவிலுள்ள சின்னஞ்சிறிய கிராமம் அது. போக்குவரத்து வசதிகள் அவ்வளவாகக் கிடையாது. அக்கம் பக்கத்தில் அயல்கிராமம் என்றும் அதிகம் கிடையாது. ஒரு வகையில் தனித்து விடப்பட்ட ஒரு கிராமமாக அந்த மக்கள் வசித்து வந்தனர். அவர்கள் மத்தியிலும் குருக்களும் மனைவியும் மேலும் தனித்தவர்களாக உப்புச் சப்பில்லாத வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

உற்றார் உறவினர் என்று சொல்ல யாருமில்லை. பிள்ளை குட்டிகள் என்று பிறந்திருந்தாலாவது இன்றைக்கு வளர்ந்து பெரியவர்களாயிருந்து கொஞ்சம் உதவியாயிருப்பார்கள்.

'அம்மா தாயே எங்களை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்?'

நீண்ட பெருமூச்சுடன் தனக்குள் முனகியவாறு அம்பிகையை நினைத்தார் குருக்கள். அவருடைய பெருமூச்சின் தாக்கத்தால் கண் விழித்த பங்கஜம்மா மெல்ல விழிகளை அவர் பக்கம் பலவீனத்தோடு திருப்பிவிட்டு மூடுகையில் விழிக்கடையோரங்களில் நீர்திரண்டது.

குருக்கள் இந்த உலகில் இல்லை. அம்பிகையின் பாதங்களில் லயித்த அவர் உதடுகள் தியான சுலோகத்தை மெல்ல முணுமுணுத்துக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அருணமணி நிபாங்கம் அக்னி கேசம் கரண்டம் டமருக கரபாசம் கட்க ஹஸ்தம் கபாலம்.........'

அவரது மூடிய விழிகளினுள் கனத்துக்கிடந்த இருள் ஒளிமயமாகிறது. அருணமணி நிறம் பரவுகிறது. அம்பிகையின் அக்னி கேசம் சுடர் விடுகிறது டமருகம், கத்தி, பாசம், பாத்திரம் இவைகளை ஏந்திய கரங்கள் எழில் பொழிகின்றன. அம்பிகையின் திருவதனம் கருணையொளி பொலிகிறது.

'ஏன் தாயே இந்தப் பாராமுகம்? அறிவு தெரிந்த நாட்தொட்டு உன் பாதசேவையே செய்கின்ற எனக்கு இப்படிச் சோதனைகள் செய்யலாமா?'

இதயத்திலிருந்து எழுந்த அந்தக் கேள்வியின் முடிவில் கொக்கி போட்டு நிறுத்துகின்றது மனச்சாட்சி.

இன்னொரு மூலையில் அறிவின் செருமல். கீதாசாரியன் வந்து புன்னகைக்கின்றான்.

'ஏ ! மூடமானிடனே, அம்பிகையிடம் நீ என்ன வியாபாரம் செய்யவா பார்க்கின்றாய்? நீ அவளுக்குப் பணி செய்வதனால் உனக்குரிய விதியை மாற்றி எழுதிவிட முடியுமா? உன் கடமையை நீ செய்துவிடுகிறாய். அவ்வளவோடு அமைதியாக இரு! விதி தன் கடமையைச் செய்யட்டும். தீர்ப்பை அம்பிகை வழங்குவாள்'

பாமரத்தனமான வேண்டுதலின் தவறை உணர்ந்துகொண்ட குருக்கள் கன்னத்தில் போட்டுக்கொண்டபோது மறுபடி அவரை நோக்கிக் கலங்கிய கண்களைத் திருப்பினாள் பங்கஜம். இப்போது அவள் முகத்தைக் கனிவுடன் நோக்கினார் குருக்கள். பலவீனத்துடன் உதடுகளைப் பிரித்துச் சிரிக்க முயன்ற பங்கஜம் ஏதோ சொல்ல முயற்சிப்பதையும் குருக்கள் அவதானித்தார். ஆனால், வார்த்தைகள் தெளிவாக வரவில்லை. பிறகு இடதுகரத்தை மெல்ல அப்படியும் இப்படியுமாக மணியடிக்கும் பாவனையில் அசைத்தாள் பங்கஜம்.

பூஜைக்கு நேரமாகிவிட்டது என்பதை நினைவூட்டுகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புரிந்து கொண்ட குருக்கள் மௌனமாகத் தலையை ஆட்டுகிறார். பொழுது இருண்டுகொண்டு வருகிறது.

"தாயே எங்களுக்கொரு வழி காட்டு" என்று மறுபடியும் முணுமுணுக்கிறார் குருக்கள். அண்டசராசரம் முழுவதுக்கும் பிறவிப்பிணி போக்கும் மோட்ச தாயினியான அவள் ஒருத்தியைத் தவிர வேறெந்த வைத்தியரை அவர் அழைக்க முடியும்?

கிராமத்திலுள்ள ஒரேஒரு நாட்டு வைத்தியரும், ஒரே ஒரு ஆங்கில வைத்தியரும் கைவிட்டு விட்டனர்.

இனி? நகருக்குப் போவதென்றால் லேசான காரியமா? அதுவும் இந்நிலையில் பங்கஜம்மாவை எங்கும் எடுத்துச் செல்வது ஆபத்தானது என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

கடந்த பத்துப் பன்னிரண்டு நாட்களாகவே சுகவீனமுற்றிருக்கும் பங்கஜம்மாவுக்கு நாட்டு வைத்தியரின் மருந்துகள் பயன் தராமற் போகவே ஆங்கில வைத்தியர் வந்தார். அவரும் இயன்றளவு முயற்சித்து விட்டு இன்று கையை விரித்துவிட்டார்.

நகரத்திலுள்ள பெரிய டாக்டர்கள் யாராவது பார்க்கவேண்டும் என்று அவர் சொல்லிவிட்டார். யோகநாதக் குருக்கள் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த பணமும் பங்கஜத்தின் கழுத்திலிருந்த ஒரேஒரு நகையும் இந்தப் பத்துப் பதினைந்து நாட்களில் தீர்ந்து விட்டன.

இந்த நிலையில் ஊரில் உள்ள ஒரே வாகனமான மாணிக்கத்தின் காரில் நகருக்குப் போய்வருவதென்பது அவரால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. அதுவும் இப்போதைய பலவீனமான நிலையில் பங்கஜத்தைக் கூட்டிக்கொண்டு போக இயலாது என்று சொல்லிவிட்டார் டாக்டர். நகருக்குப் போய் யாராவது பெரிய டாக்டர்மாரை அழைத்துவர வேண்டும். இந்த இரவு நேரத்திலே இந்தக் குக்கிராமத்துக்குள் நுழைய யார் வரப்போகிறான்?

அதையும் விட அவசியமாகவும் அவசரமாகவும் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஊசி மருந்தை எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார் கிராமத்து டாக்டர்.

அதை வாங்குவதற்கும் நகரத்திற்குத்தான் போக வேண்டும். மருந்தின் விலையுமோ அதிகம் என்றும் அதை எப்படியாவது வாங்கி வந்தவுடன் தன்னிடம் வந்தால் தான் வந்து அதைப் போட்டுவிடுவதாகவும் சொல்லி விட்டார் டாக்டர்.

துன்பம் என்பது தனியாக வருவதில்லை. தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். செய்வதறியாது தவித்தார் குருக்கள். பங்கஜத்தின் உடலில் இருக்கின்ற மிச்ச சொச்ச உயிர் அம்பிகையின் பூஜை பற்றியும் குருக்களின் இயலாமை பற்றியும் எண்ணிக் கவலைப்பட்டுக் கண்ணீர் சிந்துவதற்குப் போதுமானது.

இப்போது எப்படியாவது நானூறு ஐந்நூறு ரூபா கையிலில்லாமல் எதுவும் செய்ய இயலாது. நம்பிக்கையான ஒரு நாலைந்து பேரிடம் போய்க் கடன் கேட்டுப் பார்த்து விட்டுக் கால்சோர்ந்துபோய்த்தான் திரும்பியிருந்தார் குருக்கள். கார்க்கார மாணிக்கத்திடமும் கெஞ்சிப் பார்த்துவிட்டார். குறிப்பிட்ட காசு தந்தாலல்லாமல் கார் வெளியில் எடுக்கமாட்டேன் என்றும் அவன் சொல்லிவிட்டான்.

இருள் சூழ்ந்தேவிட்டது பங்கஜம் மறுபடி பூஜையைப் பற்றிக் குருக்களிடம் நினைவூட்டினாள். ஒரு குப்பிவிளக்கை ஏற்றிக்கொண்டு வந்து வைத்தார் யோகநாதக் குருக்கள். கை, கால், முகம் கழுவிக்கொண்டு சந்தியாவந்தனத்தையும் முடித்துக்கொண்டு புறப்பட்டார். புறப்படுமுன் கொடுக்கவேண்டிய மருந்துகளைக் கொடுத்தார்.

“அம்பிகே, பூஜை முடிந்து வரும்வரை இவளைப் பார்த்துக்கொள” தோன்றாத் துணையிடம் வேண்டிக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு தியானத்தைச் சொல்கிறார்.

“அருணமணி நிபாங்கம் அக்னி கேசம்.................

சட்டென ஒரு நினைவுப்பொறி மூடிய விழிகளின் இருட் திரையில் ஒரே பொன்ஒளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே இப்போது அருணமணி நிறமோ அக்னி கேசமோ தெரியவில்லை. அம்பிகையின் கருணை முகம் தெரியவில்லை. அம்பிகையின் மார்பகம் மட்டும் அவர் கருத்தில் தெரிகிறது. அவர் கைகள் பக்குவமாகச் சாத்திய பட்டுத் தாவணியை அவரது நினைவுக் கரங்கள் மெல்ல விலக்குகின்றன.. அங்கே..................

அழகான இரு அமுத கலசங்களையும் தழுவியபடி பொன்னொளி வீசிக்கொண்டிருந்தது ஒரு தாலி.

அம்பிகையின் மார்பகமும் மறைந்து அந்தத் தாலி மட்டும் பூதாகாரமாக அவர் முன் விஸ்வரூபமெடுத்து ஒளிவிட்டது.

பங்கஜத்தின் மென்மையான இருமலின் ஓசையில் மூடிய கண்களைத் திறந்தார். பங்கஜத்தின் கழுத்தைச் சுற்றிக் கிடந்த மஞ்சட் கயிற்றில் தொங்கியபடி அவரை நோக்கிக் கண் சிமிட்டியது தாலி. மருந்தின் தாக்கத்தில் அயர்ந்து தூங்குகிறாள் பங்கஜம். மறுபடியும் கண்களை மூடினார் குருக்கள்.

அம்பிகை அங்கே இல்லை.

அந்தத் தாலி ஒளிவிட்டது.

ஆம்! அதைத் தவிர வேறு வழிஇல்லை. பூஜை முடிந்தவுடன் அதை எடுத்துக்கொண்டு வந்துவிட்டால்.....

எப்படியாவது மாணிக்கத்திடம் கெஞ்சிக் கேட்டுக் காரைப் பிடித்துக்கொண்டு நகரத்திற்குப் போய் எல்லா அலுவல்களையும் முடித்துவிடலாம்.

'அம்பிகே! என்னை மன்னித்துவிடு! வேறுவழி எதுவும் தெரியவில்லை. இப்போது உன்னைத் தியானிக்கும் போது அந்தத் தாலியை நினைவூட்டியவள் நீதானே. இதுதான் நீ காட்டும் வழியா?'

திடீரென மனச்சாட்சியின் அதட்டல்.

'மூட மனிதனே ! நீயாக எடுத்துக்கொள்ளும் தீய முடிவுகளை அம்பிகையின் வழிகாட்டலாக எடுக்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அவசரம் வந்தாலும் அம்பிகையின் தாலியைக் கழற்றுவது பாபம். குற்றம் குற்றமே'

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடிக் கோயிலைச் சுற்றி நடக்கிறார் குருக்கள்.

மனச்சாட்சி கதறுகிறது.

குடும்ப பந்தம் துடிக்கிறது.

கைகள் பூஜைக் கைங்கரியங்களைச் செய்கின்றன. உதடுகள் மந்திரங்களை முணுமுணுக்கின்றன. அபிஷேக நீரைக் குடத்தில் ஏந்தியபடி அம்பிகை அருகில் வந்தார். தாவணியை நீக்கிவிட்டு அபிஷேகம் செய்கிறார்.

"ஸ்ரீ மாதா ஸ்ரீ மஹாராஜ்ஞீ ஸ்ரீமத் ஸிம்மாசனேஸ்வரி"

லலிதா ஸகஸ்ர நாமத்தை வழக்கப்படி உதடுகள் சொல்கின்றன. கண்கள் அந்தத் தாலியிலேயே நிலைத்திருக்க அந்தக் குடத்து நீர் முழுவதையும் அந்தத் தாலிக்கே அபிஷேகம் செய்து விட்டதையும் அம்பிகையின் சிரசு ஈரம்படாமலே இருப்பதையும் உணர்ந்து கன்னத்தில் போட்டுக் கொண்டார். மறுபடி அபிஷேகம் செய்வதற்காக நீர் எடுத்து வந்தார்.

'அம்மா எனக்கு நல்ல புத்தியைத் தா!'

அபிஷேகம் பண்ணி ஈரம் துவட்டிப் பட்டுச் சாத்தி அலங்கரித்துப் பூஜையைத் தொடங்கினார் யோகநாதக் குருக்கள்.

இதயத்தில் நச்சு விதையூன்றி எண்ணம் முழுதும் கிளைபரப்பிவிட்ட அந்த விஷவிருட்சம் விழுதுகள் ஊன்றிப் பரந்தது.

'ஓர் உயிரைக் காப்பதென்பது எத்தனை மேலான காரியம். அது தெய்வ சம்பந்தமானதுதானே. இந்தக் கல்வடிவமாயிருக்கின்ற அம்பிகையின் கழுத்தில் வெறுமனே இந்தத் தாலி பாரமாகக் கிடப்பதை விட, ஊசலாடிக்கொண்டிருக்கும் ஓர் உயிரைக் காப்பாற்றப் பயன்படுவது எவ்வளவு மேல்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கட்டம் போட்டுப் பெரிதாகச் சிரித்தது மனச்சாட்சி.

குருக்கள் நடுங்கினார்.

'முட்டாள் ! உயிரைக் காப்பது உன் கையிலா உண்டு. நீ இந்தத் தாலியைக் கொண்டு போவதால் மட்டும் உனக்கு மருந்து கிடைக்கிறது என்பதோ அல்லது டாக்டர் உடன்பட்டு வருகிறார் என்பதோ அல்லது அவரால் உன் மனைவியின் உயிர் காப்பாற்றப்படுகிறது என்பதோ எவ்வளவுதூரம் நிச்சயமானது? உயிர் வாழ்க்கை என்பது உன்போன்ற மானிடப் பதர்களின் கையில் இல்லை. அது விதியின் கை விளையாட்டு'

பூஜை முடிந்தது.

மனப்போர் தொடர்கிறது.

அந்தத் தாலியின் சரித்திரம் நினைவில் எழுகிறது.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பாக இருக்கலாம். அந்தக் கிராமத்து விவசாயி ஒருவர் அந்தத் தாலியுடன் அங்கு வந்தார்.

"ஐயா இண்டைக்கு என்ர மகளுக்குக் கலியாணம். அவளுக்கு வயசு முப்பத்திரண்டு. செவ்வாய்க் குற்றத்தால இவ்வளவு காலமும் கலியாணம் இழுபட்டுது. அதுக்குத் தக்கபடி இப்ப நல்ல பெரிய இடத்திலை நல்ல சம்பந்தம் வந்திருக்குது. எல்லாம் அம்பாளுடைய கருணைதான் ஐயா.

"அவள் ஒவ்வொருநாளும் மாலைகட்டி அம்பாளுக்குக் கொண்டந்து தந்தாள். இண்டைக்கு மணமாலையை அம்பாள் இவளுக்குத் தந்திருக்கிறா. இது எங்கடை நேர்த்திக்கடன். இதிலை ஒரு தங்கப்பவுண் தாலி இருக்குது. இரவு ஏழுமணிக்கு என்ரை மகளின்ரை கழுத்திலை தாலி கட்டுற அதே நேரம் அம்பாளின்ரை கழுத்திலை இதைக் கட்டி விடுங்கோ ஐயா. இது அம்பாளின்ரை கழுத்திலை இருக்கும் மட்டும் என்ரை மகளுக்கு ஒரு குறையும் வராது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னபடி அந்த நல்லநாளில் அம்பிகையின் கழுத்தில் குருக்கள் அந்தத் தாலியைக் கட்டினார்.

இன்று........

விளக்குகள் யாவும் அணைத்துக் கதவும் பூட்ட ஆயத்தம். வந்திருந்த இரண்டொருவரும் போய்விட்டனர்.

தன்னந்தனிமை.

குருக்கள் மட்டும் தனித்து நின்றார்.

இல்லை அம்பிகையும் நிற்கிறாள்.

ஆனால் வெறும் கல்லாக, குரல் அற்ற உருவம்.

இன்னொரு நபரும் அங்கே பூதாகாரமாக, ஆனால் உருவமற்ற குரலாக.......

அதுதான் குருக்களின் மனச்சாட்சி.

அம்பிகையின் முன்னே ஒரு சின்னஞ் சிறு தூங்கா மணிவிளக்கு இருளின் ஆட்சியை எதிர்த்துப் போராடுகிறது.

குருக்களின் மனச்சாட்சியைப் போல!!

அம்பிகையின் அருகில் வந்தார் குருக்கள்.

"இது அம்பாளின்ரை கழுத்திலை இருக்குமட்டும் என்ரை மகளுக்கு ஒரு குறையும் வராது!"

அந்தக் கருவறை சிதறும் வண்ணம் ஓங்கி ஒலித்த அந்தக் குரலைத் தாங்கமாட்டாமல் காதுகளைப் பொத்தினார் குருக்கள்.

அம்பிகையின் கழுத்தை நோக்கி நீண்ட கரங்கள் அவள் பாதங்களை நோக்கித் தாழ்ந்தன. தொங்க விட்டிருந்த அம்பிகையின் இடது பாதம் அவர் கைகளுக்கு எட்டின. தொட்டு வணங்கினார்.

மனச்சாட்சி உரத்த குரலிலே வினா எழுப்பியது?

'உன் மனைவியின் கழுத்திலே ஒரு தாலி இருக்கிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை எடுத்துக் கொள்ளலாமே. அதுவும் ஒரு தங்கப்பவுண் அல்லவா?'

உள்ளமும் உடலும் ஒருங்கே கூசியது குருக்களுக்கு.

'நான் தொட்டுக் கட்டியதாலியை நானே அறுப்பதா? எத்தனை ஈனத்தனமானது'

நேரம் போய்க் கொண்டிருக்கிறதே. மனப் போராட்டமும் கருவறையின் வெக்கையுமாகக் குருக்களை வியர்க்க வைத்து அவரைத் தெப்பமாக்கி விட்டன. மனைவியின் நிலை என்னவோ தெரியாது. அவளுக்கு யாருமே துணையில்லை. விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

முடிவென்ன முடிவு?

எதற்குமே நேரமில்லை. பக்தி, நேர்மை, நீதி, சட்டம் இவையெல்லாம் பந்தபாசத்தின் முன் எம்மாத்திரம்?

அதுதான் வென்றது.

'நான் தொட்டுக் கட்டிய தாலியை நானே அறுப்பதா? என்று சற்று முன்கேட்டாயே. இப்போது நீ அறுத்துக் கையில் வைத்திருக்கும் தாலியைத் தொட்டுக் கட்டிய மகாபாவி யார்?'

மனச்சாட்சி கேள்வி பிறப்பிக்கும் போது குருக்கள் தாலியைக் கையில் ஏந்தியபடி திரும்பினார்.
திரும்பிய வேகத்தில் தூண்டாமணி விளக்கில் அவர் கரம் தட்டுப்பட

அந்தச் சின்னஞ் சிறிய ஒளிச்சுடர் துடிதுடித்து மறைந்தது.

கும்மிருட்டு.

இருட்டில் மனச்சாட்சியும் உறங்கிவிட்டதா?

விளக்கை மறுபடி ஏற்றுவதற்காகத் தீப்பெட்டியைத் தேடிக் குருக்களின் கரங்கள் துளாவித் தோற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தகாரத்தின் ஆட்சியில் ஒளியைத் தேடிப் போராட அவருக்குச் சக்தியில்லை. நேரமும் இல்லை.

கையில் தாலியுடன் வீட்டைநோக்கி விரைந்தார் குருக்கள்.

வீட்டில் மினுமினுக்கும் ஒரே குப்பி விளக்கும் காற்றின் அகோரத்தில் உயிரை விட்டிருந்தது. அவசர அவசரமாகப் "பங்கஜம்" என்று அழைத்தவாறு உள்ளே நுழைந்தார்.

அந்தக் குரல் ஏன் அப்படி நடுங்கியது என்று அவருக்கே புரியவில்லை.

அவசரமாக விளக்கை ஏற்றினார். பங்கஜத்தைப் பார்த்தார்.

ஒரு கையால் நெஞ்சை அமுக்கிப் பிடித்தபடி மறுகையால் தாலியைக் கழற்றிக் கண்ணில் ஒற்றியபடி அசையாமல் கிடந்தாள் பங்கஜம்.

"பங்கஜம்" என்று துடிப்போடு மறுபடியும் அழைத்த குருக்கள் அருகில் சென்று அவள் கரங்களைப் பற்றினார்.

சூடு இறங்கிக் கொண்டிருந்தது. அவசரமாக அவள் வாயில் பாலை வார்த்தார். கடைவாய் வழியே வழிந்தது பால்.

அவர் அங்கே வைத்திருந்த அம்பிகையின் தாலிக்கு அபிஷேகம் செய்தது.

வேதனையின் தாக்கம் எதுவுமின்றிப் பூர்ண சௌந்தர்யத்துடன் பொலியும் பங்கஜத்தின் முகத்தில் அம்பிகை சிரிப்பதை யோகநாதக் குருக்கள் கண்டார்.

*வீரகேசரி 04-03-1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை!

பஸ் இருபாலைச் சந்தியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவன் ஜன்னலூடாகச் சரிவான ஒரு தொலைப் பார்வையை எறிகிறான். தூரத்தில் அந்தப் பெண் நிற்பது தெரிகிறது. எனவே அந்தக் குழந்தையும் அருகில் நிற்க வேண்டும்.

கண்கள் மெல்லச் சுழன்று பஸ்ஸிற்கு காத்திருந்த அந்தக் கூட்டத்தினரைச் சுற்றி விட்டு ஏமாற்றத்துடன் மறுபடியும் அந்தப் பெண்ணில் நிலைக்க-

பஸ் சந்தியில் வந்து நின்றது.

திமுதிமுவென அடிபட்டுக் கொண்டு ஆட்கள் பஸ்ஸினுள் ஏறி நுழைகின்றனர். இவன் மெல்லத் தலையைப் பின்னே திருப்பி ஜன்னலூடாகப் பின் பக்க வாசலில் ஏறுகின்றவர்களை நோட்டம் விட்டான்.

அங்கே அந்தக் குழந்தை இல்லை. அந்தப் பெண் மட்டும் ஏறுகிறாள்.

ஏதோ ஒரு தவிப்போடு இவன் அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அவள் அருகில் அந்தக் குழந்தையை வழமையாகப் பிடித்தபடி வருகின்ற அவள் கையில் உள்ள அந்த வெறுமையைப் பார்த்தபடி அவள் முகத்தில் இவன் விழிகள் இலயித்த போது அவள் விழிகள் ஒருகணம் இவனது பார்வையைச் சந்தித்து மீள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அழகிய கருவிழிகளில் ஒரு கலக்கம் இருப்பது போல இவனுக்குத் தோன்றுகிறது.

முகம் வழமையான கலகலப்பும் பிரகாசமும் இல்லாமல் கவலை தோய்ந்திருக்கிறதோ?

அல்லது வெறும் பிரமையோ?

எப்படி இருந்தாலும் இன்றைக்கு இவன் இத்தனை சிரமங்கள் எடுத்ததெல்லாம் வீணாகிவிட்டதே! அந்த அழகிய குழந்தையின் தரிசனம் இன்று இவனுக்குக் கிடைக்க வில்லையே.

ஒவ்வொரு தடவையும் சுவீப் டிக்கெட் எடுத்து-

இந்த முறை எப்படியும் விழும் என்ற நம்பிக்கையோடு காத்திருந்து-

பத்திரிகையில் முடிவைப் பார்க்கிற பொழுது மனமெல்லாம் சோர்ந்து போகக் கைகளிலிருந்து சுவீப் டிக்கெட் தானாகவே கிழே நழுவுவது போல-

இப்போது இவனது மனமெல்லாம் சோர்ந்து கைத்துப் போனது.

'இன்று பிரயாணத்தைக் கைவிட்டு மறுநாள் புறப்பட்டால் என்ன?'

என்று ஓர் எண்ணம் மனத்தின் ஒரு மூலையில் எழுகின்ற போதே இன்னொரு மூலையில்

'ஏன் இப்படி ஒரு விசர்த்தனமான எண்ணம் எனக்கு இப்போது எழுகின்றது?'

என்று ஒரு கேள்வியும் எழுகின்றது.

'ஒரு குழந்தைக்காக, அதைக் காண்பதற்காக ஒரு பிரயாணத்தைத் தள்ளிப் போட வேண்டுமா? என்ன பைத்தியக்காரத்தனம் இது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைக்கிற போது சிரிப்பும் வருகிறது. உதடுகள் மெல்லப் பிரிந்து புன் சிரிப்பு நெளிந்தபோது தன்னுணர்வு பெற்றவனாகச் சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான். மெல்லத் திரும்பி அந்தப் பெண்ணை - குழந்தையின் தாயை நோக்குகிறான். அவள் இரண்டு ஆசனங்களுக்குப் பின்னால் வலப்புற ஜன்னலருகில் இருக்கிறாள்.

அவள் முகத்தில் ஏதோ ஒரு சோகம் கப்பி இருக்கிறதோ?

ஒருவேளை அந்தக் குழந்தைக்கு ஏதாவது நடந்திருக்குமோ?

'ஏதாவது விபத்தில் சிக்கி....?'

ஐயோ, நினைக்கவே நெஞ்சினுள் ஏதோ அடைப்பது போன்ற உணர்வு.

'அப்படி ஏதும் ஆகிவிட்டிருக்காது.'

'ஒரு வேளை ஏதும் சுகவீனமோ?'

என்று பல விதமான எண்ணங்கள் புரண்டன.

'எனக்கும் அந்தக் குழந்தைக்குமிடையில் என்ன தொடர்பு? எதற்காகத் நான் அந்தக் குழந்தையைப் பற்றியே எண்ண வேண்டும்?'

என்று இவன் தனக்குள் ஒரு முறை விசாரனை செய்து கொண்டு அதற்கு விடை காண முடியாமல் - காண வேண்டிய அவசியமும் இல்லாமல் கவனத்தை வேறு திசையில் திருப்ப முயன்றான்.

பஸ் இப்போது முத்திரைச் சந்தையைத் தாண்டி நல்லூரை நெருங்கிக் கொண்டிருந்தது. இவன் நேரத்தைப் பார்க்கிறான். ஏழரை மணியாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் பதினைந்து நிமிடத்தில் இவன் போக வேண்டிய மட்டக்களப்பு பஸ் புறப்பட்டு விடும். அதில் நிற்பதற்காவது இடம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக இவன் இந்த பஸ்ஸில் போகாமல் அதிகாலை 'யாழ் தேவி'யில் போவது தான் வழக்கம். 'யாழ் தேவி' என்றால் அதிகாலை எழுந்து அவதி அவதியாகப் புறப்பட வேண்டும். பஸ்ஸில் போகலாம் தானே என்று அம்மா சொன்னாலும் இவன் வேறு பல வசதிகளை முன்னிட்டு 'யாழ் தேவி'யில்தான் போவான்.

ஆனால், இம்முறை இவன் பஸ்ஸில்தான் போகிறேன் என்று சொன்ன போது அம்மாவுக்கு ஆச்சரியம். ஏன் என்று கேட்கவில்லை. கேட்டிருந்தாலும் இவன் சொல்லியிருக்க மாட்டான். ஒரு சிறு குழந்தையின் தரிசனத்துக்காகத் தன் வழக்கத்தையே மாற்றுவது அவளுக்கு அதிசயமாக இருக்கலாம்.

புது வருடத்தையொட்டிச் சுமார் பத்து நாட்களுக்குமேல் லீவு கிடைத்ததில் ஊருக்கு வந்திருந்தான் இவன். ஐந்தாறு நாட்களுக்குமுன் ஒரு நாள் யாழ்ப்பாணம் செல்லும்போது பஸ்ஸில் இருபாலைச் சந்தியில் சனக் கூட்டம் ஏறியது. அப்போது இவனருகில் ஓர் அழகிய இளம் பெண் வந்து நின்றபோது இவன் திரும்பினான். கண்கள் அவளில் ஊர்வதற்கிடையில் அவள் கைகளைப் பற்றியபடி மிரட்சியுடன் நின்று கொண்டிருந்த சிறு பெண்குழந்தை இவன் கண்ணில் பட்டது.

பார்வையின் தன்மை மாறியது. தாய்மை என்ற பொலிவு ஏற்படும் போது பெண்களை நோக்கும் பார்வையில் ஏனோ ஒரு மரியாதை பிறந்துவிடுகிறதல்லவா. அப்படி ஒரு புன்னகையை வீசி விட்டுக் குழந்தையைத் தன்னருகில் ஆசனத்தில் அமர்த்திக் கொண்டான். தயங்கிய குழந்தையைப் பார்த்து.

"யூ சிற் தெயர் பேபீ" என்று கூறி அமரச் செய்த அம்மா சனக் கூட்டத்தால் முன்னே நகர நேர்ந்தது. சற்றுப் பொறுத்து முன்னுக்கு ஓர் இடம் கிடைத்து அவள் உட்கார்ந்தபின் இரண்டொரு தடவை திரும்பிப் பார்த்துக் 'குழந்தை பத்திரமாக இருக்கிறாளா' என்று அவதானித்துக் கொண்ட போது, 'நான் என்ன குழந்தையைத் தவற விட்டு விடுவேனா?' என்று தனக்குள் இவன் சொல்லிக் கொண்டாலும் அவளது அந்தத் தாய்மை உணர்வையும் குழந்தை ஜன்னலூடாக வெளியே புதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து மகிழ்ந்து கொண்டபோதும் இடையிடையே 'அம்மா இருக்கிறாளா' என்று பார்த்துத் திருப்தியடைவதையும் கண்டு அந்த உன்னதமான பாசத்தைப்பற்றிச் சிந்தித்தபோது அம்மாவையும் குழந்தையின் அருகில் இருக்கவைத்துத் தான் எழுந்து நின்றிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான்.

குழந்தையுடன் ஏதாவது பேச ஆசைப்பட்டாலும் "எங்கே போறீங்க?" என்ற ஒரு கேள்வியுடன் நிறுத்திக் கொண்டு அதன் அழகை இரசித்தபடி (கண்ணூறு பட்டு விடக்கூடாது என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டு) தான் இறங்க வேண்டிய இடம் வந்ததைக் கண்டு இறங்க முற்பட்டான்.

"மாமா இறங்கப் போறன்" என்று குழந்தையிடம் சொல்லியவன் அம்மா ஆங்கிலத்தில் சொன்னது (யூ சிற் தெயர் பேபி) நினைவுக்கு வரத் தானும் அப்படிச் சொல்ல வேண்டும் என நினைத்து,

"அங்கிள் இஸ் கெற்றிங் டவுன். மம்மி இஸ் தெயர்" என்று சொல்லி விட்டு எழுந்தவன் குழந்தையருகில் யாரோ ஒரு பெண் அமர்வதையும் பார்த்துக்கொண்டு நடந்தான். அப்போது இவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுக் குழந்தையைத் திரும்பிப் பார்த்த அந்தத் தாயிடம்.

"பேபி இஸ் தெயர் வித் சம் லேடீஸ்" என்று சொல்லிக் கொண்டு இறங்கினான்.

அன்று மாலை இவன் திரும்ப வரும் போதும் அவர்கள் அதே பஸ்ஸில் ஏறினர். இவன் குழந்தையைப் பார்த்து ஓர் அறிமுகச் சிரிப்பை உதிர்த்த போது குழந்தை இவன் அறிமுகத்தை உணர்ந்து கொண்டதாகக் காட்டிய போதும் சிரிக்கவில்லை. குழந்தைத்தனமான ஒரு மிரட்சியுடன் அம்மாவை அணைந்து கொண்டது. அப்போது அவர்களுக்கு இடம் கிடைத்து விட்டதால் இவன் குழந்தைக்கு இடம் கொடுத்து அருகில் வைத்திருக்க முடியவில்லை.

மறு நாளும், இரண்டு தடவையும் இவன் அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையையும் தாயையும் சந்தித்தான். நிறைந்து வழியும் சனக் கூட்டத்திற்குள் அவர்கள் இருவரும் நெரிந்து கொண்டிருந்த போது இருபுறமும் நெடுக்குவாட்டில் நீண்டு கிடந்த சீற்களில் ஆண்களும் பெண்களுமாக நிறையப் பேர் அமர்ந்திருந்தனர்.

அந்தக் குழந்தை சங்கடப் படுவதைப் பார்த்தபோது

'யாராவது எழுந்து இடங்கொடுக்காவிட்டாலும் அந்தக் குழந்தையை மடியில் தூக்கி வைத்திருக்கவாவது தெரியவில்லையே'

என்று இவன் வெறுப்போடு சலித்துக் கொண்டான். டம்பப் பைகளைக் குழந்தை மாதிரி மடியில் வைத்து அணைத்தபடி அமர்ந்திருக்கின்ற பெண்களை இவன் வெறுப்போடு பார்த்த போது ஓடிச் சென்று அந்தக் குழந்தையை அணைத்துத் தூக்கிவந்து மடியில் வைத்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

ஆனால் அப்போது அவன் முன் வாசலுக்கருகில் அமர்ந்திருந்தான். அவர்களோ பின் வாசலருகில் நின்று கொண்டிருந்தனர்.

சற்று நேரத்தில் இடம் கிடைத்தது அவர்கள் உட்கார்ந்தார்கள். தாய் தன் மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு கையிலிருந்த பையையும் தூக்கி வைத்திருந்ததினால் குழந்தையின் முகம் மறைந்தும் மறையாமலும் தென்பட்டது. இவன் ஒருவித ஏக்கத்துடன் அந்த முக தரிசனத்துக்காகக் காத்திருந்தான்.

அதற்கிடையில் இருபாலைச் சந்தி வர அவர்கள் இறங்கிக் கொண்டார்கள். இறங்கும் போது அந்த அழகு நிலா இவனைத் திரும்பிப் பார்த்து விட்டு இறங்கிய போது அதில் தோன்றிய புன்னகை இவனுக்குத் திருப்தியளித்தது. ஆனால் அதே நேரம் அந்தத் தாய் இவனைப் பார்த்த பார்வையில் முறுவல் இல்லை. ஒரு வெறுப்பு இருந்ததுபோல் இவனுக்குத் தோன்றியது.

தன் குழந்தையைத் தினமும் இவன் பார்த்து மகிழ்வதை அவள் விரும்பவில்லையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணூறு பட்டுவிடுமென நினைக்கிறாளோ?

அந்த ஒரு கணத்தில் இவன் குழம்பிய போதும் அவை எல்லாம் தனது பிரமையாக இருக்கலாம் என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு அமைதியுற்றான்.

அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் புதுவருடக் கொண்டாட்டத்தில் கழிந்து விடுகின்றன. அதனால் பஸ்ஸில் யாழ்ப்பாணம் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அந்தக் குழந்தையை இன்னுமொரு தடவை பார்க்க வேண்டும். ஏதாவது பேச வேண்டுமென்று ஒரு விபரீத ஆசை - அற்ப ஆசை இவனுள் கிளர்கிறது. அதன் நிமித்தம் இன்றைய பிரயாணம் நேரம் மாற்றப்பட்டது.

ஆனால் இப்படி வந்தும் அந்தக் குழந்தையைக் காணமுடியவில்லையே என்று இவனுக்கு ஒரே ஏமாற்றம்.

ஒரு வேளை அன்றையதினம் தான் நினைத்தது போல இரண்டு மூன்று நாள் தான் ஆசையோடு பாத்த பார்வையில் அந்தக் குழந்தைக்குக் கண்ணூறு ஏற்பட்டு ஏதாவது ஆகியிருக்குமோ என்று கவலைப்படவும் செய்தான்.

நெஞ்சு படபடத்தது.

எப்படியாவது குழந்தையைப்பற்றிய செய்தியை அறிந்துவிடவேண்டுமென்று துடித்தான்.

பஸ் நிலையத்துள் பஸ் நுழைகிறது.

நேரம் ஏழு நாற்பது.

இறங்கியவுடன் ஓடிப் போனால்தான் பஸ்சைப் பிடிக்கலாம்.

ஆனாலும் அந்தப் பெண்ணிடம் குழந்தையைப்பற்றிக் கேட்டு அறிந்துவிடவேண்டும் என்று ஒரு சலபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் புற வாசலுக்குப் போய் அவளை இறங்க விட்டு அடுத்ததாகத் தானும் இறங்கிக் கொண்டு

பதற்றத்துடன் --

எந்தவிதமான செய்தியையும் தாங்கிக் கொள்ளும் திடத்தை ஏற்படுத்திக் கொண்டு

மெல்ல விசாரிக்கிறான்.

"எங்கை இண்டைக்குக் குழந்தையைக் காணேல்லை?"

அவள் இவனை நிமிர்ந்து பார்த்து விட்டு.

"இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே. 'நேர்சரி கிளாஸ்' லீவு அதுதான் வரேல்லை, வீட்டிலை விளையாடிக் கொண்டிருக்கிறாள்"

என்று நிதானமாகச் சொல்லி விட்டு முன்னே நகர-

இவன் அப்பாடா என்று பெரு மூச்சுடன்-

வெடியைக் கொளுத்தி வைத்து விட்டுப் பயங்கரமான சப்தத்தை எதிர்பார்த்துக் காதைப் பொத்திக் கொண்டிருக்கும் போது அது புஸ்வாணமாகிப் போய்விட்டால் ஏற்படுகின்ற ஓர் ஏமாற்றத்தை அனுபவித்தவன் போல

ஆனால் அது ஒரு இன்பமான ஏமாற்றம் என எண்ணிக்கொண்டு-

திடீரென்று ஒரு வெறுமை உணர்வுடன்

அதே நேரம் ஏதோ ஒரு நிம்மதியும் பிறக்க,

தான் போகவேண்டிய மட்டக்களப்பு பஸ் நிற்கும் இடத்தை நோக்கி விரைந்தான்.

*தினகரன் 09-11-1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தார்மீகக் கோபங்கள் தலைதூக்குகின்றன

அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்று வந்த கடிதம்தான் அதற்குக் காரணம். மனமெல்லாம் பூரிப்பால் நிறைந்து மலர்ந்திருந்தது. தனது நண்பர்களுக்கெல்லாம் அந்தக் கடிதத்தைக் காட்டிக் காட்டிப் பெருமிதம் அடைந்துகொண்டிருந்தான்.

ஆம்! அவன் நாடகப் போட்டியின் நடுவர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை அந்தக் கடிதம் தெரிவித்தது.

அகில இலங்கைப் பாடசாலைகளின் தமிழ் மாணவர்களுக்கிடையிலான கலைப்போட்டிகள் அந்த வருடம் அவ்வூரில் நடைபெறுவதாக இருந்தது. கலை இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்த அவன் அந்த நிகழ்ச்சி அங்கு நடைபெறுவதையிட்டு மிகவும் திருப்தியடைந்திருந்தான்.

ஆனால், அவ்விழாவில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்புத் தனக்குக் கிடைக்குமோ என்பதில்தான் அவனுக்குச் சந்தேகம் இருந்தது.

அவ்வூருக்கு அவன் இடமாற்றம் பெற்று வந்து ஒரு வருடம் தானாகிறது. அவ்வூரில் அவனைத் தெரிந்தவர்கள் அல்லது அவனுக்கு அறிமுகமான பெரியவர்கள் என்று யாருமில்லை. பாடசாலைப் போட்டி நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர்களாக எல்லாரையும் அனுமதிக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாவது யாரையேனும் "பிடித்து" ஒரு "பாஸ்" வாங்கிவிடவேண்டும் என்று ஆவலுடன் காத்திருந்தான்.

இன்றைக்கு வந்த கடிதம் அவனுக்குப் 'பாஸ்' தேடி அலையவேண்டிய அவசியத்தை இல்லாமல் செய்துவிட்டது.

அவனுக்கு வியப்பு ஒருபுறம். மகிழ்ச்சி ஒருபுறம். சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றுவிட்டான். மகிழ்ச்சி என்றால் அதில் இரட்டிப்பு மகிழ்ச்சி கலந்திருந்தது. யாரையும் தேடியலையாமல் இலகுவிலே நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு. அத்தோடு போட்டிகளில் அவன் நடுவராகவும் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம்.

அவனுக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்திருப்பதுபற்றி அவனுக்குப் பரமதிருப்தி. அவனுடைய கலை இலக்கிய ஆர்வம், ஆற்றல், ஈடுபாடு இவற்றை மதிப்பதற்கு அவ்வூரிலும் சிலர் இருக்கிறார்கள் என்ற புளகாங்கிதம் அவனை ஆட்டி வைத்தது.

நாட்கள் மெல்ல நகர்ந்தன. அவன் அவற்றை விரைந்து நகர்த்தினான்.

ஒருவாறாகப் போட்டி நாளும் வந்தது. முதலில் கிழ்ப்பிரிவு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. புராண இதிகாச நாடகங்கள் வரிசையில் இரண்டாவது நாடகம் மேடையேறியது.

"கர்ணண்". இதுதான் நாடகம்.

குந்தி தேவியும் கர்ணனும் கண்ணனும் மட்டுமே பாத்திரங்கள். குந்தி தேவிதான் கர்ணனின் தாயார் என்ற உண்மையைக் கண்ணன் குந்தியிடம் வெளிப்படுத்தி அவளைக் கர்ணனிடம் அனுப்பி அதன் மூலம் பாண்டவருக்கு வெற்றிதர முயலும் முக்கிய கட்டத்தை மட்டும் எடுத்திருந்தனர். சின்னஞ்சிறு நாடகம். சின்னஞ்சிறு நடிகர்கள்.

தன்னைமறந்து நாடக நடிகர்களுடன் ஒன்றி அவர்களது நடிப்பு, பாவம், வேஷப்பொருத்தம் இவற்றை ஆராய்ந்து கொண்டிருந்தான் இவன். நிர்வாகிகளின் அனுமதியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தின் சில பகுதிகளைப் புகைப்படம் எடுப்பதிலும் பாடசாலை ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

"கர்ணன்" நாடகத்தில் கர்ணனும் குந்திதேவியும் சந்திக்கும் காட்சியைப் படம் பிடித்தது மட்டுமல்லாமல் நாடகம் முடிந்தவுடன் அவ்விருவரையும் ஒருங்கே நிற்கவைத்தும் ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொண்டனர். இதையும் இவன் நன்கு அவதானித்தான். இவன் மனதில் இது ஒரு "அரிப்பை" ஏற்படுத்தியது.

கண்ணனாக நடித்தவன் புறக்கணிக்கப்பட்டது ஏன்?.

உண்மையில் பார்க்கப்போனால், நாடகத்தில் முக்கிய பாகம் கண்ணனுக்குரியதுதான். நாடகத்தின் பெயர் "கர்ணன்" என்றிருந்தாலும் நாடகம் நகர்த்தப்பட்ட முறை கண்ணனையே கதாநாயகனாகக் காட்டியது. பங்கு கொண்ட மாணவர்களை எடுத்துக் கொண்டாலும்கூட கண்ணனே முதலிடம் பெறுகின்றான்.

இயல்பாகவே கரியநிறம் கொண்ட அந்தச் சிறுவன் கண்ணனுக்குரிய வேஷப் பொருத்தம் அமைந்ததோடு "துறு துறு" வென்று திறமையான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தான்.

"தாயே ! பாரதப் போர் நிகழத்தக்க முறையில்தான் காரியங்கள் நிகழ்கின்றன. ஆனால் நீ அதற்காகக் கலங்க வேண்டாம். நான் பார்த்தசாரதியாக இருக்கிறேன்"

என்று கண்ணன் குந்திக்கு ஆறுதல் சொல்லி அபயகரம் காட்டும்போது அந்தச் சிறுவனின் நடிப்பு......... ஆஹா ! அபாரம். அந்த இடத்தில், தான் நடுவர்களில் ஒருவன் என்பதை மறந்து கைதட்ட எண்ணிக் கரம் தூக்கியதை எண்ணி வெட்கினான்.

இப்போது அந்தச் சிறந்த நடிகன் புறக்கணிக்கப்பட்டபோது இவனால் தாங்க முடியவில்லை.

நாடகத்தின்போது பாராட்டுக்களைத் தெரிவிக்க முடியாமல் தனது கடமை தடுத்ததை எண்ணி வாளாதிருந்தவன் இப்போது உணர்ச்சிக் கொந்தளிப்போடு கடமையைப் புறக்கணிக்கவும் தயாரானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இந்தப் பாரபட்சம்?

அந்தச் சிறுவன் ஒருவேளை வசதிகுறைந்த மாணவனோ?

புகைப்படச் செலவை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும் மாணவர்களை மட்டும் படம் எடுக்கிறார்களோ?

பாவம் அந்தச் சிறுவனின் மனம் என்ன பாடுபடும். மற்றும் இருவரையும் படம் எடுக்கும்போது மேடையின் அருகில் நின்று ஏக்கத்துடன் பார்க்கும் அந்தச் சிறுவனின் முகம் இவனை வாட்டியது.

வேண்டுமானால் அந்தப் புகைப்படத்திற்குரிய செலவை நானே கொடுத்துவிடலாம். உடனே அவனையும் படம் எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

பரபரப்போடு எழமுயற்சித்தவன் திடீரெனத் தன்னை ஆசுவாசப்படுத்தினான்.

'நான் இப்போது நடுவராக இருக்கிறேன். நாடகங்களை மதிப்பீடு செய்வதைத்தவிர வேறு எந்த விவகாரத்திலும் தலையிடக்கூடிய உரிமை எனக்கில்லை. சக நடுவர்களோடுகூடப் பேச்சுவார்த்தைகள் எதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படியிருக்கையில் தனிப்பட்ட ஒரு பாடசாலை மாணவன் விஷயத்தில் தலையிட்டால் எனது நடுநிலை குழம்பிவிடுமே?

'ஒருவேளை அந்த மாணவனை ஏதாவது ஜாதி அடிப்படையில் ஒதுக்குகின்றார்களா? அவனது திறமை காரணமாக வேறு வழியில்லாமல் பாடசாலையின் நன்மைகருதி நாடகத்தில் சேர்த்துவிட்டு, "அந்தக் கீழ்சாதிப்பயலை ஏன் படமெடுக்க வேண்டும்?" என்ற எண்ணத்தில் தள்ளிவைத்து விட்டார்களோ?

அப்படியானால் அது இன்னும் எவ்வளவு பெரிய குற்றம். கேவலம் பிறப்புக் காரணமாக அந்தச் சிறுவனின் திறமைகளை மழுங்கடித்து ஒதுக்கி அவனது மனத்தைப் புண்ணாக்கலாமா இந்தச் சாதி வெறியர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எப்படியும் இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராட வேண்டும்'

வழமைபோல அவனுடைய தார்மீகக் கோபம் கிளர்ந்தெழுந்தது.

புகைப்படங்கள் எடுத்து முடிந்து புகைப்பட நிபுணர் அமர்ந்துவிட்டார். கர்ணன், கண்ணன், குந்தி இவர்களுடன் அவர்களது ஆசிரியரும் மேடையிலிருந்து இறங்குகிறார்.

அடுத்த நாடகத்திற்கான மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

"ம்! விரைந்தெழு! ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு எதிராக நிகழும் கொடுமையை எதிர்த்துப் போராடு! அந்தக் குழந்தையுள்ளத்தில் கொட்டிக்கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்துவிடு! அவன் கண்களில் மலர்ச்சியை ஏற்படுத்து! காலதாமதம் செய்யாதே!"

"முட்டாளே! சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பற்றி ஆலோசிக்காமல் அழிவைத் தேடிக்கொள்ளாதே! நீ இப்போது நடுவர் என்ற ஸ்தானத்தில் இருக்கிறாய்!! உன்னுடைய கடமையை மறந்து விடாதே!"

இருமுனைகளில் அவனது மனம் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது. சில கணங்களுக்கிடையில் அவன் முடிவெடுத்தாக வேண்டும்.

இந்த நிலை அவனது ஆற்றலுக்குக் கிடைத் அங்கீகாரம். இதைச் சுலபமாக இழந்துவிடுவதா?

அவன் தன்னுடைய உணர்ச்சிகளைக் காட்டுவதன் மூலம் ஒரு நியாயத்தை நிலைநிறுத்திவிட முடியும். ஆனால் அவனுடைய நடத்தை போட்டி நிர்வாகிகளுக்கு அவன்மீது அதிருப்பதியை ஏற்படுத்திவிடக் கூடும். அல்லது அவனுக்கு அந்தக் குறிப்பிட்ட பாடசாலையுடன் ஏதோ தொடர்பு இருப்பதாக எண்ணி ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் போர் தொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியிருந்தாலும் அவன் நடுவர் பதவியில் இருந்து நீக்கப்பட நேரும். அதன்மூலம் அவன் அவமானப்படுவதோடு தனக்குக் கிடைத்த அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் இழக்க நேரும்.

அதுமட்டுமல்ல! அவன் பார்வையாளன் என்ற ஸ்தானத்தைக்கூட இழக்கவேண்டி வரும். தொடந்து மூன்று நாட்களாக நடக்கவுள்ள கலகலப்பான கலை நிகழ்ச்சிகளிலிருந்து அவன் தூர விலகிச் செல்ல நேரும். தொடர்ந்து தனக்கு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய நல்வாய்ப்புக்களை இழந்துவிடநேரும். அந்த ஒரு சிறுவனுக்காக இவை யாவற்றையும் இழக்க வேண்டுமா? இந்த உணர்ச்சி அவசியம் தானா?

அவன் குழம்பினான்.

தனது சொந்தப் பேர் புகழுக்காக நியாயமான தனது உணர்ச்சிகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமா? ஒரு சின்னஞ்சிறிய மாணவனின் மனமகிழ்ச்சிக்கும் நல்ல எதிர்காலத்திற்கும் வழிசெய்து கொடுக்கக்கூடிய வாய்ப்பினை வீணாக்கிவிடுவதா? நியாயமான தார்மீகக் கோபங்களெல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாகப் பொசுங்கிப்போய் விடவேண்டியது தானா?

மனச்சாட்சியின் கேள்வி அவனை நோக்கி எழுந்தது. மாணவர்களும் ஆசிரியரும் மேடையின் கடைசிப் படியில் இறங்கிக்கொண்டிருந்தனர்.

"கொஞ்சம் நில்லுங்கள்"

என்று சற்று உரத்த குரலில் சொல்லிக்கொண்டு எழுந்த அவனை நிர்வாகிகளும், மற்றைய நடுவர்களும் கூடியிருந்த அனைவரும் வியப்போடு நோக்கினர்.

*வீரகேசரி 16-03-1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசனைகள்

அவளுக்கு ஒரே திகிலாக இருக்கிறது.

ஏன் என்று தெரியாமலே - ஏதோ ஒரு சில சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு அவள் திகிலடைந்து கொண்டிருக்கிறாள்.

கையிலிருந்த பேனை தாளில் இங்குமங்குமாக ஊர்ந்து ஏதோ அர்த்தமற்றுக் கிறுக்கிக்கொண்டிருக்கின்றது.

திடீரென்று பேனையை மூடிவைத்துவிட்டு மேசையிலிருந்த லாம்பை மிகக்குறைந்த அளவில் குறைத்து வைத்துவிட்டு அவள் நிமிர்கிறாள். நாடியை இருகைகளாலும் தாங்கிக்கொண்டு அண்ணாந்து மேலே கூரையை நோக்கிய வண்ணம் மௌனமாகிறாள்.

நீண்ட ஒரு பெருமூச்சு அந்த மௌனத்திற்கு எல்லைக்கோடு வரைகிறது.

லாம்பினுடைய மேல்தகட்டினூடாக-அதிலுள்ள துவாரத்தின் வழியே வருகின்ற ஒளி மேலே ஓலைக்கூரையில் வட்ட வடிவமான ஒரு மெல்லிய ஒளியை வரைந்து சுற்றியுள்ள இருட்டுக்குள் ஒரு தனி ஒளி வட்டமாக......

மௌனத்தினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள அவளது இதயத்தைப்போல.......

ஒரு கணம் கண்களைமூடித் தனது இதயத்தின் விளிம்பில் நின்று உள்ளே எட்டிப் பார்ப்பவள் போல நிதானித்துவிட்டு மெல்ல விழித்தாள்.

அந்த வெண்ணிறமாக வரையப்பட்டிருந்த வட்டமான ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக விழும்படி லாம்பின் ஒளியைச் சிறிதே தூண்டிவிட்டு மறுபடி அந்த ஒளிவட்டத்தைச் சுற்றி விழிகளை நகரவிட்டாள்.

அந்த ஒளிவட்டத்தின் நடுவே ஓலைக்கூரையின் துவாரமொன்றினூடாக வானில் ஒரு நட்சத்திரம் கண்சிமிட்டியதை அவள் இப்போதுதான் அவதானிக்கிறாள்.

அவள் மறுபடியும் நீண்ட ஒரு பெருமூச்சு உகுத்தபடி மெல்லத் தலையைக் கவிழ்த்து மடித்த கரத்தின் மேல் வைத்துக் கொள்கிறாள்.

இன்னும் ஒரு வாரத்தின் பின் இதே நேரத்தில் அவள் தனது கணவனை எதிர்பார்த்துக்கொண்டு வீட்டுவாசலில் நிற்கலாம். அல்லது கணவனோடு எங்காவது போய்க் கொண்டிருக்கலாம். அல்லது ஏதாவது ஒரு திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அத்தகைய காரியங்களில் அவள் மனப்பூர்வமாகவே ஒன்றிக் கலந்துகொள்ள முடியுமா?

அல்லது இயந்திரரீதியாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டுமா?

இப்படி ஒரு கேள்வியை அவள் தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

அடுத்த வாரம் அவளுக்குத் திருமணம். சட்டரீதியாக நேற்றுமுன்தினம் அவள் ஒருவனுக்கு மனைவியாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறாள்.

இதயத்தில் பெண்மை மலர்ந்து - உடலில் பெண்மை பூரித்து இனிய கனவுகள் முகிழ்க்க ஆரம்பித்த காலத்திலிருந்து சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவள் தனது எதிர்காலம் பற்றி - இல்வாழ்க்கை பற்றி - எத்தனையோ கற்பனைகளை - கனவுகளைக் கண்டிருக்கிறாள். எத்தனையோ இலட்சியங்களைத் தனக்குள் வளர்த்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இத்தனை வருடங்களுக்குப் பிறகு இந்த இருபத்தெட்டு வயதிலும் அவள் தனக்கு வரப்போகிற அதாவது நேற்றுமுன்தினம் அவளோடு சட்டரீதியாக இணைக்கப்பட்ட கணவன் எப்படி இருப்பான் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்.

இவ்வளவு காலமும், அவள் தனக்கு வரும் கணவன் இப்படியிருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு - இப்படி இருப்பான் என்று கற்பனைகள் செய்து தன்னைத்தான் திருப்தி செய்து அவனோடு மானசீகமாக வாழ்ந்தும் இருக்கிறாள்.

ஆனால் இன்றைக்கு அவளது சிந்தனையின்போது அந்த வழமையான மானசீக சுகத்தை அவள் அனுபவிக்க முடியவில்லை.

அவனுடைய இயல்புகள் எப்படி இருக்கும்? தன்னோடு அவன் நடத்தவிருக்கும் வாழ்க்கை எப்படி அமையும்?

என்ற கேள்விகளுக்கு சுகமான கற்பனைகளில் விடை கண்டுபிடிக்க அவளால் முடியவில்லை.

அவள் தன்னையுமறியாமல் சில எதிர்மறையான விடைகளையே இந்த வினாக்களுக்கு விடைகளாக உருவகப்படுத்தித் தான் முன்பு எதிர்பார்த்த - கற்பனையில் வாழ்ந்த வாழ்க்கைக்குப் புறம்பான ஓர் எதிர்மறை வாழ்க்கை தனக்குக் கிடைத்துவிடுமோ என்ற ஒரு திகிலில் ஆழ்ந்துகொண்டிருக்கிறாள்.

சில அதீதமான முன்னுணர்வுகள், தீர்க்கதரிசனமான சில உணர்வுகள் பற்றி அவள் படித்திருக்கிறாள்.

அப்படி, தான் பயந்துகொண்டிருப்பது போலவே நடந்துவிடக்கூடும், அதனைத் தெரிவிக்கின்ற முன்னுணர்வுதான் தன்னுடைய கற்பனைகள் என்று அவள் எண்ணி நடுங்கினாள்.

அது அவளுடைய திகிலுக்குப் பின்னணியாக அமைந்து அதனைப் பெருப்பித்துக் காட்டியது.

தன்னுடைய அந்தத் திகிலிற்கு உடந்தையாக அமைந்த ஒவ்வொரு காரணத்தையும் அவளது மனம் ஆராய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருமணத்திற்கான ஏற்பாடுகளுக்கு முன்பு அவள் தனது கணவனை ஒருபோதும் சந்தித்ததில்லை.

அவனுடைய வாழ்க்கைப் பாதை ஒருவகையானதும் தனது பாதை வேறாகவும் அமையக்கூடும்.

இரு பாதைகளும் எப்படி ஒன்றாக முடியும்?

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இரசனைகள்- விருப்புவெறுப்புக்கள் - குண இயல்புகள் இருக்கலாம். அவை எந்த ரீதியில் ஒன்றுபடமுடியும்?

அதே நேரத்தில், நூற்றுக்கு நாற்பது வீதமானவர்களாவது முன்பின் தெரியாதவர்களுக்குத் திடீரென்று கழுத்தை நீட்டி அவர்களுடன் வாழ்நாள் பூராவும் வாழ்ந்துவிடுகிறார்கள் என்ற உண்மையை அவள் நினைத்துப் பார்க்காமல் இருந்துவிடவில்லை.

ஆனால், அந்தத் திருமணத்தின்பின் இருவரது இரசனைகளும் ஒன்றாக அமைந்து, ஒரே வாழ்க்கைப் பாதையில் இணைந்து நடைபோட்டவர்கள் அல்லது நடைபோடுபவர்கள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடியவர்கள்தான் என்பது அவளது எண்ணம்.

மற்றவர்கள், ஒருவருக்காக மற்றவர் தமது இரசனைகளை மாற்றி, வாழ்க்கை முறைகளை வேறுபடுத்தித் தமது விருப்பு வெறுப்புகளைத் தியாகம் செய்து, தமது இணையின் பாதையில் பின்செல்பவர்களாகவே இருக்கிறார்கள்.

அதிலும் பெரும்பாலும் பெண்களே ஆண்களுக்காகத் தமது இரசனைகளைத் தியாகம் செய்து அவர்களது இன்பத்திற்காக வாழ்வதையே தமது கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஓ! இது எவ்வளவு பரிதாபமான வாழ்கை!

தனக்கென்று தனித்துவமான ரசனைகள் - வாழ்க்கை முறைகள் - விருப்பு வெறுப்புக்கள் இல்லாமல் வாழ நேருமானால்............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு திருமணபந்தம் அவசியம்தானா?

இந்த இருபத்தெட்டு வயதுக் காலத்தில் உடலியல் ரீதியாக மட்டுமல்ல - உளவியல் ரீதியாகவும் - சமூகவாழ்க்கை அமைப்பு முறைகளாலும்கூடத் திருமண பந்தத்தின் அவசியத்தை அவள் நன்றாக உணர்ந்திருக்கின்றாள்.

ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவள் மானசீகமான இந்தச் சிந்தனையின்போது திருமணம் பற்றிச் சற்று அலட்சியமாகவே நினைக்க முற்படுகிறாள்.

முன்பின் அறிமுகமில்லாத இருவர் இல்வாழ்க்கை என்ற ஒரே சகடத்தில் பூட்டப்படும்போது சில வேளைகளில் ஒவ்வாமை காரணமாகப் பல வாழ்க்கைச் சகடங்கள் முறிந்து விழுவதை அவள் அறிந்திருக்கின்றாள்.

இன்னும்பல, ஒருவரின் தியாகத்தினால்-விட்டுக் கொடுத்தலினால் - மற்றவரைத் தொடர்ந்து வாழ்க்கை மெதுவாகச் சென்றுகொண்டிருக்கின்றது.

மிகச் சிலருடைய வாழ்க்கை மட்டுமே பரஸ்பரம் புரிந்துகொள்ளலோடு இருவரும் ஒரே பாதையில் தொடர்ந்து செல்கின்ற வண்டியாக அமைகிறது.

தன்னுடைய வாழ்க்கை அப்படி அமையாமல் போய் விடுமோ என்றுதான் அவளுக்குத் திகிலாக இருக்கிறது.

கையில் தபால் கிடைத்து விட்டபிறகும்கூட அதைப் பிரித்துப் பார்ப்பதற்கு முன் அதன் கையெழுத்திலிருந்தும் திகதி முத்திரையிலிருந்தும் எழுதியவர் யாரென்று அறிய முற்படுகின்ற ஒருவகை விநோதமான மனப்பான்மை போல,

இன்னும் ஒரு வாரத்தில் நடைபெறும் திருமணத்திற்குப் பிறகு தான் ஆரம்பிக்கவிருக்கும் இல்வாழ்க்கை எப்படியிருக்கக்கூடும் என்று அதற்கிடையில் ஏற்படுகின்ற விநோதமான கற்பனைகளால் ஆராய்ந்துகொண்டிருந்தது அவள் மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேவிதமான மனப்பாங்கும் - ஒரே இரசனைகளுமுடைய இருவர்தான் திருமணப்பந்தத்தில் ஈடுபட்டு மகிழ்வடைய முடியுமென்றால், இதுவரையில் தனது இரசனைகளோடு ஒத்த இரசனைகளுடைய ஒரு பங்காளரைத் தானாகவே தேர்ந்தெடுத்திருக்கலாம்.

அவள் உத்தியோகம் பார்க்கும் ஒரு பெண்ணாக - சமூக அந்தஸ்துடையவளாக இருப்பதோடு நிறையப் பொது விஷயங்களிலும் தொடர்புகொண்டிருந்திருக்கிறாள். இந்த வசதிகள் மூலம் அவள் தன்னோடு ஒத்த இரசனையுள்ள - தனக்குப் பிடித்த ஒருவரைத் தேடியிருக்க முடியும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

அது ஏன்?

தான் கலந்து பழகிய சிலரோடு விரும்பி நெருங்கிப் பழகியும் - வேறுசிலரை அவள் ஒதுக்கியும் நடந்திருக்கிறாள். ஆனால் ஒருபோதாவது அவர்களில் ஒருவரையாவது அவள் தனது எதிர்கால வாழ்க்கைத் துணைவனாகக் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை.

ஒருவேளை 'காதல்' என்பது இன்று மிகவும் மலினப் படுத்தப்பட்டு விட்டதால் காதலிப்பதன் மூலம் தனது தனித்துவம்மிக்க - தன்னை மிகவும் உயர்ந்தவளாகப் பாவித்துவந்த அந்த பிம்பம் சிதைந்துவிடலாம் என்று அவள் நினைத்திருக்கக்கூடும்.

இப்போது நடக்கின்ற தனது இந்தத் திருமணத்தின் அடிப்படைகளை அவள் நினைத்துப் பார்க்கின்றாள்.

முப்பது வயதான அவள் கணவனுக்கு ஒரு தங்கை திருமணத்திற்குக் காத்திருக்கிறாள். அவளுக்குத் திருமணம் செய்ய வேண்டிய செலவுக்காக இவர்களிடம் இருந்து அவன் நிறையச் சீதனம் எதிர்பார்க்கிறான். இவர்களிடம் போதிய வசதிகள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய இத்திருமணத்தை எப்படியாவது நடத்திவிடவேண்டும் என்பதற்காக இருபத்துநாலே வயதான இவளுடைய தம்பிக்குக் கொழுத்த சீதனத்துடன் கல்யாணம் பேசுகின்றனர் இவளது பெற்றோர். அந்தத் திருமணப் பதிவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் திருமணங்களின் அடிப்படை சீதனம். சீதனத்தின் அடிப்படை எப்படியாவது ஒரு குமர் கரைசேர்ந்துவிட வேண்டுமென்ற நல்லெண்ணம். இவளது கணவருக்கு தனது தங்கையின் திருமணம் நடக்கவேண்டிய அவசரமும் அதற்குப் பொருள் வேண்டுமென்ற அவசியமும் துணைகூட்ட இத்திருமணம் நடக்கிறது.

ஆக, இவள் எப்படி இருப்பாள் என்பது பற்றி அவனுக்கு அதிக அக்கறை இருக்கவேண்டிய அவசியமில்லை.

ஏதோ உண்டோம் உறங்கினோம் என்று வாழ்வதா வாழ்க்கை?

அதில் எத்தனை எதிர்பார்ப்புக்கள், கற்பனைகள், இன்ப துன்பங்கள்.....

ஓ! வாழ்க்கைக்கு எத்தனை அர்த்தம் இருக்கிறது. அதனை வெறுமனே வாழ்ந்துவிட முடியுமா?

இவளது திருமணம் நடக்கவேண்டுமென்ற ஒரே காரணத்துக்காக இவள் தம்பி அவசரமாகத் திருமணம் செய்கின்றான். அவன் தான் தொடர்புகொண்டுள்ள கலை - இலக்கிய உலகம் என்கின்ற பரந்த உலகில் - அவனது பல விசிறிகள் எட்டிப்பிடிப்பதற்கு முயல்கின்ற நட்சத்திரமாக ஜொலிக்கின்றான். அவர்களுக்குள் ஒருத்தியைத் தெரிவுசெய்தால் ஒத்த இரசனைகளுடன் எவ்வளவு இனிமையாக வாழலாம். ஆனால் இப்போது பதினெட்டே வயதான ஒரு சிறு பெண்ணை- வெறுமனே கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவியை மணந்துகொண்டு தன் வாழ்க்கையை எப்படி நடத்தப் போகிறான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டு அந்த விளக்கின் சுடரொளியைப் பார்க்கிறாள்.

அந்த ஒளிச்சுடரின் மத்தியிலிருந்து அவளது கணவன் புன்னகைப்பதாக ஒரு கற்பனை செய்கிறாள். மறுகணம் அந்தக் கற்பனைமூலம் அவள் நாணம் அடைந்து முகம் சிவக்க மெல்லிய புன்னகையோடு தலைகுனிகிறாள்.

தான்கூடச் சாதாரண சராசரிப் பெண்களைப்போல மிகச் சாதாரணமான கற்பனைகளை உருவாக்கவும், அதுவும் இந்த வயதில்கூட அத்தகைய கற்பனைகள்மூலம் முகம் சிவக்கத் தலைகுனிய முடிகிறதே என்று நினைத்தபோது அவளுக்கு அதிசயமாக இருந்தது.

படிப்புகள், பட்டங்கள், அந்தஸ்துகள் என்பன உயர்ந்தவையாகவும், வயது அநுபவம், அறிவு ஆகியவை அதிகமாகவும் இருந்தாலும் தானும் பெண்தானே என்பதை எண்ணும்போது அவளுக்குச் சிரிப்பும் வந்தது.

சற்று முன்னர் தான் செய்த விசித்திரமான கற்பனைகளும், விபரீதமான ஆராய்ச்சிகளும் அவளை வெட்கமுற வைத்தன.

புதிதாக ஒரு பெண்ணால் தத்தெடுக்கப்பட்ட குழந்தை சில நாட்கள் முரண்டு பண்ணினாலும்கூட மிகச்சில நாட்களிலேயே தனது சொந்தத் தாயாகவே அவளைக் கருதி வாழ்வதுபோலவே, நமது திருமணவாழ்க்கயிலும் வேறுபட்ட இரசனையுள்ள இருவர் இணையும்போது ஆரம்பத்தில் முரண்படும் அந்த இரசனை வேறுபாடே பின்பு அவர்களை இணையவும் வைக்கலாம் என்று எதிர்மறையான நியாயங்களையும் அவள் மனம் அசைபோடுகிறது.

இரசனை இரசனை என்கின்றோமே, இரசனை மட்டுமேயா வாழ்க்கை.

வாழ்க்கையை ஒரு வகை வெறியோடு வாழ்ந்து தீர்ப்பதுதானே இரசனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் என்கிறோமே, அது என்ன?

ஒரு பெண்ணின் வாழ்க்கை கணவனோடு இணைக்கப்படும்போது அங்கு ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவமே முகிழ்க்கிறதல்லவா?

அதற்கு இசைவது தானே பெண்ணின் தனித்துவம்?

அவள் தனது பெண்மைக்கே உரிய முறையில் தனது சிந்தனைகளைத் திசைமாற்றிச் சிந்திக்கிறாள்.

தான் வீண்பிரமைகளில் ஆழ்ந்து விட்டேனோ என்று எண்ணியபடி எழுந்து நடந்தாள்.

அவள் தனது தம்பியின் அறைக்குள் நுழைந்தபோது அவன் தனது எதிர்கால மனைவியின் புகைப்படத்தை எதிரில் வைத்தபடி மானசீகமான கற்பனாலோகத்தில் மூழ்கியிருந்தான். அவன் முன்னே வெள்ளைத்தாளில் ஏதோ சில கவிதைக் கிறுக்கல்கள். அவை நிச்சயமாக அந்தப் புதிய துணையைப்பற்றியதாகத்தான் இருக்கும்.

ஓ! இரசனைகள்தான் எவ்வளவு சுலபமாக வளைந்து கொடுக்கின்றன! இரசனை மட்டுமேயா வாழ்க்கை? அது இன்னும் விசாலமானது!.

ஈழநாடு 10-02-1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குரிய இடம்

கண்களை மலர மலர விழித்துக் கொண்டு நாற்புறமும் தோன்றும் காட்சிகளை அவதானித்துக் கொண்டு நிதானமாக அவன் நடந்துகொண்டிருந்தான்.

புத்தம் புதியதோர் உலகம் அவன் கண்களின் முன்னே விரிந்து கொண்டிருந்தது.

அவனது இதயமும் விரிந்து, பரந்து புதிய சிந்தனைகளும், இலட்சியங்களும் நிறைந்து அவனும் ஒரு புதிய மனிதனாக நடந்துகொண்டிருக்கிறான்.

நீண்டதோர் இடைவெளியின் பின் அவன் இந்த உலகத்தைப் பார்க்கிறான். இருண்ட அறைக்குட் பல ஆண்டுகள் கழித்துவிட்டு "இனி ஒரு விதி செய்வோம்" என்று ஒரு புத்துணர்ச்சியுடன் 'இது இனிய உலகம்' என்ற அப்பாவித்தனமான எதிர்பார்ப்புக்களுடன் அவன் நடந்து கொண்டிருக்கிறான்.

அவன் சிறையிலிருந்து விடுதலையாகி வந்துகொண்டிருக்கிறான்.

சிறை வாழ்க்கை அவனுக்குப் புதிய நம்பிக்கைகளைக் கொடுத்திருந்தது. அத்தகைய புதிய இலட்சியங்களோடு அவன் புதிய உலகைக் காணும் ஆவலுடன் வந்துகொண்டிருக்கிறான்.

அவன் ஒரு பெரிய குற்றத்தைச் செய்தவன்தான். ஓர் உயிர்க் கொலையையே செய்து அதற்காகக் குற்றம் சாட்டப்பட்டு அதற்கான தண்டனையை அனுபவித்துவிட்டு வருகிறான். உண்மையில் அந்தத் தண்டனை அவனுக்கு அதிகமானதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால் அவன் வேண்டுமென்று அந்தக் கொலையைச் செய்தவனல்லன். அந்த நேரத்து உணர்ச்சியிலும் அப்போது அவன் சிறிது குடிவெறியில் இருந்ததாலும்தான் அந்தத் தவறு நிகழ்ந்தது. அதனால் அது தப்பு அல்ல தவறு.

சட்டத்திற்குத் தப்பும் ஒன்றுதான், தவறும் ஒன்றுதான். ஆனாலும் நீதிபதி சற்றுக் கருணையோடு இவனை விசாரித்ததால் கைமோசக் கொலை என்று தீர்க்கப்பட்ட இவனுக்கு வழங்கக்கூடிய மிகக் குறைந்த தண்டனையையே வழங்கியிருந்தார்.

தண்டனையை இவன் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டான். தான் செய்தது பெரும் குற்றமென்று எண்ணியெண்ணி வருந்தினான். தனக்குக் கிடைத்த தண்டனை போதாது என்றுகூட எண்ணினான். தான் செய்த கொடிய பாவத்தின் தண்டனையை இப்பிறவியிலேயே அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டுமென்று எண்ணித்தினமும் அழுதுகொண்டிருந்தான்.

நடந்தது இதுதான்.

இவனுக்குத் திருமணமாகி நான்கைந்து வருடங்கள்தான் ஆகி இருந்தன. மூன்று குழந்தைகளுடன் வாழ்க்கையைப் பெருஞ் சிரமத்துடன் ஓட்டிக்கொண்டிருந்தான். வறுமைப் பிணி மதுவை நாட வைத்தது. கொஞ்சம் குடிப்பான். சற்று உணர்ச்சி வசப்படுவான். இவைதான் அவனிடமிருந்த குறைபாடுகள்.

இவனுடைய மனைவியின் தகப்பனாரோ பெரும் குடிகாரன். அது மட்டுமல்லாமல் ஏமாற்றுப் பேர்வழியும்கூட. இவனுக்குச் சீதனமாகத் தருகிறேன் என்று சொன்ன காணியை இவர்களுக்குத் தெரியாமலேயே விற்றுக் குடித்து முடித்திருந்தார். அது தெரிந்தபோது இவன் பொங்கி எழுந்தான். அதுவும் இவன் சேதியை அறிந்த இடம் கள்ளுக்கடை. உடனே மேலும் இரண்டு போத்தலை வார்த்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சத்தம் போட்டான்.

இரண்டு குடிகாரர் மோதிக்கொண்டால் நிலமை எப்படியிருக்கும்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிவசப்பட்ட இவன் அருகிலிருந்த கத்தியை எடுத்தபோது கதை முடிந்தது.

அடுத்த சில நிமிடங்களில் இவனுடைய வெறியும் முறிந்தது. அழுதுபுரண்டான். "மாமா" என்று கதறினான். இன்று அதிகாலை சிறைவாழ்வு முடிந்து புறப்படும்வரை அழுதுகொண்டே இருந்தான்.

அவனது கண்ணீர் அவன் இதயத்தைக் கழுவித் துடைத்தது. அவன் புதிய மனிதன் ஆனான். சிறை வாழ்க்கை அவனை மாற்றி இருந்தது.

அவன் இனிக் குடிக்கமாட்டான். உணர்ச்சிவசப்பட மாட்டான். ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறான். அந்த நம்பிக்கையுடன் அவன் ஊருக்குள் நுழைந்து தன் தெருவுக்குள் நுழைகிறான்.

அதோ எதிரில் வருவது யார்? செல்லையா அல்லவா?

இவன் அவனை நோக்கி முறுவலிக்கிறான். ஆனால் இது என்ன? அவன் பேசாமல் போகிறானே. என்னை அடையாளம் காணவில்லையோ?

"செல்லையா, என்னைத் தெரியேல்லையே?" என்று ஆவலுடன் கேட்கிறான் அவன்.

"ஆர் முருகேசுவோ? எப்ப வந்தனி? இண்டைக்குத் தானோ? அப்ப சரி வரட்டே? ஒரு அவசரமான அலுவல்"

என்று அவன் இவனுடைய மறுமொழிக்குக்கூடக் காத்திராமல் ஓடுகிறான்.

என்ன தலை போகிற வேலையாக இருந்தாலும் தன்னோடு மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருக்கும் செல்லையா ஏன் இன்று இப்படி ஓடுகிறான். புரியாத புதிருடன் முருகேசு நடக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் வரிசையாக இருந்த வீடுகளின் வாசல்களில் ஆங்காங்கே நின்றுகொண்டிருந்தவர்கள் இவனைக் கண்டதும் காணாதவர்களாக உள்ளே நழுவினார்கள்.

யன்னல்களிலும் வாசல்களிலும் பெண்கள் இவனை ஏதோ பயங்கர வஸ்துவைப் பார்ப்பதுபோலப் பார்த்துவிட்டு மறைந்தார்கள்.

இவன் மனம் துணுக்குற்றது. இவர்களென்ன என்னைக் கண்டு பயப்படுகிறார்களா? அல்லது அருவருக்கிறார்களா?

முதன் முதலாக இவன் நெஞ்சம் புழுங்கியது.

"ஓ நான் சிறைசென்று வந்தவன்"

வீட்டினுள் நுழைந்தான். தாயுடன் ஒட்டிக்கொண்டு மிரள மிரள விழித்தனர் பிள்ளைகள். அவன் எதிர்பார்த்த வரவேற்பு வீட்டிலில்லை.

தன் கணவன் என்ற அன்பைவிட, தன் குடும்பத் தலைவன் என்ற மதிப்பை விட, தன் தந்தையைக் கொன்றவன் என்ற உணர்வு மனைவியிடத்தில் மேலோங்கி நின்றதை அவன் அவதானித்தான்.

உள்ளம் குமைந்தான். குழந்தைகளும் அயலவர்களும் அவனை ஒரு கொலைகாரனாய்ப் பார்த்தனர். அவன் மனத்துக்குள் அழுதான். சிறை வாழ்வில் தினமும் பெருகிப் பெருகி வற்றிப் போயிருந்த கண்ணீர் மறுபடி பெருக ஆரம்பித்தது.

"ஓ ! நான் சிறை சென்று வந்தவன்"

அன்று முழுதும் அவன் அழுதுகொண்டிருந்தான்.

மறுநாள் காலை அவன் மனதை ஒருவாறு தேற்றியபடி புறப்பட்டான். எப்படியாவது வாழ்க்கையை நகர்த்தவேண்டுமே!

முன்பு வேலை செய்த கடையில் போய் வேலை கேட்டான். முதலாளி இவனைப் பயத்தோடும் வெறுப்போடும் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை விரித்தார். தலையைத் தொங்கப் போட்டபடி மௌனமாகத் திரும்பினான் அவன்.

"ஓ! நான் சிறைசென்று வந்தவன்"

அன்று பகல் முழுவதும் அவன் வேலை தேடிப் பல இடமும் அலைந்தான்.

"முந்தி எங்கை வேலை செய்தனி! ஏன் வேலையை விட்டனி!" என்ற கேள்வி எல்லா இடத்திலும் பிறந்தது.

"ஐயா! நான் தெரியாமல் செய்த பிழை அது. அதற்குத் தண்டனை அனுபவித்து மனம் திரும்பி வந்திட்டன். இனித் தண்டனை வேண்டாம் ஐயா!"

என்ற அவனுடைய கதறல் ஒருவர் காதிலும் விழவில்லை.

அவன் போன இடமெல்லாம் கதவுகள் மூடிக்கொண்டன.

அவனுடைய திறந்த இதயத்தினுள் நுழைந்து பார்க்க இந்தச் சமூகத்தில் எந்தத் தலைமகனும் தயாராக இல்லை.

காலை புறப்பட்டதில் இருந்து ஒரு கோப்பை தேநீர் தானும் இல்லாமல் வேலை தேடியே தீர்வது என்ற வைராக்கியத்துடன் அலைந்தவன் சோர்ந்து களைத்துவிட்டான். மாலை மங்கிக்கொண்டிருந்தது. அவன் இதயம் குமுறிக் குமுறி அழுதது.

"ஓ! நான் சிறை சென்று வந்தவன்"

நேற்றுப் புலரும் பொழுதில் புதிய வாழ்வை எண்ணிப் புறப்பட்டவன் இன்று இருட்டும் பொழுதில் தன் வாழ்வு இருண்டு விட்டதை உணர்ந்தான்.

கண்களும் பசியால் இருட்டின. மனமும் இருண்டது. புதிய இலட்சியமும் நம்பிக்கைகளும் இருண்டன.

பழையமுருகேசு விழித்துக் கொண்டான். கண்ணெதிரே சாராயத் தவறணை தெரிகிறது. அவன் தன்னை இழக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகப் பிறந்த அந்த மனிதனின் மானிடம் உறங்கிவிட்டது.

மிருகம் ஒன்று விழித்துக் கொள்கிறது.

"ஓ! நான் சிறை சென்று வந்தவன். எனக்கு இங்கே இடமில்லை. இந்த உலகில், இந்தச் சமூகத்தில் எனக்கு இடமில்லை. எனக்குரிய இடம் சிறைதான். மறுபடியும் நான் அங்குதான் போகவேண்டும்.....................

"அதற்கு என்னவழி?

என்னைச் சிறைக்கு அனுப்பி இந்த நிலைக்கு ஆளாக்கியவரை மறு உலகிற்கு அனுப்பினால் இந்தச் சமூகம் மறுபடி என்னைச் சிறைக்கு அனுப்பி வைக்கும். அதுதான் சரி.

அந்த நள்ளிரவு நேரத்தில் "உலகே மாயம்" என்று முணுமுணுத்துக் கொண்டு நிறை வெறியுடன், ஆனால் நிலை தவறாத நோக்கத்துடன் கையில் கத்தியுடன் நடந்துகொண்டிருக்கிறான்,

சிறை சென்று திரும்பிய குற்றவாளி முருகேசு.

*தினகரன் 18-04-1982*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவத்தின் பங்காளிகள்

அந்த 'பச்சிலேர்ஸ் டொமற்றி' அன்று கலகலத்துக் கொண்டிருந்தது.

அந்தப் பகுதி அரசாங்கக் காரியாலயத்தில் வேலைசெய்யும் உத்தியோகத்தர் பலரும் அங்கு வந்து குழுமியிருந்தனர். ஒரே பாட்டும் கூத்துமாகக் கழிந்து கொண்டிருந்தது. ஒரு புறத்தில் தேங்காய் துருவும் சத்தமும் விறகு கொத்தும் சத்தமும் சமையல் மும்முரமாக நடப்பதைத் தெரியப்படுத்தின.

அன்று அந்த அலுவலகத்தின் வருடாந்தக் கணக்குப்பரிசோதனை யாவும் நிறைவுபெற்றதனால் அதை ஒரு சந்தோஷநாளாகக் கொண்டாட வேண்டுமென்று ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தவன் சிவதாசன். உடனே அதைச் சில்வா ஆமோதித்ததோடு அதற்கு ஆதரவைத் திரட்டத் தொடங்கினான்.

எஞ்சினியர் புன்முறுவலோடு ஒரு ஐம்பது ரூபாவை எடுத்துக் கொடுத்ததன் மூலம் விருந்திற்கான தமது சம்மதத்தைத் தெரிவித்தார். தலைமை லிகிதரும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் தொடர்ந்து ஐம்பது ரூபாய்களை எடுத்தெறிந்தனர்.

பிறகென்ன? மற்ற லிகிதர்களும் தமது பங்கிற்கு இருபத்தைந்தும் பதினைந்தும் என்று போட்டஉடன் கந்தோரில் பணம் நீராக ஓடத் தொடங்கியது. வாகனங்களும் சுழன்று ஓடித்திரிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொமற்றியில் அரிசி, காய்கறி, தேங்காய், முட்டை, மீன் இவை எல்லாம் வந்து குவிந்தன. சமையல் தொடங்கியது.

அலுவலகத்தில் வெறும் மேசைகளின்மேல் மின்விசிறிகள் முழுவேகத்துடன் சுழன்றுகொண்டிருக்க, உத்தியோகத்தர்கள் அனைவரும் டொமற்றியில் கூடி நின்றனர்.

அவர்கள் கண்களும் தலையும் சுழலத் தொடங்கின. இப்போது சாராயம் தண்ணீராக ஓடத் தொடங்கியது.

முதலில் நான்கு போத்தல் காணும் என்று கணக்குப் பார்த்து வாங்கியது போய் அதன் பிறகு இன்னும் ஒன்று இன்னும் இரண்டு என்று ஒவ்வொருவர் கணக்கில் போத்தல்கள் வந்து கொண்டிருந்தன.

எஞ்சினியர் சமரக்கோன், பகுதி உதவியாளர் சில்வா, தலைமை லிகிதர் குமாரசிங்கம், தொழில்நுட்ப உத்தியோ கத்தர்கள் சிவதாசன், நந்தரத்ன, ஜயசிங்க, அபயசேகரா மற்றும் லிகிதர்கள் ஜினதாச, கனகரத்தினம், படவரைஞர் குணம் ஆகியோரும் சேர்ந்திருந்த அந்த இடத்தில் ஒரே கலகலப்புத்தான்.

சாதாரணமாகவே கலகலப்பாக இருக்குமென்றால் சாராயம் சேர்ந்து விட்டால் கேட்கவேண்டியதில்லைத்தானே.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் கலந்து குழம்பி வந்துகொண்டிருந்தன. பாட்டுக்களும் கலந்து ஒலித்தன.

அவர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமானவர்களாக இருந்தாலும் ஒன்றாகச் சேர்ந்திருந்தார்கள்.

சிவதாசன் சாராயம் குடிப்பதில்லை. ஆகவே, மற்றவர்கள் குடித்து முடிக்கும்வரை காத்திருந்தான். அவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. உள்ளேஇருந்து வரும் முட்டைப் பொரியலின் மணம் அதற்குத் தூபம் போட்டது.

அபயசேகரா மச்சம் மாமிசம் எதுவும் சாப்பிடுவதில்லை. ஆனால் நன்றாகக் குடிப்பான். அவன் குடித்துவிட்டுக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் குடிப்பதுமில்லை, மாமிசம் சாப்பிடுவதுமில்லை. அவன் இவற்றிலிருந்து ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்த்தான். இன்றைய விருந்தில் குணம் அபயசேகரா இருவருக்குமாகச் சைவச்சாப்பாடு தனியே தயாராகிக் கொண்டிருந்தது.

*"அத குக்குள் மஸ் நத்த" (இன்றைக்கு கோழி இறைச்சி இல்லையா?)*

இருந்தாற்போல் ஜினதாஸவின் கேள்வி அனைவருக்கும் வாயில் நீரை ஊறவைத்தது. கனகரத்தினம் விசாரித்தார்

*'அயி? குக்குளெக் ஹிட்டியா நே" (ஏன் கோழி ஒண்டு நிண்டுதே?)*

"கோழி இப்பவும் நிக்ககுது தான். திருகிறதுக்குத்தான் ஒருதரும் இல்லை" கனகரத்தினத்தின் கேள்விக்குக் குமாரலிங்கம் விளக்கம் கொடுத்தார்.

"ஏன் கோழி உரிக்கிறதுக்கு ஏலாதாமோ உந்தச் சமையல் காரருக்கு?"

புரியாதவராகத் திருப்பிக் கேட்டார் கனகரத்தினம். அந்தப்பகுதிக்கு புதிதாக வந்த அவருக்கு விளக்கம் கொடுக்க முற்பட்டார் குமாரலிங்கம்.

"இல்லை கனகரத்தினம், இவங்கள் எல்லாரும் நல்லா இறைச்சி சாப்பிடுவான்கள். ஆனால், ஆடு கோழி ஒண்டையும் கொல்லமாட்டான்கள். ஆரையேன் கொண்டு கொல்லுவிச்சுப் போட்டு நல்லா விழுங்குவான்கள்"

இப்படி விளக்கம் கொடுத்த கையோடு அவர் கனகரத்தினத்திடம் சொன்னார்.

"ஏலுமெண்டால் நீங்கள் திருகிப்போட்டுக் குடுங்கோவன். நேரமெல்லே போகுது".

"என்னாலை ஏலாது. எனக்கேன் உந்தப் பாவத்தை?" என்று விடையிறுத்தார் கனகரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் நானும் பேசாமலிருக்கிறன். அவங்களாரேன் செய்யட்டுமன்" என்று சொல்லி அதற்கு முற்றுப்புள்ளி வைத்த குமாரலிங்கத்தை,

"என்ன நீங்க இரண்டுபேரும் உங்கடை பாஷையிலை ஏதேதோ கதைக்கிறியள்?" என்று சிங்களத்தில் கேட்டான் சில்வா.

தங்கள் சம்பாஷணையின் சாரத்தை ஏற்ற முறையில் மாற்றியமைத்துக் கூறினார் குமாரலிங்கம்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. எல்லோருக்கும் பசி வயிற்றைக் கிண்டியது. ஆனால் கோழிக்கறி இல்லாமல் சாப்பிட யாருக்கும் மனமில்லை.

ஓர் உயிரற்ற உடம்பைச் சாப்பிடுவதற்குத் தயாராக இருந்த அத்தனை பேரில் அந்த உயிரைப் போக்குவதற்குமட்டும் யாரும் தயாராக இல்லை. வேறுயாரையாவது ஏவி அந்தக் கொலையைச் செய்வதன்மூலம் அந்தப் பாவம் தங்களைத் தீண்டமாட்டாது என்கின்ற படு முட்டாள்தனமான ஒரு கருத்தோடு அப்படி ஒரு பாவியைத் தேடி அங்குமிங்கும் ஆள் அனுப்பினார்கள்.

அவர்களது துரதிர்ஷ்டம், யாரும் கிடைக்கவில்லை.

இருந்தாற்போல் எஞ்சினியர் சமரக்கோன் ஒரு புதிய ஆலோசனையைக் கொண்டுவந்தார்.

சீட்டிழுப்பு மூலம் அந்தப் 'புனித' கைங்கரியத்தை நிறைவேற்றும் 'புண்ணியாத்மா' வைத் தேர்ந்தெடுப்போம் என்பதே அந்த யோசனை.

வெறியில் சுழன்று கொண்டிருந்த தலைகளெல்லாம் அதற்குத் தலையாட்டின.

ஒரு வேளை அந்த வேலையைத் தாமே செய்யவேண்டி வரக்கூடும் என்ற யோசனையில்லாமல் அவசரமாக எல்லோரும் சம்மதித்தனர். கோழிக்கறியின் சுவையும், சாராயத்தின் வெறியும் அப்படிச் செய்ய வைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்வா கடதாசித் துண்டுகளைக் கிழித்தெடுத்து வரிசையாகப் பெயர்களை எழுதத் தொடங்கினான். குமாரலிங்கம் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்.

"மிஸ்டர் சமரக்கோன்........ சில்வா......... குமாரலிங்கம் ஜயசிங்க.....சிவதாசன்..... அபயசேகர....

"நா....நா......மகே நம தாண்ட எப்பா" (இல்லை இல்லை என்ரை பேர் போடவேண்டாம்) என்று அபயசேகரா கத்தியதைத் தொடரந்து எல்லோரும் அவனைத் திரும்பிப்பார்த்தனர்.

"ஓ. அபயசேகரா சொல்லிறது சரி, அவன்ரை பேரும் என்ரை பேரும் போடத் தேவையில்லை. நாங்க ரெண்டு பேரும் இறைச்சி சாப்பிடுறதில்லை...."

என்று தமிழில் சொல்லிய குணம் அதைச் சிங்களத்திலும் மறுபடி சொன்னான்.

இதற்குச் சில்வாவிடமிருந்து பலமான மறுப்புக் கிளம்பியது. விருந்து என்று எல்லோரும் ஒன்றாக வந்த பிறகு இப்படிப் பிரித்துக் கொள்வது தவறு என்று அவன் வாதிட்டான்.

குடியில் குழம்பியிருந்த ஏனைய தலைகளும் அதற்குத் தாளம் போட்டன. எஞ்சினியரும் அதே கருத்தைச் சொன்னவுடன் வேறு வழி இல்லாமல் குணமும், அபயசேகராவும் அமைதியடைந்தனர்.

"நீங்கள் உண்மையில் புண்ணியவான்கள் என்றால் உங்கள் பெயருக்குச் சீட்டுவராது" என்று புதிய தத்துவம் பேசினான் சிவதாசன்.

எல்லோருடைய பெயர்களும் எழுதப்பட்டு ஒவ்வொரு சீட்டும் தனித்தனியே சுருட்டி ஒரு தட்டில் போடப்பட்டது. சில்வா அடுத்த வீட்டிற்கு ஓடிப்போய் ஒரு சிறுமியைக் கூட்டிவந்தான்.

ஆவலோடும் நடுக்கத்தோடும் எல்லோரும் குழுமிநிற்க அந்தச்சிறுமி பிஞ்சுக் கரங்களால் ஒரு சீட்டை எடுத்து எஞ்சினியரிடம் கொடுத்துவிட்டு ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவந்த கண்களால் எல்லோரையும் ஒருதடவை பார்த்துவிட்டு அந்தச்சீட்டை மெதுவாகப் பிரித்து வாசித்தார் அவர்.

"குணம்!"

'திடுப்' என்று ஒரு கணம் நின்றுவிட்டு மறுபடி படபடவென்று அடித்துக் கொண்டது குணத்தின் இதயம். அப்படியே மயக்கம் போட்டு விழுந்து விடுவேனோ என்று நினைத்தான் அவன்.

"கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்" என்ற திருமுறைப் பாடலின் அடிகள் அவன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து புறப்பட்டு ஓங்காரமாக அவன் செவிகளுக்குள் ஒலித்தன.

'ஓ!' என்று மற்றைய யாவரும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் கைகொட்டியபடி கூத்தாடினார்.

'குடிவெறியும் புலாலுணவும், வாழ்வில் நினைத்தே அறியாத எனக்கு இது என்ன சோதனை' என்று எண்ணிக் கலங்கியபடி,

"என்னை விட்டிடுங்கோ. நான் பார்ட்டிக்கும் நிற்கேல்லை. எனக்கு ஒண்டும் வேண்டாம். நான் போறன்" என்றபடி புறப்பட்டான்.

அவனைப் போகவிடவில்லை அவர்கள். எல்லோருமாக அவனைச் சூழ்ந்து நின்று தடுத்தனர்.

"எப்படியாவது இண்டைக்குக் கோழியைச் சரிப்பண்ணித் தந்தால்தான் போகலாம் என்று 'கேரோ' செய்தனர்.

அவன் கெஞ்சி மன்றாடினான். அவன் கெஞ்ச அவர்கள் மிஞ்சினார்கள்.

சாராயம் பருக்குவோமென்றார்கள். மீன்கறியை வாய்க்குள் திணிப்போமென்றார்கள். முட்டையை உடைத்து வாய்க்குள் ஊற்றுவோ மென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் தப்பமுடியாமல் போய்விட்டது. கோழியைக் கொலை செய்தால் அவன் தன் இஷ்டப்படி நடக்கமுடியும். அல்லது அன்றைக்கு அவன் தன்னுடைய வாழ்க்கை முறையை மாற்றி ஒரு குடிகாரனாக, ஒரு மாமிச பட்சணியாக மாறவேண்டிவரும் என்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

குணம் தனக்குள் சிந்தித்தான்.

"கடமையைச்செய் பலனை எதிர்பாராதே. நீ செய்யும் செயல்களின் விளைவுகள், பிரதிபலன்கள் யாவற்றையும் நீ எனக்கே அர்ப்பணித்துவிடு. உன்னைப் பாவ புண்ணியங்கள் தீண்டா"

என்ற கண்ணனின் வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தன.

அவன் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

இன்று அவன் செய்யப்போகும் பாவத்தில் அவனுக்கு எந்தவித பங்குமில்லை, எல்லாப் பாவமும் அவர்களையே சாரப்போகிறது.

மாமிசம் உண்பவர்கள் இருப்பதால்தான் உயிர்களைக் கொல்பவர்கள் உருவாகிறர்கள். உயிர்களைக்கொலை செய்பவர்கள் வேறு தொழில் இல்லாமல் அல்லது ஏதாவது நிர்ப்பந்தங்களின் பேரில் கொலை செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படலாம். ஆனால் புலாலுண்பவர்கள் புலாலை விரும்பியே உண்கிறார்கள். எனவே கொல்பவர்களுடைய பாவங்களையும் சேர்த்து உண்பவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். அவர்களுடைய பாவங்களை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

நிச்சயமான தீர்மானத்துடன் கோழிச்சாவலை நோக்கி எழுந்து நடந்தான் குணம்.

ஆவலோடு அனைவரும் சுற்றிவளைத்து நின்று அந்தப் பாவச் செயலை எப்படிச் செய்யவேண்டுமென அவனுக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் பங்குக்குரிய பாவத்தைப் பகிர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிற்று. அருவருப்போடு முகத்தைச் சுழித்துக்கொண்டு உடனேயே அங்கிருந்து வெளியேறிய அவனை,

"குணம் நீ சாப்பிடேல்லையே?" என்று யாரோ கேட்டார்கள்.

"நான் இன்னும் மூண்டு நாளைக்குச் சாப்பிடமாட்டன்" என்று சொல்லிக்கொண்டு நடந்தான் குணம்.

*ஈழமுரசு 11-03-1984.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கேறாத ஆசைகள்

"வேலவரே உமைத் தேடி ஒரு மடந்தை
விடியுமளவும் காத்திருக்கிற வகை என்ன? வேலவரே!"

அந்த பைரவிராகப் பதம் பக்கவாத்திய சகிதமாகக் கணீரென்ற குரலில் மிதந்து வருகின்றது.

சபை கொள்ளாத கூட்டம். ஆனால், அவ்வளவு பேரும் ஆடாமல், அசையாமல், அரவமேதுமில்லாமல் மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

சுபாஷினி மேடையில் ஆடிக் கொண்டிருக்கிறாள்.

இசையரசி சந்திராவின் குரலில் ஏக்கமும், கனிவுமாக இனிமை குழைந்து நின்றது. அதன் பாவம் சுபாவின் முகத்திலும் அபிநயங்களிலும் பிரதிபலித்தது.

திடீரென மிருதங்க வித்வானின் அழுத்தமான தீர்மானத்தில் திடுக்குற்ற சுபாவை நோக்கிக் கலகலவென்று சிரித்தாள் அவள் தோழி தேவகி.

மேடையையம் சபையையும் பாடகியையும் காணாமல் திகைத்தவளைக் கிண்டல் செய்தாள் தேவகி.

"என்ன சுபா ! பகற்கனவு காணுறியோ? நானும் வந்து இவ்வளவு நேரமாய்ப் பக்கத்திலை இருக்கிறன். கண்கள்கூட மூடாமல் முளிச்சபடி முகட்டு வளையைப் பார்த்தபடி அப்பிடி என்ன கனவு?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கத்துடன் சிரித்தாள் சுபாஷினி. விழித்தபடியே காணும் இத்தகைய பகற்கனவு புதியதல்ல! அவள் நடனம் கற்கத் தொடங்கிய நாளிலிருந்தே இப்படி ஒரு லட்சியக் கனவு அவளுக்கு.

"என்ன காதற் கனவோ?"

கையைப்பிடித்து இழுத்தபடி காதில் குசுகுசுத்தாள் தேவகி.

"அப்படியெல்லாம் இல்லை தேவகி. காதல் கனவு காணிற பருவம்தான். எண்டாலும் எனக்கொரு இலட்சியக் கனவு இருக்கிறதாலை நான்..............."

"அதென்ன இலட்சியக் கனவோ?"

"நான் ஒரு நாட்டியப் பேரரசியாய் வந்து உலகப் புகழ்பெற்று...."

அவளது அழகிய பெரிய கண்கள் மேலும் விரிந்து முகம் கொள்ளாமல் பரந்து நிற்க, அந்தக் கண்களில் ஏக்கமும் கனவும் நீந்த சுபாஷினி சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அந்தக் கலையில் அப்பிடி ஒரு லயிப்பு.

சின்னஞ்சிறு வயதில் வானொலிப் பாடல்களைக் கேட்டுக் கொண்டு தளிர்ப் பாதங்களைத் தூக்கி ஆடுவதும், பாடசாலையில் பாலர் நடனங்களில் அபிநயம் பிடிப்பதுமாக அவளுடைய ஆர்வம் வெளிப்பட்டபோது தனது தகுதியையும் மீறி அவளை நடன வகுப்பில் சேர்த்துவிட்டார் அவளது தந்தை.

பன்னிரண்டு வயதில் ஆரம்பமான நடனப் பயிற்சி இந்த ஏழு வருடங்களில் அவளை ஒரு திறமையான நர்த்தகியாக்கி விட்டிருந்தது. வெறும் தொழில் ரீதியாக நடனத்தைக் கற்பிக்காமல் சுபாவினுடைய ஆர்வத்தையும் ஆற்றலையுமே தனக்குக் கிட்டும் மேலான சன்மானமாகக் கொண்டு கற்பித்தவள் கீதாஞ்சலி.

சுபாவின் குடும்பத்துடன் நெருங்கிப் பழகி அவர்களது ஏழைமை நிலையை உணர்ந்தவள் கீதாஞ்சலி. தன்னுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைமையால் தனது திறமைகள் பிரகாசிக்க முடியாமல் போய்விட்ட ஏக்கம் கீதாஞ்சலிக்கு உண்டு. தன் மாணவியாவது நன்கு பிரகாசிக்க வேண்டும் என்கின்ற நல்லெண்ணம் சுபாவின் திறமைக்கு மெருகூட்ட வகை செய்தது.

இப்போதெல்லாம் சுபாவின் இதயத்தை ஆக்கிரமித்திருந்தது அவளது நடன அரங்கேற்றம் பற்றிய கனவுதான். ஓர் அரங்கேற்றம் செய்வதற்குத் தேவையானதைக் காட்டிலும் அதிக திறமையும் பயிற்சியும் சுபாவிடம் உண்டு என்று ஒருநாள் கீதாஞ்சலி கூறியது அப்படி ஒரு கனவிற்கு வித்திட்டது அவள் அடிமனத்தில்.

"தோழியர் இருவருமாக என்ன மந்திராலோசனை நடக்கிறது"

என்று கேலி பேசிக்கொண்டே வந்தாள் கீதாஞ்சலி.

"உங்கடை மாணவி கனவுலகத்திலைதான் சஞ்சரிக்கிறது வழக்கம். நான்தான் அவளைத் திரும்பவும் இந்த உலகத்துக்குக் கொண்டு வந்திருக்கிறன்" என்றாள் தேவகி.

"அதென்ன கனவுலகம்?" என்று சிரித்தாள் கீதாஞ்சலி.

"இலட்சியக் கனவு" என்று மொழிந்த சுபா தேவகியைப்பார்த்து,

"இனி நாங்கள் ரெண்டு பேரும் கனவுலகத்துக்குப் போகப் போறம். உனக்கு அது சரிப்பட்டு வராது. நீ நடையைக் கட்டலாம்" என்று அவளைக்கிளப்பி அனுப்பிவிட்டு கீதாஞ்சலியிடம் குழைந்தாள்.

"டீச்சர் .... என்ரை அரங்கேற்றம்........."

"சுபா, அரங்கேற்றமெண்டிறது அவ்வளவு சாதாரணமான விஷயமில்லை....."

"நீங்க தானே டீச்சர் சொன்னநீங்கள். நான் அரங்கேற்றத்துக்கு வேண்டிய தெல்லாம் படிச்சிட்டனெண்டு....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாவின் கண்கள் கலங்கித் துடித்தன. அழுகை வந்துவிடுவேன் என்று பயம் காட்டியது. கீதாஞ்சலிக்கு அதைப் பார்த்ததும் இரக்கமாக இருந்தது.

"அடி அசடே, நான் அதையே சொன்னனான்?"

ஆதரவாக அவள் கையைப் பற்றினாள் கீதாஞ்சலி.

"உன்னுடைய திறமையைப் பற்றிச் சந்தேகப்பட ஆருக்கும் தகுதியில்லை. ஆனால், அரங்கேற்றம் எண்டிறது கலைத் திறமையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்லவே! பொருளாதாரத் தகைமையும் அதுக்கு வேணும். சுபா! நாங்கள் ஏழைகள். எங்கடை ஆற்றல்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திறதுக்குக்கூட வழியில்லாதவை நாங்கள்......."

தன்னுடைய திறமையில் தன் குரு வைத்திருக்கும் நம்பிக்கை அவளுக்கு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. தங்கள் ஏழைமையின் இயலாமையை அவள் எடுத்துக்கூறினாலும் தானும் அதேவர்க்கம் தான் என்ற உணர்வோடு தனக்கு ஆதரவாகக் கதைத்த பாங்கு அவளிடம் மேலும் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியது.

"என்ன டீச்சர், அரங்கேற்றத்துக்கு அவ்வளவு கனக்கச் செலவு வருமோ?... கொஞ்சம் சுருக்கமாய் எங்களாலை இயண்டளவுக்குச் செய்யலாம் தானே."

"சுபா உன்ரை கனவுகள் எனக்குத் தெரியும், ஊருலகம் புகழவேண்டும். பல மேடைகளில் உன்ரை நிகழ்ச்சி நடக்க வேண்டும். வெளிநாடுகளுக்குப் போகவேண்டும் எண்டெல்லாம் நீ நினைக்கிறாய். அதெல்லாத்துக்கும் இந்த அரங்கேற்றம் ஒரு பிளளையார் சுளி மாதிரி இருக்கவேணும்தானே.

"அதினாலை பெரிய மண்டபம் ஒழுங்கு செய்ய வேணும். விளம்பரங்கள் செய்ய வேணும். "ஹொஸ்ரீம்" தைக்க வேணும், பெரிய பிஸ்னஸ்காரர், கலாச்சார அமைச்சு ஆக்கள், அரசியல்வாதிகள், இவையளையெல்லாம் பிடிக்கவேணும்..... மலர் அடிக்கவேணும், கார்ட் அடிக்கவேணும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிடியெல்லாம் பாரத்தால் ஒரு பத்தாயிரமெண்டாலும் வேண்டாமே?"

டீச்சரையே மலைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபா. ஏக்கம் மிகுந்த அவள் விழிகளை உற்றுப் பார்த்தபடி மௌனமாகச் சில கணம் இருந்த கீதாஞ்சலி அவள் கரங்களைப் பற்றியபடி சொன்னாள்.

"நான் உனக்கு டீச்சர் மட்டுமில்லை சுபா, உன்ரை குடும்பத்திலை நெருங்கிப் பழகினவள். உங்கடை குடும்பப் பிரச்சினை எல்லாம் தெரியும். உன்ரை அக்காவுக்கு இப்ப கலியாணப் பேச்சு நடக்குது. இப்ப அவவின்ரை கலியாண வீட்டுக்கே அப்பா ஆயிரமாயிரமாகக் கடன்படப் போகிறார். அதுக்கிடையிலை அரங்கேற்றத்திற்கென்று இன்னொரு பத்தாயிரம் கடன்படவேண்டிய நிலையென்றால்..... நான் எப்படி சுபா.......... உனக்கு அப்படியொரு ஆசையைத் தூண்டலாம்?"

"உண்மைதான் ரீச்சர், ஆனால் நான் கொஞ்சக் காசு சேர்த்து வைத்திருக்கிறன். டியூசன் கொடுத்தும் கோழிவளர்த்தும் தையல் வேலையிலுமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்த்து வைச்சிருக்கிறன்."

"சரி சுபா, நீ வீட்டிலை கதைச்சு யோசிச்சுக்கொண்டு வா, நானும் உனக்கு அரங்கேற்றத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யிறன்"

இருவரின் உள்ளங்களிலும் ஒரு நிறைவு தங்கப் பிரிந்தனர்.

❀❀ ❀❀ ❀❀

அப்பா மிகுந்த சோர்வோடுதான் வீட்டுக்கு வந்தார். அம்மாவின் ஆதரவான பேச்சும் சூடான தேநீரும் அவர் ஆயாசத்தை ஓரளவு தீர்த்தன. அக்காவின் முகம் அவர் கண்களில் பட்டபோது தமது சோர்வு ஒரு பொருட்டாகப் படவில்லை. அந்த ஏக்கம் நிறைந்த விழிகளில் இனிமை தங்க வைப்பதற்காகத் தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தகும் என்று நினைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடைய கவலைகள் களைப்புக்களையும் சுபாவினுடைய கலகலப்பான பேச்சுக்களும் சிரித்த முகமும்தான் மாற்றி நிறைவளித்தன.

நேற்று வந்த கல்யாணப் பேச்சு விஷயமாய்த்தான் அப்பா போய் வந்தார். தரகர் முத்துக்குமாருவில் இவர்களுக்கு நல்ல நம்பிக்கை. அதனால்தான் அவர் கொண்டு வந்த சம்பந்தத்தில் இறங்கினார்கள்.

இப்பொழுது சீதனவிஷயத்தில்தான் சிறிது இழுபறி.

❀❀ ❀❀ ❀❀

அரங்கேற்றத்துக்கான ஆயத்தங்கள் வலு மும்முரமாகத் தொடங்கி விட்டன. நாள் முழுவதும் நடனப் பயிற்சியிலே சுபாவின் பொழுது கழிந்தது. கீதாஞ்சலியும் தனது மற்றைய அலுவல்களை ஒதுக்கி வைத்துவிட்டு இவளைப் பயிற்றுவதில் முழுமூச்சாக ஈடுப்டாள்.

"சுபா நானும் படிக்கிற காலத்திலை என்ரை அரங்கேற்றத்தைப் பற்றி நிறையக் கனவு கண்டனான். ஆனால் அது நிறைவேறாமல் போட்டுது. அந்த ஏமாற்றத்தை இலகுவில் மறக்க என்னாலை முடியேல்லை. ஆனால் உன்ரை அரங்கேற்றத்திலை நான் என்ரை கவலையைத் தீர்த்துக் கொள்வன். இந்த நிகழ்ச்சியாலை சந்தோஷப்படுகிற முதல் ஆள் நான் தான்"

என்று பெருமையோடும் மகிழ்ச்சியோடும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள் கீதாஞ்சலி.

சுபாஷினியின் ஆசைப்படி சங்கீத பூஷணம் சந்திரா பின்னணி பாடுவதற்குச் சம்மதித்து விட்டாள். பக்கவாத்தியக் காரர்களும் தயாராகி விட்டனர். இடையிடையே ஒத்திகைகளும் வலு மும்முரமாக நடைபெற்றுவந்தன.

சுபா மறுபடியும் கனவுலகத்தினுள் மூழ்கிக் கொண்டிருந்தாள். நடனப் பயிற்சி நடைபெறும் போதே அவள் அரங்கேற்றம் நடைபெறுவதாகத்தான் நினைப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன தேவகி கண்டு கனநாள் ஆச்சுது. வா" என்று வரவெற்றாள் சுபா.

"இஞ்ச வந்தென்ன புண்ணியம் நீ என்னைத் திரும்பியும் பார்க்கமாட்டாய். 'தா தெய் ததிங்கிண தொம்' எண்டு ஒரே டான்ஸ் பயித்தியத்திலை இருப்பாய்"

பொய்க் கோபத்துடன் சொன்ன தேவகியை முறைத்துவிட்டு,

"என்ன செய்யிறது தேவகி எனக்கு அப்படியொரு இலட்சிய வெறி. ஒரு மாதிரி என்ரை ஆசை நிறைவேறுகிற நாள் வந்துகொண்டிருக்கு. ஆனால் நீ வந்தால்தானே நான் என்ரை கற்பனையுலகத்திலையிருந்து நினைவுலகத்திற்கு வரமுடிகிறது. அதற்காகவென்றாலும் நீ வந்துபோகவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தாள் சுபா.

"அதுதானே வந்திருக்கிறன். ஆனால் அங்கை பார் கார் வந்திட்டுது. உன்ரை றிகேசலுக்கு ரீச்சரும், பாட்டுக்காரர் எல்லாம் வருகினம் இனி நான் என்ன கதைக்கிறது."

"பரவாயில்லை கொஞ்சமிருந்து என்ரை ஆட்டத்தைப் பார்த்துவிட்டுப் போவன்"

சிறிது நேரத்தில் அவளுக்கு மிகப் பிடித்தமான அந்தப் பதம் ஒலிக்க அவள் பாதங்கள் நடனத்தில் லயிக்கின்றன.

"வேலவரே உமைத் தேடி ஒரு மடந்தை விடியுமளவும் காத்திருக்கிற வகை என்ன"

❀❀ ❀❀ ❀❀

சுபாவின் அக்காவிற்குக் கல்யாணம் முற்றாகிவிட்டது. அடுத்த இரண்டு வாரங்களில் திருமணப் பதிவிற்கு நாள் வைத்தாகி விட்டது. வீடுவளவும் தந்து நகையும் போட்டு முப்பதினாயிரம் ரூபா காசும் தரவேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நகைகள் முழுவதையும் போட்டு இருக்கும் ஒரே வீடுவளவையும் கொடுப்பதற்கு அப்பா தயார். ஏதோ உயிர் பிரிவதற்கிடையில் உழைத்துச் சுபாவையும் எப்படியாவது கரையேற்றிவிடலாம் என்று அந்த ஏழைத் தந்தையின் நம்பிக்கை. எப்படியாவது இருப்பவற்றைக் கொடுத்து ஒரு குமரையாவது கரைசேர்த்துவிட வேண்டுமென்று அவரது ஆசை. ஆனால் அவர்கள் கேட்ட முப்பதினாயிரம் தான் அவரைத் திக்குமுக்காட வைத்தது.

தரகர் நடந்தார். அப்பா நடந்தார்.

பெண்வீட்டுக்கும் மாப்பிள்ளை வீட்டுக்கும் இடையில்தான்.

மாப்பிள்ளை வீட்டாரின் தலைகள் பக்கவாட்டில் ஆடின. அசையாமல் நின்றன.

உச்சாணிக் கொப்பில் ஏறின, இறங்கின. மெல்ல மேலும் கீழும் ஆடின.

கடைசியில் ஒரு வாறாகப் பத்தாயிரத்துக்குச் சம்மதித்தார்கள்.

சுபாவுக்காகவும் தமது ஜீவனத்துக்காவும் வைத்திருந்த மிச்சசொச்சக் காணிகளை ஈடுவைத்தும் கைமாற்றுக் கடன்களாகவும் திரட்டி பத்தாயிரம் புரண்டது. திருமணப் பதிவுக்கு நாளும் வைத்தாகி விட்டது.

❀❀ ❀❀ ❀❀

இன்னும் ஒருமாதம் தான் உண்டு அரங்கேற்றத்திற்கு. அசுரசாதகம் செய்துகொண்டிருந்தாள் சுபா. பக்கவாத்தியங்கள் நல்ல ஒத்துழைப்பு. கீதாஞ்சலிக்கு மிகுந்த திருப்தி.

❀❀ ❀❀ ❀❀

வெளியே தரகரும் அப்பாவும் விவாதிக்கும் சத்தம் அதிகமானாதால் சுபாவின் பயிற்சி தடைப்பட்டது. என்னவென்று பார்க்க வெளியே வந்தாள். அப்பாவின் முகத்தில் கவலையும் ஆத்திரமும் பீறிட்டு நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கண்கள் கலங்கி உதடுகள் துடிக்க நின்றிருந்தாள்.

அக்கா முகத்தைக் கவிழ்த்தபடி நின்றாள்.

திகைத்து நின்ற சுபாவிற்குத் தரகர்தான் விசயத்தை உடைத்துச் சொன்னார்.

"மாப்பிள்ளைப் பெடியன் வெளிநாட்டுக்குப் போற யோசனையிலை ஒரு ஏஜென்சிக்குப் பத்தாயிரம் ரூபா கொடுத்து ஏமாந்துபோனான் தங்கச்சி. அந்தக் கடன்கள் இப்ப அவசரமாய்த் தீர்க்கவேண்டி இருக்கிறதாலை எழுத்திலண்டு இன்னொரு பத்தாயிரம் ரூபா டொனேசனாய்த் தரவேண்டுமாம்"

"இது என்ன அநியாயம் மாமா? எலலாம் சரி என்று நாளும் வைச்சாப்பிறகு...."

"அதுக்கென்ன தங்கச்சி செய்யிறது? நானும் சொல்லித்தான் பார்த்தனான். அவைக்கு உடனை பத்தாயிரம் வேணும். வேறு இடத்திலை இருந்தும் பேச்சுக்கால் வந்திருக்கு. அவை உடனை முற்றுச் சொல்லட்டாம்"

சுபா தந்தையைத் திரும்பிப் பார்த்தாள். களையிழந்த அந்த முகத்தைப் பார்க்கமுடியாது திரும்பினாள். ஒரு கணம் நின்று நிதானித்தாள். உள்ளே விரைந்தவள் திரும்பி வந்தாள்.

"அப்பா இந்தாங்கோ இதிலை ஆறாயிரம் ரூபா இருக்கு மிச்சத்துக்கு என்ரை சங்கிலியை வித்தால் காணும்"

என்று சொல்லிக் கொண்டு தன் சங்கிலியைக் கழற்றினாள்.

அப்பா திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"உன்ரை அரங்கேற்றத்திற்கு என்னம்மா செய்வாய்?"

அவர் வார்த்தைகள் குழறின. அக்கா வார்த்தைகள் இன்றி ஓடிவந்து சுபாவின் கையைப் பிடித்தாள். அவளுக்கு அழுகை வெடித்துக் கிளம்பியது. அம்மா சேலைத் தலைப்பில் முகத்தைப் புதைத்தபடி விம்மினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரகரின் கண்கள்கூடக் கலங்கின.

சுபா நிதானமாகச் சொன்னாள்,

"அப்பா, என்ரை இலட்சியம் கனவாயே இருக்கட்டும். சொன்ன நாளிலை எழுத்தை நடத்தச் சொல்லுங்கோ. நான் பொத்திப் பொத்திச் சேர்த்து வைத்திருந்த காசு இப்படியொரு நல்ல காரியத்துக்குப் பிரயோசனப்படுகிறதெண்டு எனக்குச் சந்தோஷம்.

"ஒரு பெண்ணின் நாட்டியம் அரங்கிலை ஏறுகிறதைவிட ஒரு கன்னியின் கழுத்திலை தாலி ஏறுகிறது புனிதமானது......."

அவள் குரல் தளதளத்தது.

எங்கோ தொலைவில் இருந்து அவளுக்குப் பிடித்தமான அந்த பைரவி ராகப் பதம் காற்றில் மிதந்தது.

"வேலவரே உமைத் தேடி ஒரு மடந்தை விடியுமளவும் காத்திருக்கிற வகை என்ன? வேலவரே......."

*வீரகேசரி 18-11-1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை 'மகா'காட்டும் உதவி

அந்தத் தொழிற்சாலை அலுவலக வாசலில் தயங்கியவாறு நிற்கின்றனர் அந்த இளம் தம்பதியினர்.

அலுவலகம் அமைதியாக இருக்கிறது. கனகராஜா மிக நிதானமாகத் தமது கடமைகளில் மூழ்கியிருக்கிறார். அருகில் தொழிற்சாலை இயந்திரங்கள் இயங்கும் ஓசை பெரிதாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

கனகராஜாதான் தொழிற்சாலையின் உரிமையாளர். நிர்வாகியும் அவரே. சுதந்திரமாக இயங்கும் ஒரு தனியார் துறைத் தொழில் நிறுவனம் அது.

வாசலில் ஏதோ நிழல் ஆடுவதை உணர்ந்து நிமிர்ந்த கனகராஜா இளம் தம்பதியைக் கண்டார்.

"வாங்கோ இப்படி இதிலை இருங்கோ" என்று அவர்களை அவர் வரவேற்று முன்னால் இருந்த ஆசனத்தில் அமரச் செய்தார்.

வாசலில் காவலாளி பின்னர் பியோன் என்று பலருக்குப் பல்லுக்காட்டி மணிக்கணக்கில் காத்திருந்து அதன் பிறகுதான் முதலாளியைக் காணவேண்டிவரும் என்று எதிர்பார்த்து வந்த அந்தத் தம்பதிக்கு எத்தத் தடையோ காவலோ இல்லாமல் நேரடியாக முதலாளிக்கு முன்னால் வந்திருக்க முடிந்தது பெரிய அதிசயமாக இருந்தது.

முதலாளி கொஞ்ச நேரம் தனது அலுவல்களை அவசரம் அவசரமாக முடித்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன விசேஷம் ! நீங்கள் எங்கையிருந்து வாறியள்?" என்று விசாரித்தார்.

"நான் ஆவரங்கால் சுந்தரமூர்த்தியின் மகள்.........."

"ஓ! எங்கடை சுந்தரத்தாற்ரை பெடிச்சியே? மெத்தச் சந்தோஷம். இப்ப ஆவரங்காலிலை இருந்துதானே வாறியள்? ............ அப்பா சுகமாக இருக்கிறாரா? அதுசரி எப்ப கல்யாணம் நடந்தது? எனக்குக்கூட சுந்தரம் அறிவிக்கேல்லை .............."

என்று சரமாரியான கேள்விகளுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார் கனகராஜா.

வந்திருந்தவர்களின் முகத்தில் மகிழ்ச்சி. அவர்களும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர்.

புதுத் தம்பதிக்கான கலகலப்பு, மினுமினுப்பு, மெருகு ஒன்றையும் அவர்களிடம் காணவில்லை என்பதைக் கனகராஜா சாடையாக அவதானித்தார். ஏதோ கவலையும் வறுமையும் குடிகொண்ட முகங்களாக, வாட்டமும் ஆயாசமும்தான் அங்கு மேலே தெரிந்தன.

சுந்தரமூர்த்தியர் சாதாரண ஆளில்லை. சமாதான நீதவான். பெரிய சமூகசேவகர். ஓரளவு வசதி படைத்தவர். கனகராஜாவின் நண்பர். ஆனால், இப்போது சில காலமாகத் தொடர்பு விட்டுப் போயிருந்தது.

கனகராஜா கலகலப்பாகத் தங்களிடம் பேசத் தொடங்கியதும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஏற்படத்தான் செய்தன அவர்களுக்கு.

ஆனால் அத்தனை கேள்விகளும் தொடர்ந்து சரமாரியகப் பறந்து வந்தமை கொஞ்சம் திக்குமுக்காட வைத்தது.

"நாங்கள் இப்ப சாவகச்சேரியிலை இருந்து வாறம். இப்ப அங்கைதான் இருக்கிறநாங்கள்"

என்று ஒட்டுமொத்தமான பதிலைக் கூறிவிட்டு, நேரடியாக விஷயத்திற்கு நழுவினாள் அந்தப் பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கடை 'இன்டஸ்றியிலை' வேக்கன்ஸி இருக்கென்று கேள்விப்பட்டநாங்கள். நான் ஏ.எல். பாஸ்பண்ணிப்போட்டு ரைப்ரைட்டிங்கும் படிச்சிட்டு இருக்கிறன். அதுதான்.......... எனக்கும் ஒரு வேலை கிடைச்சுதெண்டால்.........."

"எங்களுக்கு ஆக இரண்டு பேர்தான் பிள்ளை வேணும். அதோடை சிபார்சு அது இது எண்டெல்லாம் நான் பார்க்கிறதில்லை. நல்ல நம்பிக்கையான பிள்ளையாய்த் திறமையுள்ள பிள்ளையாய் வேணும்......... எங்கை பார்ப்பம் சேர்ட்டிபிக்கட்டுக்களை..." என்று கையை நீட்டினார்.

நம்பிக்கையோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சான்றிதழ்கள் எல்லாவற்றையும் கொடுத்தனர். அவற்றை வாங்கிப் பார்த்துக்கொண்டே,

"அப்பாவையும் கனகாலம் சந்திக்கேல்லை....... சுகமாய் இருக்கிறார்தானே?"

என்று மறுபடியும் வினவினார்.

அவள் தடுமாற்றத்துடன் "ஓம்" என்றாள்.

"அது சரி பிள்ளை........... மறந்திட்டன்............ போனமாசமும் ஏதோ 'காட்' போட்டிருந்தவர். நான் கொழும்பிலை நிண்டதிலை வரமுடியவில்லை........... பிறகும் பல சோலியிலை மறந்திட்டன்................ அதென்ன சாமத்தியச் சடங்கோ................ வீடுகுடிபூரலோ நடந்தது .......................... என்ன?"

என்று கேட்ட கனகராஜாவைப் பார்த்து மிரண்டபடி

"என்ன........... என்னெண்டு தெரியேல்லை..."

என்று இழுத்தாள் அவள்.

முதலாளி திகைப்போடு. "உதென்ன பிள்ளை ?............. அப்ப நீர் ..........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் இப்ப அப்பாவோடை கொண்டாட்டம் இல்லை"

இதைச் சொன்னபோது ஒரு தடுமாற்றம், தயக்கம், கலக்கம், அவற்றோடு பயம் கலந்த ஒரு வெட்கமும் குமிழியிடத் தலை குனிந்திருந்தாள் அவள்.

அவன் இதில் சம்பந்தம் இல்லாதவன் போல எங்கோ தொலைவில் நோக்கியவாறு இருந்தான். இதைக் கேட்டபோது ஏற்பட்ட அதிர்ச்சியை மிக இலகுவில் ஆசுவாசப்படுத்திக்கொண்டு மெல்லிய புன்சிரிப்பு உதடுகளில் இழையோட அவளை உறுத்து நோக்கினார் கனகராஜா முதலாளி. அவருக்கு இப்போது எல்லாம் புரிந்தன.

"ஓஹோ, அப்ப உங்கடை கலியாணத்துக்குப் பிறகு அவரோடை கொண்டாட்டம் இல்லையோ?"

"ஓம்"

"இது அவருக்கு விருப்பம் இல்லாத கலியாணமோ?"

"ஓம்"

"ஓ! அப்ப நீ வீட்டைவிட்டு ஓடிவந்திட்டாய்....." என்று நேரடியான ஒரு சொற்சாட்டையைச் சொடுக்கி அவள் மேல் விசுக்கி அவளைத் துடிதுடிக்க வைத்துவிட்டு நிதானமாக அவளை நோக்கினார் கனகராஜா.

அவனுக்கு ஆத்திரம் பரபரத்தது.

'ஓடிப் போனவள்' என்று இவர் ஏன் குத்திக் காட்டவேண்டும். வேலைதர விருப்பம் இல்லையென்றால் இல்லையென்று சொல்லிவிடலாமே. அதற்குமேல் இந்த வீண் கதையெல்லாம் எதற்கு?

பொங்கி வழியும் ஆத்திரத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு பொறுமையாக இருந்தான் அவன். அப்படியே எழுந்து போய்விடலாமா என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் முதலாளி பக்கம் திரும்பவும் முடியாமல் தத்தளித்தபடி குனிந்திருந்த அவள் முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவந்து துடித்தது. கண்களில் திரண்டுவந்த கண்ணீர் முட்டித் ததும்பியது. அவர் மெல்லச் சிரித்துக்கொண்டு சொன்னார்.

"பிள்ளை இப்ப உன்னை அவமானப்படுத்த வேணுமெண்டோ, புண்படுத்தவேணுமெண்டோ எனக்கு ஒரு நோக்கமும் இல்லை. நீ உன்ரை அப்பருக்கு விருப்பமில்லாமல் கலியாணம் செய்ததைப்பற்றி நான் குறைசொல்லத் தயாராய் இல்லை. நீ செய்த பிழை அதல்ல. நான் உனக்கு இதை விளங்கப்படுத்திறதுக்காகத்தான் இப்பிடிக் கதைச்சநான்"

இபடிச் சொல்லி நிறுத்திவிட்டு அவர்கள் இருவரையும் பார்த்தார் முதலாளி.

இவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ளமுடியாமல் இருவரும் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர் தொடர்ந்தார்.

"நான்கூட என்ரை அப்பாவுக்கு விருப்பமில்லாமல்தான் கலியாணம் செய்தனான். ஆனால் என்ரை கையிலை நம்பிக்கை வச்சு என்ரை திறமையால்தான் படிப்படியாய் முன்னேறினனான்.

"எப்ப நீ அப்பாவை விட்டு வெளியேறினியோ அண்டைக்கே அப்பாவின்ரை நல்ல பெயரை உன்னுடைய தேவைக்குப் பயன்படுத்த உனக்கு உரிமையில்லை. அதுதான் நீ செய்த பிழை.

"நீ நேர்மையாய் ஒரு அப்பிளிக்கேசனை எனக்கு எழுது. நான் பரீட்சை வைத்து அதிலை நீ தேறினால் வேலை தாறன். உன்ரை திறமையைக் காட்டி நீ முன்னேறு. அதை நான் வரவேற்கிறன். ஆனால் உன்ரை அப்பாவின்ரை பெயரை நீ பயன்படுத்தாதை. சரி போட்டு வாங்கோ எனக்கு வேலையிருக்கு" என்று எழுந்தார் அவர்.

*தினகரன் 02-03-1986*
*வீரகேசரி 12-10-1986*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

ஊரில் நடந்த கல்யாண வீட்டிற்குக் குடும்பத்தோடு போக முடியவில்லை. போகாமல் விடவும் முடியாது. மிகவும் நெருங்கிய உறவினர்கள் வீட்டுக் கல்யாணம்.

அவனுக்குத் தனியே போகப் பிடிக்கவில்லை. ஆனால் அவளுக்கு பாடசாலையில் பரீட்சை சமயமென்பதால் லீவு எடுக்கவே முடியாமல் போய் விட்டது.

"இரண்டுபேரும் வேலைசெய்யிறதெண்டால் இதுதான் பெரிய கரைச்சல்" என்று அவள் புறுபுறுத்தாள்.

இவனை மட்டும் போய் வருமாறு வற்புறுத்தினாள். கடைசியில் ஒருவாறு இவன் மட்டும் புறப்பட்டுப் போனான்.

இவனது வீட்டிற்கு அருகில்தான் கல்யாண வீடு. வீட்டிலிருந்து இவனது சகோதரி, மைத்துனர், சகலன், சகோதரன், அவர் மனைவி, இளைய மைத்துனன் என்று எல்லோருமாகக் கல்யாண வீட்டில் கலந்து கொண்டதில் இவனது தனிமை உணர்வு போய்க் கலகலப்பாகக் கலந்து கொண்டான்.

ஆயிற்று, கல்யாண வீட்டின் களேபரங்கள் எல்லாம் முடிந்து இவர்கள் அனைவரும் வீடு திரும்பியபின் மாலையில் ஒரு வட்டமேஜை மாநாடு வழக்கம் போல் கூடியது.

"கல்யாணச் சாப்பாடு வலு திறம். ஆனால், சாம்பார்தான் சரியில்லை" அத்தான் விமர்சனத்தை ஆரம்பித்து வைத்தார்.

"எண்டாலும் பாயிசத்துக்கு மட்டும் நூறு மாக்ஸ் போடலாம்" இது இனிப்புப் பிரியரான இளைய மைத்துனனின் அபிப்பிராயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி சாம்பாரில் ஆரம்பித்து கூறைப்புடைவை, மேளக்கச்சேரி, பந்தல், சோடனை என்று பலவற்றுக்கும் தாவிக் கடைசியில் பெண்ணைப் பற்றிப் பேச்சு வந்தது.

"எண்டாலும் மாப்பிள்ளையின்ரை சிமாட்டுக்குப் பொம்பிளை தோதில்லை" இது அக்காவிடமிருந்து புறப்பட்ட வார்த்தை.

"ஏன்? பொம்பிளைக்கென்ன குறை? ஆள் கொஞ்சம் நிறம் குறைவு தான். அதுக்கென்ன? கறுப்பிலை அழகில்லையே" இது இவனுடைய பதில் வாதம்.

"அக்கா சொன்னது தான் சரி. ஆள் கறுப்பு மட்டுமில்லை ஒரே வலிச்சல். கன்னம்ரெண்டும் ஒட்டிப் போய்க் கிடக்குது" என்று மைத்துனர் மறுத்த போது இவனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. இவன் அதற்குப் பதிலாக....

"அது இனிமேல் மாப்பிளை வீட்டாரைப் பொறுத்தது. நல்ல வடிவாச் சாப்பிடக் குடுத்துச் சந்தோஷமாய் வைச்சிருந்தால் ஆறு மாதத்திலை ஆள் தளதளப்பாய் வந்திடலாம்" என்று சொன்ன போது,

"இவருக்குக் கண்ணாடிதான் போடவேணும். இந்தப் பொம்பிளையைப் போய் வடிவெண்டு சொல்லுறாரே" என்று இவனது சகலனும் வரிந்து கட்டிக் கொண்டு வந்த பொழுது இவனுக்கு 'ஏன் கருத்துரை சொல்ல வந்தோம்' என்றாகி விட்டது.

'ஒருவேளை இவர்கள் அழகு என்பதை மிகவும் அதி உன்னத நிலையிலிருந்து கணிக்கிறார்களோ?....'

எதையும் கணிப்பதில் ஒப்பீட்டு முறை இலகுவானது என்று இவன் கருதிக் கொண்டு இறுதி முயற்சியாக,

"அதெல்லாம் போகட்டும். மாப்பிளையின்ரை சகோதரி மாரைவிட இவள் வடிவோ இல்லையோ?" என்று இவன் கேட்டான்.

"அதுகளைப் பார்த்த உடனை ஒரு லக்ஷ்மிகரமாவது இருக்குது. தளதளவென்று நல்ல நிறமாய்...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யாரோ வார்த்தைகளை நீட்டும் போது இவனுக்கு எழுந்து ஓடி விடலாம் போலிருந்தது. அவன் மனதிற்குள் குமைந்தான்.

அழகுணர்ச்சி, கலையம்சம், ரசனை என்பன ஒவ்வொருவருக்கும் மாறுபாடாக இருக்கும் தான். ஆனால், இவ்வளவு பேருக்கும் அழகற்றவளாகத் தெரிந்தவள் இவனுக்கு மட்டும் அழகாகத் தெரிந்ததேன்?

வெறும் தசைப்பிண்டங்களாகத் தளதளவென்று விளைந்திருப்பதும் அவித்த மாவெள்ளையாகப் பளீரிடுவதிலும் தான் அழகு இருக்கிறதோ?

அவன் மணப் பெண்ணை ஒரு கணம் நினைத்துப் பார்த்தான்.

அந்தக் கருவிழிகள் - கரிய நிறமான அவளது முகத்திலேயே கரிய விழிகளாகப் பளபளக்கும் அந்தப் பெரிய விழிகள் - அவற்றின் படபடப்பு, அவற்றில் மிதந்து தெரியும் கனவின் லயிப்பு - நாணத்தின் சிலிர்ப்பு - இவை போதாதா அவளை அழகி என்று சொல்ல?

கொடி போன்ற அந்த மெல்லிய உடல் சரிந்து விடுமோ என்று பயப்படத் தக்கதாக அவள் மெல்ல அடியெடுத்து நடந்த அந்த நடை, பாதங்களில் விரல்கள் அமைந்திருக்கும் பாங்கு, மெல்லிய சிறிய உதடுகள் குவிந்து தாமரை மொட்டாகத் தோன்ற.... முகத்தாமரை மலரும்போது அந்த இதழ்த் தாமரையும் விரிந்து...... நிரைத்த வெண்பற்கள் பளீரிடும் போது உள்ளத்தில் ஏற்படும் சிலிர்ப்பு....

இந்த வர்ணனைகளை அவன் வாய்விட்டுச் சொல்ல முடியாது.

மணமகளைத் தனியே அழைத்துப் போய் தனித்தனியே ஒவ்வோர் அணுவாக ரசித்தவன் போல இப்படிச் சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் ஏற்படும் சிலிர்ப்பு என்று நினைத்தானே.... அதை இவன் வாய் விட்டுச் சொன்னால் அது பெண் சதை மீது ஆண் சதை கொள்ளும் சிலிர்ப்பாகத்தான் மற்றவர்களுக்குத் தோன்றுமே அல்லாமல் அழகினை ஆராதிக்கும் கலைஞனின் கண்களுக்கு ஒரு கணப் பார்வையில் இத்தனை விபரங்களும் தோன்றிவிடும் என்பதோ அல்லது இந்த சிலிர்ப்பின் பின்னனியிலுள்ள புனிதமான உபாசனையோ தோன்றாது என்பது அவனுக்குத் தெரியும்.

அழகு என்பதை அளவு கோல் கொண்டு அளந்து விட முடியுமா என்ன? 34 - 26 - 34 என்று அளந்து பார்த்து வண்ணத்தை உரைத்துப்பார்த்து, உடற் செழிப்பு, கட்டான தன்மை, கவர்ச்சி என்பவற்றை அளந்து பார்த்து விடலாம். ஆனால், உண்மையான எழில் என்பது ஒரே பார்வையில் கண்விழிகளைத் தாண்டிக் கருத்தினைக் கவர்ந்து இதயத் திரையில் படம் எழுதி விடுகிறது. ஏன் அது அழகாயிருக்கிறது என்பதற்குக் காரணங்களை அங்கு வரிசைப் படுத்திவிட முடியாது.

அவன் எதையும் சொல்ல வில்லை. நினைத்துக் கொண்டான். எப்படி அவர்களிடம் சொல்லலாம்?

முழு நிர்வாணமான ஒரு பெண்ணின் ஓவியத்தைக் கண்டவுடன் ஐயோ, ஆபாசம், அருவருப்பு என்று சாதாரண மக்கள் ஓடிவிடுகிறார்கள். அந்தப் படத்தைக் கண்டவுடன் அவர்களது கீழ்த்தரமான உணர்வுகள் கிளர்ந்தெழுகின்றன.

அதே ஓவியத்தை ஒரு கலைஞன் பார்த்தால் என்ன செய்கிறான்? அப்படியே நின்று விடுகிறான். அதனை அணுஅணுவாக ரசிக்கிறான். அவனது கலையுணர்வு மேலிடுகிறதல்லாமல் உடல் வேட்கை எழவில்லை. ஒரு கலைஞனின் பார்வைக்கும் சாதாரண மனிதனின் பார்வைக்கும் இது தான் வேறுபாடு.

தன் மனத்துக்கு அவன் தானே சமாதானம் தேடிக் கொண்டு அந்த ஓரிரு கணங்களை அந்தரமான மன நிலையில் நகர்த்தும் போது அம்மா அவனை இக்கட்டிலிருந்து விடுவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆற்றையேன் பெண்டிலைப் பற்றி உங்களுக்கேன் உந்த ஆராய்ச்சி? விட்டிட்டு வாங்கோ தேத்தண்ணி குடிக்க" என்று அவள் அழைத்தது மாநாட்டைக் கலையவைத்தது.

ஊரிலிருந்து திரும்பி வந்தவுடன் கல்யாண வீட்டுப் புதினங்கள் சகலதையும் ஆதியோடு அந்தமாக - மாப்பிளை அழைப்பிற்கு வந்த பெண்ணின் மைத்துனி உடுத்திருந்த சேலையிலிருந்து நாதஸ்வர வித்வான் பிரமாதமாக வாசித்த ஸகானா ராகம் வரை மனைவியிடம் அளந்த இவன் மணப் பெண்ணைப் பற்றி எந்தக் கதையும் பேசவில்லை. அவளுக்கோ முதலில் அறிய வேண்டிய விஷயம் அதுவாகத்தான் இருந்தது.

"அதெல்லாம் கிடக்கட்டுமப்பா, பொம்பிளை எப்பிடி? வடிவோ?"

அவள் வலியுறத்திக் கேட்ட போது.

"எனக்கென்னப்பா தெரியும் அதைப் பற்றி? அதை நீயே போய் பார்த்துக் கொள்" என்று சொல்லி நிறுத்தி விட்டான்.

இது அவளுக்கு வியப்பாக இருந்தது. தெருவில் போகும் போது கூட சாதாரணமாக,

"அதோ 'சிவசங்கரி' யின்ரை கதையளிலை வாறமாதிரிச் சாட்டை சாட்டையான பொம்பிளை ஒண்டு போகுது பார்" என்றோ அல்லது.

"இதுகளெல்லாம் தாங்களும் பெரிய அழகியள் என்டு பூசி மினுக்கிக் கொண்டு வருகுதுகளே..." என்றோ விமர்சனங்களை அனாயாசமாக அள்ளி வீசுபவன் இன்று மணப் பெண்ணைப் பற்றி எதுவுமே பேசாதது அவளுக்கு அதிசயமாக இருந்தது.

அவனைப் பொறுத்தவரை ஏற்கனவே நடந்து விட்ட சம்பவம் அவன் மனதைப் பாதித்து விட்டது ஒருபுறம் இருக்க இன்னொரு காரணத்தை உத்தேசித்தும் அவன் மணமகளைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனைவி எந்தவிதமான புறத்தாக்கங்கள் - தூண்டல்கள் எதுவுமில்லாமல் சொந்த அபிப்பிராயத்தின்படி அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு என்ன கூறுகிறாள் என்பதை அறிய வேண்டும் என்று அவன் ஆவல் கொண்டாண். அவன் மனத்தினுள் நடந்த விவாதத்திற்கான தீர்ப்பு அவளுடைய அபிப்பிராயமாக இருக்கலாம் என அவன் நம்பினான். அந்த நாளும் விரைந்து வந்தது.

அடுத்த வாரம் இவர்களது குடும்பத்தவர்கள் அனைவருமாக அந்தப் புதுமணத் தம்பதிகளுக்கு விருந்துபசாரம் செய்ய உள்ளதாகவும், இவர்களை வரும்படியும் கடிதம் வந்தது

இம்முறை இருவருமே போக முடிந்தது.

விருந்து தடபுடலாக நடந்தது.

விருந்தின் களேபரம் முடிந்தவுடனேயே இவன் தனியாகத் தன் மனைவியை அழைத்து மிகவும் சீரியசாக "பொம்பிளை எப்பிடி?" என்று வினாவினான்.

அவளுக்கு இப்போதும் திகைப்பு.

அன்றைக்கு அவள் கேட்ட அதே கேள்வி.

இவன் விடை சொல்லாத அதே கேள்வி!

ஏன் இவ்வளவு அவசரமாக இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

"ஏனப்பா? ஏதேன் அழகு ராணிப் போட்டி நடத்தப் போகிறியளே?"

"பகிடியை விட்டிட்டுச் சொல்லன்"

"அவளுக்கென்ன? நல்ல வடிவான பொம்பிளை. மாப்பிளைக்கு நல்ல தோது"

இவன் முகம் திருப்தியால் மலர்ந்தது. நிம்மதியான பெரு மூச்சுடன் மறுபடி கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாப்பிளையின்ரை சகோதரியளை விடவோ?"

"ஓ. அதுகளை விட இவள் கறுப்பாயும் வாடிப் போயும் இருக்கிறாள். எண்டாலும் ஒரு துறுதுறுப்பும் கவர்ச்சியும் இவளிலை இருக்குது"

"மெத்தச்சரி. பொம்பிளை மாப்பிளை போன உடனை உன்ரை சகோதரங்கள் எல்லாருக்கும் உந்த அபிப்பிராயத்தைச் சொல்லு. மிச்சக்கதையை நான் பிறகு சொல்லிறன்"

என்று கூறிச் சிரித்தபடி புதிரின் முடிச்சை இறுக்கினான் இவன்.

அவள் புதிரின் வியப்போடு உள்ளே விரைந்தாள்.

இவன் முகத்தில் திருப்தியும் ஆனந்தமும் மிளிர்ந்தன.

நெஞ்சை நிமிர்த்தியபடி ராஜநடை நடந்தான் இவன்.

*வீரகேசரி 24-03-1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வைத்தியம்' பிடித்த சில மனிதர்களும். வைத்தியம் ஆக்கப்பட்ட ஒரு பெண்ணும்

"ஐயோ, என்னை அடிக்கிறாங்களே............ படுபாவிப் பயல்கள் கொல்லிறான்களே...."

என்று ஓலமிட்டு அரற்றும் குரல்கேட்டு நான் வெளி வாசலுக்கு வந்தேன்.

வீட்டு வாசல் முன் நிலத்தில் ஒரு பெண் தலைவிரி கோலமாக உட்கார்ந்திருந்தாள். ஆடைகள் அலங்கோலமாகக் கலைந்திருக்க அழுதுகொண்டு - கண்களும் முகமும் வீங்கிக் கிடக்க - மெலிந்த தோற்றத்துடன் அவள் காணப்பட்டாள். நடுத்தர வயதைக் கடந்திருப்பாள். அவளது அப்போதைய கோலம் கிழவிபோலத் தோன்ற வைத்தது.

'கேற்' றைத் திறந்து நான் வெளியில் வந்தபோது தூரத்தில் இரண்டொருவர் விரைந்து வருவது தெரிந்தது. இவள் திரும்பி அவர்களைப் பார்த்து விட்டு மேலும் பலத்த குரலில் அழுது கொண்டே மணலை அள்ளி அவர்கள் பக்கமாகத் தூற்றிக்கொண்டு.

"நாசமறுவான்கள்! துலைஞ்சு போவாரே! என்னை ஏன் கொல்ல வாறியள்? நான் உங்களுக்கு என்ன செய்தனான்......." என்று புலம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அவள் முகத்தை நன்கு கவனித்தேன்.

ஓ! அவள் எங்கள் குணமணி ரீச்சரல்லவா?

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் நான் படித்த பொழுது எனக்கு அவள் படிப்பித்திருக்கிறாள். அதற்குப்பிறகு நான் வேறு கல்லூரிக்குப் போய், பின் உத்தியோகமாகி வெளியூர்களில் இருக்க நேர்ந்தது. இடையில் ஊர் வருகின்ற சந்தர்ப்பங்களில் இரண்டொரு முறை குணமணி ரீச்சரைக் கண்டிருக்கிறேன்.

எங்களுக்குப் படிப்பிக்கின்ற காலத்தில் நல்ல அழகாக உடை உடுத்தி நாகரிகத் தோற்றத்துடன் மினு மினுப்பாக இருப்பாள். இடையில் நான் கண்டபோது மெலிந்து, கறுத்துப், பொலிவிழந்திருந்தாள்.

'இப்போது திடீரென்று இவளுக்கு என்ன நடந்தது?' என்று நான் நினைத்துக்கொண்டே,

"என்ன ரீச்சர்? என்ன நடந்தது?" என்று கேட்டதும்,

"ஐயோ தம்பி, இவங்கள் என்னை அடிக்கிறாங்கள். இஞ்சை பாரன் தடியாலை ராத்திரி முழுக்க அடி அடியெண்டு அடிச்ச தழும்புகள்" என்று சொல்லிக் கைகளைக் காட்டினாள்.

அப்போது தொலைவில் வந்துகொண்டிருந்தவர்கள் வாசலை அண்மி வந்துவிட்டார்கள். அவர்களுள் ஒருவர் குணமணி ரீச்சரின் பெறாமகன் வாசு. மற்றவர்களும் அவர்களின் உறவுக்காரர்கள்தான்.

"எழும்பு போவம். வீட்டை நட கெதியாய்"

என்று உறுக்கியபடி அவர்கள் அருகில் வர, ரீச்சர் மேலும் குழறிக்கொண்டு என் வீட்டுக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். இதற்கிடையில் அக்கம்பக்கத்தவர்களும் வந்து கூடிவிட்டார்கள். வாசு ஒரு பெரிய கம்பை எடுத்துக்கொண்டு

"வீட்டை நடக்கிறியோ இல்லை அடிச்சுக் கலைக்கிறதோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டுக் கொண்டு கேற்றை நெருங்கினார். நான் கேற்றைப் பிடித்துக் கொண்டு நடுவில் நின்றேன். அக்கம்பக்கத்தில் நின்றவர்களில் பலர் வேடிக்கை பார்க்க, சிலர் வாசுவைத் தடுத்து நிறுத்தினர்.

வாசு கோபத்தோடு.

"இது மனிசி விசர்பிடிச்சுத் தெருவெல்லாம் அலையிறது எங்களுக்கல்லே மானக் கேடாய்க் கிடக்குது.......பேசாமல் திண்டு போட்டு வீட்டிலை கிடக்கிறதுமில்லை.........."

அப்போது எனக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது.

'குணமணி ரீச்சருக்குப் பைத்தியமா? ஏன் இப்படி ஆகியது?' என்று நான் நினைக்கையில் அக்கம்பக்கத்தில் நின்றவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து இரண்டொரு மாதமாக ரீச்சர் மனநிலை சரியில்லாமல் இருக்கிறாவென்று தெரிந்து கொண்டேன்.

ரீச்சர் கேற்றுக்கு இப்பால் இருந்து கண்ணீர் வடித்தவாறு,

"அறுவாங்கள், என்னைப் பைத்தியம் எண்டு சொல்லி வீட்டுக்கை பூட்டிவச்சு அடிக்கிறாங்கள். எனக்கென்ன விசரே?"

என்று கேட்டுத் தன்னை விசர் என்று சொல்லித் தனக்குக் கெட்ட பெயர் வரச் செய்தவர்கள் என்று ஊரில் உள்ள நாலைந்து ஆட்களின் பெயர்களைச் சொல்லி மண்ணை வாரி அள்ளித் தூற்றினாள்.

இப்போது மறுபடியும் தடியோடும், மேலும் ஆக்கிரோஷத்தோடும் கேற்றடிக்கு வந்த வாசு என்னைத் தள்ளிவிட்டு ரீச்சரின் கையைப் பிடித்து இழுத்தார். அவள் அவலமாகக் கத்திக்கொண்டே மண்ணில் புரள்வது எனக்குப் பரிதாபமாக இருந்தது.

"இஞ் சேருங்கோ வாசு அண்ணை, அவ பைத்தியமெண்டாலும் எனக்குப் படிப்பிச்ச ரீச்சர். அவ என்ரை வீட்டுக்குள்ளை இருக்கேக்கை அவவை ஒண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாதையுங்கோ. அவ தன்ரைபாட்டிலை வீட்டை வந்துசேருவா, நீங்க போங்கோ"

என்று சொல்லி மறுபடியும் தடுத்தேன்.

"என்ன இருந்தாலும் அவ உன்ரை பெரியம்மாவல்லே, இப்பிடிச் செய்யாதை மேனை"

என்று யாரோ ஒரு வயதான பெண் சொல்லிக் கேட்டது.

வாசு கையை விட்டுவிட்டு நகர, ரீச்சர் நன்றி மிளிரும் கண்களுடன் ஒரு கணம் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடியும் கேற்றைச் சாத்திவிட்டு அதனருகில் இருந்தாள். தூரத்தில் தெரிந்த கோயிலை நோக்கிக் கும்பிட்டுக் கொண்டு அருகில் கோயிலை மறைத்தபடி நின்ற எல்லாரையும் விலகும்படி சைகை காட்டினாள். பின்னால் நின்ற என்னைத் திரும்பிப் பார்த்து.

"நீ ஏன் இதிலை நிக்கிறாய்? அங்காலை போ!" என்றாள். அவளுக்காக நான் பேசப்போக அவள் என்னையே துரத்துகிறாளே என்று நினைத்துக் கொண்டாலும் தெளிவற்ற அவளது மன நிலையைப் புரிந்து கொண்டு - அவளுக்காகப் பரிந்துகொண்டு, சற்று விலகி நின்று அவளைப் பற்றிச் சிந்தித்தேன். அவளைப் பற்றிய பல தகவல்களை அங்கு கூடி நின்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அவளுடைய கணவன் ஒரு குடிகாரன். மனிதாபிமானம் சிறிதுமில்லாதவன். உழைப்பு எதுவும் கிடையாது. இவளுடைய உழைப்பில் குடித்துவிட்டு இவளையும் குழந்தைகளையும் வருத்துவான். இத்தகைய துன்பங்களிலிருந்து கொஞ்சம் விடுதலை பெறுவதற்கு அவளுடைய ஆசிரியத் தொழில் துணையாக இருந்தது. அழகிய பிஞ்சு முகங்களைக் காண்பதிலும் அவர்களுடன் உரையாடுவதிலும் அவள் தன் துயரங்களை ஓரளவு மறக்க முடிந்தது.

ஆனால் அதற்கும் வேட்டு விழுந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பள்ளிக்கூடத்தில் நீ என்ன வேசையாடித் திரியிறாய்"

என்று கணவன் ஒருநாள் குடிவெறியில் கேட்டபோது அவள் மனம் ஒரேயடியாகச் சரிந்துவிட்டது.

வாழ்க்கையில் என்ன இன்பத்தைத்தான் கண்டாள் அவள். இளவயதில் எத்தனை இன்பக் கோட்டைகளைக் கனவில் கட்டி எழுப்பியிருப்பாள். அவை அத்தனையும் சிதைந்து விட்டபின் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அப்போதிருந்தே மனம் பேதலித்துப் போய்த் தன்பாட்டில் பேசிக் கொள்வதும், கண்ணீர் விடுவதும், சிரிப்பதுமாக இருந்தாள். இருந்தாற் போல் எங்காவது புறப்பட்டுப் போவாள். யாரையாவது கண்டவுடன் தன் வீட்டாரைப் பற்றியும், கணவரை பற்றியும் குறை சொல்ல முற்பட்டாள்.

இவையெல்லாம் வீட்டுக்காரருக்குத் தலைகுனிவாகி விட்டது. அவளைப் பைத்தியம் என்று முடிவு கட்டினார்கள். உற்றம், சுற்றம், ஊரவர் எல்லாருமாக அவளுக்குப் பைத்தியக்காரிப் பட்டத்தைக் கட்டிவிட்டார்கள். வீட்டிற்குள் பூட்டி வைத்தார்கள். அவள் அடம்பிடித்தபோது அடித்தார்கள். இம்சை செய்தார்கள்.

இவை எல்லாம் அவள் மனத்தை மேலும் வருத்தவே அவள் உண்மையாகவே பைத்தியமாகத் தொடங்கிவிட்டாள்.

சற்று நேரத்தில் நான் வாசுவையும் கூட்டத்தினரையும் விநயமாக அப்புறப்படுத்தியபின் குணமணி ரீச்சரையும் மெல்ல வீட்டிற்கு அனுப்பி வைத்தேன்.

சில நாட்களின்பின் அவள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அநுமதிக்கப்பட்டிருக்கிறாள் என அறிந்தேன். ஆனால், அதனால் என் மனம் அமைதியடைந்து விடவில்லை. ஏனென்றால் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் சென்று சுகமாகித் திரும்பி வந்தவர்களையும் சிறைசென்று மனம்திருந்தி வந்தவர்களையும் ஏற்று வாழவைக்க இந்த உலகம் தயாராக இருப்பதில்லையே!

*மல்லிகை ஜுன் 1979*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பாவின் மனைவியின் தம்பி என் கணவர் என்றால்..............

ஔவையாருக்கு விநாயகர் நேரில் காட்சி கொடுத்தாராம். ஔவையார் பிள்ளையாரிடம் புதுமையான ஒரு வரம் கேட்டுக் கொண்டாளாம்.

தனக்கு உடனடியாக முதுமை வேண்டும் என்பதே அந்த வரம்.

அவள் புத்திசாலிதான். அவள் காலத்திலும் சீதனம், சாதி, சமயம் என்று கல்யாணப் பிரச்சனைகள் இருந்ததுபோலும். அவள் சுலபமாகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு விட்டாள்......

'..........எனக்கும் அப்படி ஒருசக்தி இருந்தால்..... பிள்ளையார் எனக்கு முன்னால் தோன்றி அருள்கொடுத்தால் நானும் அவளைப் போலவே வரம் கேட்கவேண்டும்.

முதுமை வேண்டும். ஓ! இந்த இளமை எத்தனை பொல்லாதது...... உடல், மனம், உணர்ச்சிகள் யாவற்றிலுமே முதுமை பெற்றால்தான் இந்த சமூகத்திலிருந்து தப்பலாம்....

இல்லாவிட்டால் இப்படியே ஒவ்வொரு கல்யாணமாகப் பேசிப்பேசி.....

ஒவ்வொரு மாப்பிள்ளையாகத் தட்டிப்போக.....

நான் பெருமூச்சுகளை விட்டவாறு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை என்னை அணுஅணுவாகத் தின்றுகொண்டிருக்க

என் அழகை இந்த சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக ரசித்து

ஓ! எத்தனை சலிப்பான வாழ்க்கை இது!

விக்னேஸ்வரா! ஔவையாரைப்போல் எனக் கொரு வரம் நீ தரமாட்டாயா?

தேடுவாரற்று ஒருமூலையில் ஒதுங்கியிருந்த அந்தச்சிறிய பிள்ளையார் கோயிலில் அவள் வழிபட்டுக் கொண்டிருந்தாள்.

இந்தக் கேடுகெட்ட சமூகத்திலே பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒருகாரணத்தால்தான் அவள் அப்படியான சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள நேர்ந்ததோ?

உண்மையில் அப்படி ஒரு வரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவள் அங்கு வரவில்லை. ஏதோ தன்னுடைய நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக அவ்வப்போது தன் வீட்டிற்கு அருகிலுள்ள அந்தக் கோயிலுக்கும் போவது வழக்கம்.

எங்கேயோ தொலைவிலுள்ள கோயிலுக்குத் தேடிப்போய்த்தான் தெய்வத்தைத் தரிசிக்க வேண்டுமா என்ன?

அவள் கோயிலிலிருந்து திரும்பி நடந்து கொண்டிருந்தாள். நடுத்தர வயதைக் கடந்துவிட்ட இரண்டு பெண்கள் இவளைக்கடந்து எதிர்ப்புறம் சென்றுகொண்டிருந்தனர்.

தலையிலிருந்து கால்வரை இவளைக் கூர்ந்து கூர்ந்து பார்த்துப் பார்வையாலேயே அவளைத் துளைத்தெடுத்துக்கொண்டு இதழ்க்கடையில் ஒரு கேலிப் புன்னகையையும் நெளியவிட்டுக் கொண்டு அவர்கள் நடந்தபொழுது...........

அப்பப்பா, அந்தப் பார்வையைத் தாங்க மாட்டாமல் இவள் அப்படியே கூனிப்போய் விட்டாள். காவாலித்தனமான இளவட்டங்களின் நீசத்தனமான பார்வைகளில்கூட இத்தனை தாக்கம் இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண்களின் பார்வையில் கேலி, கிண்டல், அருவருப்பு, அலட்சியம் இவையெல்லாம் கலந்திருந்தன.

அதே தெருவில் இருப்பவர்கள்தான் அவர்கள். அவர்களது 'நக்கல்' பேச்சுக்கள் இவள்காதில் விழாமல் இல்லை.

"பாத்தியாடி, ஒரு கழுதை வயசிருக்கும், உந்த உடம்பை வைச்சுக்கொண்டு இன்னும்கன்னி கழியாமல் இருக்குதடி. பாக்கிற பொடியள் பழுதாகாமல் என்ன செய்யுங்கள். உதுகள் கலியாணம் செய்யாமல் இப்பிடித் திரியிறதாலைதானே இப்ப நாட்டிலை பாவங்கள் மலிஞ்சிருக்குது."

"ஓமெண்டிறன், அதுகும் ஏதும் அம்மன் கோயில், முருகன் கோயில்களுக்கெண்டாலும் போய் நேர்த்தி வைச்சுக்கும்பிடலாம். இது குமரி இந்தப்பிள்ளையார் கோயிலுக்கெல்லோ போய்க் கும்பிட்டிட்டு வருகுது. அது பாவம், தனக்கே இன்னும் கலியாணம் ஆகாமல் இருக்கிற பிள்ளையார் உதுகளின்ரை கலியாணத்தை எங்கை செய்துவைக்கப் போறார்"

பெண்பிள்ளைகளைப் பெறாத இரண்டு அதிஷ்டசாலிகள் போலும் அவர்கள். அர்த்தமில்லாமல் இப்பிடித் துக்கிரித்தனமாகப் பேசிக்கொண்டு போனார்கள். இவர்களைப்போன்ற பெண்களின் பொறுப்பற்ற தன்மைகூட இத்தகைய பல இளம் பெண்களின் வாழ்க்கைச் சீரழிவுக்குக் காரணம் என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை. அந்தப் பெண்கள் ஒவ்வொருவரும் 'சாத்தி' யிருந்த பவுண் நகைகளின் பெறுமதியே நூறு ஏழைப் பெண்களின் சீதனத்திற்கும் திருமணச் செலவுக்கும் போதுமானது என இவள் எண்ணிக்கொண்டாள்.

இவளுடைய கவலையால்தான் இவள்தாயார் இறந்து போனாள். அவள் இறந்தும் ஏழெட்டு வருடமாகி விட்டது. இப்போது அவள் இறந்துவிட்டாள் என்ற கவலைகூட இவளுக்கும் இவள் தந்தைக்கும் ஓரளவு மறந்துவிட்டது. இப்போ இவளது தந்தைக்கு இவளது திருமணம் பற்றித்தான் ஒரேகவலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுக்கோ தன் கவலையில் தாயைப்போல் தந்தையும் போய்விடக் கூடாதே என்று கவலை.

இருபது வயதானதுமே கல்யாணப் பேச்சும் ஆரம்பமாகி விட்டது. இன்னும் முடிந்த பாடில்லை.

இப்போது தலையில் ஆங்காங்கே நரைமயிர்கள்கூடத் தலைகாட்டத் தொடங்கிவிட்டன.

ஒவ்வொரு பேச்சில் ஒவ்வொரு குறையாகத் தட்டுப் பட்டுவிடுகின்றன. முக்கியமாகப் பேசிவரும் அநேக மாப்பிளைகள் கூடவே கல்யாணத்திற்கென்று ஒவ்வொரு சகோரிகளையும் வைத்திருக்கிறார்கள். இவர்களிடம் மாப்பிள்ளை கேட்கிறார்கள்.

ஒரு ஆண் சகோதரத்துடன் பிறக்காதது பற்றி இவள் இப்போது கவலைப்படுகிறாள்.

இப்போதெல்லாம் ஆண்கள் திருமணம் செய்வது தங்கள் சகோதரிகளைக் கல்யாணம் செய்வதற்காகத்தான் போலும் என்று அவள் நினைத்துப் பார்க்கிறாள். இவர்கள் ஒரு மாப்பிள்ளை கொடுக்க முடியாதவர்களாக இருப்பதால்தான் இவள் இன்னமும் இப்படி இருக்கிறாள்.

"உனக்குக் கல்யாணமாக வேண்டுமானால் இனி நான்தான் மாப்பிளையாக வேணும" என்று அவள் தந்தையார் அன்றைக்கொருநாள் கேலியாக, ஆனால் உள்ளே அழுதுகொண்டே சொன்னார்.

அவருக்கென்ன நாற்பத்திரண்டு வயதுதான் மதிக்கலாம். ஐம்பத்திரண்டு வயதென்பதை யாரும் நம்பமாட்டார்கள். நல்ல தேகக்கட்டும் அழகும்.

தான் ஒரு தடையாக இருந்திராவிட்டால் அம்மா இறந்தவுடன் இவர் இன்னொரு கல்யாணம் செய்திருக்கலாமே என்று இவள் யோசித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக, அவர் கேலி செய்ததை உண்மையாக்கும் வகையில் இன்று ஒரு கல்யானப் பேச்சு வந்திருக்கிறது.

"நல்ல மாப்பிளை ஒண்டிருக்கு பாருங்கோ. ஆனால் நாப்பத்திரண்டு வயசிலை மாப்பிளைக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவளுக்கொரு மாப்பிளை வேணுமாம்."

என்று கூறிய தரகர்,

"ஏன் பாருங்கோ, நீங்களே விருப்பமெண்டால் மாப்பிளையின்ரை சகோதரிப் பெட்டையைக் கட்டலாம்......"

அசந்துபோனார் இவர்.

"என்ன? நானோ?" திகைப்போடு கேட்டுக்கொண்டு தன்னையே ஒருகணம் பார்த்துக்கொண்டவர் மகளை நோக்கித் திரும்பியவர் அவள் மௌனமாகத் தலைகுனிந்தபடி எழுந்து உள்ளே போவதைக்கண்டார்.

"அவைக்கு நல்ல சம்மதம் நீங்கள் சரியெண்டால் சரிதான். இனி நல்லாய் யோசிச்சுச் சொல்லுங்கோ. நான் நாளைக்குவாறன் வந்தவர் போய்விட்டார். இவர் அசையாமல் இருந்தார்.

அவள் நன்றாக யோசித்தாள்

'இப்படி ஒரு கல்யாணம் அவசியமா?'

'கன்னி கழியாமல் உதுகள் உப்பிடித் திரியிறதாலை தானே நாட்டிலை பாவங்கள் மலிஞசிருக்குது'

தன்காதிலேயே விழுகின்ற வசைமொழிகள்..........

பெருமூச்சுக்கள்................

தன்னையே தின்னுகிற இளமைவேகம்......

எல்லாவற்றையும் விடத் தன் பொறுப்பிலிருந்து மீளத்துடிக்கும் தந்தையின்நிலை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் இன்னுமொரு கன்னிகழிகின்ற கைங்கரியம்.....

அப்பாவுக்கு கடைசிக்காலத்தில் ஓர் ஆறுதல்.....

அப்பாவை எப்படியும் இதற்குச் சம்மதிக்கவைக்கவேண்டும்.

அவள் நிச்சயத்துடன் தந்தையை நோக்கிநடக்கும்போது விக்கிரமாதித்தன் கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. அவள் நினைக்கிறாள்.

என் அப்பாவின் மனைவியின் தம்பி என் கணவர் என்றால்...............

என் மகனுக்கு என் அப்பா என்ன முறை?.........

சிரித்திரன் ஏப்ரல் 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு உண்மை புரிந்துவிட்டது

வர வரக் கூட்டம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

அம்மா சோர்வடைந்து விட்டாள். நிற்கமுடியாமல் அருகிலிருந்த தூணில் சாய்ந்தவாறு மெல்ல அமர்ந்தாள்.

எனக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்துவிட்டு,

"நேரம் ஒரு மணியாகிறது" என்று கூறினேன் நான்.

அந்த வசனத்தை மிகக் கவனமாகக் கூறியிருந்த போதும் என்னையும் மீறி எனது சலிப்பு அந்த வார்த்தையில் இழையோடியது எனக்குத் தெரிந்தது. ஆனால் அந்தச் சலிப்பை அதிகம் பொருட்படுத்தாமல் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு,

"இவ்வளவு தூரம் வந்தனாங்கள். இன்னும் கொஞ்ச நேரம் இருந்து பாத்திட்டுப் போவம்" என்றாள் அம்மா.

காலை ஏழு மணிக்கு அங்கு வந்து இவ்வளவு நேரம் காத்திருந்தும்கூட இன்னும் சலிப்பேற்படாமல் அதுவும் இந்த அறுபது வயதிலும்கூடப் பொறுமையாகக் காத்திருந்த அம்மா வைப் பார்க்க எனக்கு அதிசயமாக இருந்தது.

அதீதமான அற்புத சக்திவாய்ந்த அந்த சுவாமிகளைப் பார்த்து அவரிடம் ஆசிர்வாதம் வாங்கிவிட வேண்டுமென்று அவ்வளவு ஆசை அவளுக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவாரம்தான் அந்த சுவாமிகள் இந்தியாவிலிருந்து வந்தார். அற்புதங்கள் பல செய்துகாட்டும் யோக சாதனைகளைப் பெற்றவர் என்றும் அவருக்கு உலகம் முழுவதும் ஆயிரக் கணக்கான சீடர்கள் இருக்கிறார்கள் என்றும் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். பத்திரிகைகள் அவருடைய சாதனைகளைப் பற்றி எழுதித்தள்ளின.

நேற்று முன்தினம் பக்கத்து ஊரில் மடம் ஒன்றில் அவர் வந்திறங்கிய நேரம்முதல் அவரைப் போய்ப் பார்த்துவிட வேண்டுமென்று அம்மா துடிதுடித்தாள். அவளது கடைசிக்காலத்து ஆசைகளை ஏன் கெடுப்பானென்று எண்ணி இன்றைய எனது விடுமுறையைத் தியாகம் செய்தேன் நான்.

அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து, வீட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு சுவாமிகளுக்குக் கையுறையாக வெத்திலை பாக்குப் பழம் எடுத்துக்கொண்டு ஏழு மணிக்கு வந்த அவளுக்கு சுவாமியின் தரிசனம் இன்னும் கிடைக்கவில்லை.

கப்பல் போன்ற பெரிய கார் ஒன்று மடத்தின் முன்னே வந்து நின்றது. பட்டுப் பீதாம்பரங்களும் வைரவைடூரியங்களும் அழகு சாதனப் பொருட்களும் வாசனைத்திரவியங்களும் இரண்டு மனித உருவங்களுக்கு மேல் வீற்றிருந்தவாறு காரிலிருந்து இறங்கின.

சுவாமிகளைத் தரிசிக்க வந்து இடிபட்டு நெரிந்து முறிந்துகொண்டிருந்த பக்தர் கூட்டம் ஒதுங்கி வழிவிட்டது. சுவாமிகள் இருந்த அறை வாசலில் நின்றுகொண்டிருந்த இரண்டொருவர் - அவர்கள்தான் அந்த மடத்தின் நிர்வாகிகளாம் - ஓடிவந்து கூழைக் கும்பிடு போட்டு வரவேற்று உள்ளே கூட்டிச் சென்றனர். பெருமூச்சுகள் பல அந்த மண்டபத்திலிருந்து எழுந்தன.

இது ஒன்று மட்டுமல்ல இதற்கு முன் இதே போலப் பல பெரிய மனிதர்கள் ஆடை நலுங்காமல் வந்து அரை நிமிட நேரத்தில் அலுவலை முடித்துக்கொண்டு போய்விட அங்கே எங்களைப்போன்றவர்கள் மணிக்கணக்கில் காத்திருக்க நேரிட்டது. மடத்து நிர்வாகிகள் வருபவர்களை அதிகாரம் பண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்பவர்களில் பெரிய மனிதர்களாகவும் தமக்கு வேண்டியவர்களாகவும் உள்ளவர்களை அழைத்து விஷயத்தை முடித்து அனுப்பிவிட்டு மற்றவர்களைக் காக்கவைத்துக் கொண்டிருந்தனர்.

'எத்தனையோ யோகசாதனைகளையும் அற்புதங்களையும் நடத்தி உலகப் புகழ்பெற்ற துறவிக்கு இங்கே என் அம்மாவைப் போன்ற பல வயோதிபர்களும், நோயாளிகளும் மணிக்கணக்கில் காத்திருப்பதை அறியும் சக்திமட்டும் ஏன் இல்லாமல் போனது?' என்று நான் நினைத்துக்கொண்டேன்.

அந்த நிர்வாகிகளின் நியாயமற்ற இந்தச்செய்கைகளும் அவற்றைக் கண்டும் பொங்கி எழ முயலாத பக்தகோடிகளும்....

இதை எல்லாம் பார்க்கிறபோது எனக்கு அங்கு நிலவிய பக்திச் சூழ்நிலையையும் மீறி ஆத்திரம்தான் வந்தது.

"அம்மா பசிக்குது" என்று முனகியபடி ஒரு கிழட்டுப் பிச்சைக்காரி வாடி, மெலிந்து வற்றிய தோற்றத்துடன் நடக்கவும் தஞ்சமின்றி அருகே நின்று கையை நீட்டினாள்.

எனக்குப் பரிதாபமாக இருந்தது. அம்மாவின் கையிலிருந்த வாழைப்பழங்களில் சிலவற்றைப் பிய்த்து எடுத்து அந்தக் கிழவியின் கையில் கொடுத்தேன்.

அம்மா இதற்கு என்ன சொல்வாளோ என்ற அச்சத்தோடு நான் அவளைப்பார்த்தபோது பிச்சைக்காரி,

"நீங்க நல்லாயிருக்கணுமம்மா. தம்பி பெரிய உத்தியோகத்தில் இருக்கோணும். சாமி உங்களைக் காப்பாத்தட்டும்"

என்று மகிழ்ச்சியில் நாத்தழதழக்கக் கூறியபடி உடனே அந்த வாழைப் பழங்களைச் சாப்பிடத் தொடங்கினாள்.

திடீரென்று அம்மா எழுந்தாள்.

"இந்தாணை ஆச்சி, இதையும் சாப்பிடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி மீதிப் பழங்களையும் கொடுத்துவிட்டு என்னைப் பார்த்து,

"வா போவம்" என்றாள்.

நான் ஆச்சரியத்துடன் அவள் முகத்தைப் பார்த்தேன்.

அம்மாவின் கண்களில் நீர் துளிர்த்திருந்தது. முகத்தில் தெளிவு இருந்தது.

எனது வினாக்குறியைப் புரிந்து கொண்டு,

"நாங்கள்தான் ஆசிர்வாதம் வாங்கியாச்சே. உண்மையாய் ஆசிர்வாதம் எங்கையிருந்து வரவேணுமோ அங்கையிருந்து அது கிடைச்சிட்டுது"

என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டு நடந்த அவளைப் புரிந்துகொண்டு நானும் பின்தொடர்ந்தேன்.

- சுடர் புரட்டாதி 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடைல்

**கோ**யில் கதவை இழுத்துப் பூட்டிவிட்டு அருகில் இருந்த "எசமான்" வீட்டை நோக்கி நடந்தார் ஐயர்.

மெலிந்த - நெடிந்த உருவம். வயதுக்கு மீறி முதிர்ச்சியடைந்து முதுகு கூனி வளைந்துபோயிருந்தது. காலம் காலமாகத் தோய்த்துத் தோய்த்துத் தினமும் உடுக்கும் நாலுமுழத் துண்டு எண்ணெயும் கரியும் படிந்து நிறம் மங்கிக் கிழிசல்கள் ஒட்டுகளுடன் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்தது.

எசமான் வீட்டின் வாசலில் ஏறி அழைப்புமணியை அமுக்குகிறார்.

மின் விளக்குகளும், மின் விசிறிகளும், அழகிய பூச்சாடிகளும், பெரிய பெரிய அலங்கார சோபாக்களும், யன்னல் திரைச் சீலைகளும் அந்த ஆலய நிர்வாகியான 'எசமானு'டைய பண நிலைமையைத் துலாம்பரமாக எடுத்துக்கூறின.

வாசலருகிலிருந்த குஷன் தைத்த சோபா ஒன்றில் தூங்கிக் கொண்டிருந்த நாய்க்குட்டி இவரைக் கண்டதும் மெல்ல உறுமிக்கொண்டு இறங்கியது.

உள்ளேயிருந்து வந்த எசமானிடம் இவர் கோயிற்திறப்பை ஒப்படைத்தார்.

கோயில் பூஜைகள் எல்லாம் சரியான நேரத்துக்கு நடப்பதற்கும், கோயிற் பாதுகாப்புக்குமாக திறப்பை ஒவ்வொரு நேரப் பூசை முடிந்ததும் தம்மிடமே ஒப்படைக்கவேண்டுமென்பது அவரது கட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்காணும் இண்டைக்குப் பத்துநிமிசம் முந்தியே பூட்டிக் கொண்டு வந்திட்டீர்! ஒரு மணி மட்டும் கோயில் திறந்து வைச்சிருக்கவேணுமண்டல்லே சொன்னனான்"

ஒரு மணி ஆகிவிட்டதா இல்லையா என்று அறிந்து கதவைப் பூட்டுவதற்குக் கையில் மணிக்கூடு கட்டியிருக்கத்தக்க வசதி ஐயருக்கு இருக்கிறதா என்ன? அந்த இல்லாமையைக் கூறத் துணிவில்லாமல் தயங்கி நின்றார் அவர்.

அப்போது உள்ளேயிருந்து வந்த எசமானின் மகள் காரிக்கன் துணியில் தைத்து கோயிலின் எண்ணெயும் கரியும் சுமந்து ஐயரின் பை சோபாவில் கிடப்பதைக் கண்டு

"ஐயர்! இந்தப் பையிலை கிடக்கிற எண்ணெயும் கரியும் சோபாவிலையல்லே பிரளப்போகுது"

என்று கர்வத்தோடு கத்தினாள். சற்றுமுன் அவர்களது நாய்க்குட்டி படுத்திருந்த அந்த சோபாவில் அவரது பை இருப்பதற்குத் தகுதியில்லையென்று நினைத்தபோது அவருக்கு உள்ளூற ஆத்திரம் பொங்கியது.

மௌனமாக அந்தப் பையைக் கையிலேடுத்துக் கொண்டு எசமானைப் பார்த்தபடி தயங்கி நின்றார் ஐயர். அவரது தயக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொண்ட எசமான்,

"சம்பளத்துக்கு இன்னும் பத்து நாள் கிடக்கு அதுக்கு முன்னம் ஒண்டும் கிடையாது"

என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு உள்ளே திரும்பினார்.

இனி நிற்பதில் பயனில்லையென்று வெளியேறினார் ஐயர்.

நகர மத்தியில் பிரபலமாக அமைந்துள்ள அந்தப் பெரிய கோயிலின் வருமானத்தை எசமானின் வீட்டு நிலைமை களிலிருந்தும் அவரது மகளின் நடத்தையில் இருந்தும் கணிப்பிட்டுவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் நான்கு நேரப் பூசைக்காகச் சரியான மணிக்கணக்குத் தவறாமல் அரைமைல் தூரத்திலிருந்து நடையிலேயே தினமும் வந்து போகும் அந்த அர்ச்சகருக்கு மாதம் அறுபதுரூபா சம்பளம் மட்டும் கொடுக்கிறார்கள்.

உதவிக்கு வேறு ஆளில்லாமல் நைவேத்தியப் பொருட்கள் தயாரித்து அபிஷேகம் பூஜைகள் எல்லாவற்றையும் அவர் தனியொருவராகவே செய்த போதும்கூட அவருக்கு மாதச் சம்பளம் அவ்வளவுதான்!

அர்ச்சனைப் பணம் யாவும் கோயிலுக்குரியது.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடையாது. அர்ச்சனைக்கு வருகிறவர்கள் அவர் நிலைகண்டு இரங்கி தக்ஷிணையாக ஏதாவது கொடுப்பதைக்கூட எடுப்பதற்கு உரிமையில்லை. அதுவும் கோயில் உண்டியலில் போடப்பட்டு விடவேண்டும்.

உண்டியலில் 'திருப்பணி உண்டியல்' என்றுதான் எழுதப் பட்டுள்ளது. ஆனால், அந்தப் பணத்தில் பெரும் பகுதி எசமான் வீட்டுத் திருப்பணிக்கு போய்விடுவது வழக்கம்.

"தொழிலாளர்கள் முதலாளிகளினால் சுரண்டப் படுகிறார்கள். சாதித் திமிர் பிடித்த பெரும் பணக்காரப் பூர்ஷ்வாக்கள் ஏழைத் தொழிலாளரைக் கொடுமைப் படுத்தித் தமது வயிறு வளர்ப்பதைத் தடுக்கவேண்டும். நாம் அந்த முதலாளித்துவ சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டும்."

என்று யாரோ ஒரு தொழிற் சங்கவாதி பேசியிருந்ததாக அன்றைய தினசரித்தாளில் படித்த வசனங்கள் அவர் நினைவுக்கு வந்தன.

'அப்படியானால், என்னுடைய நிலைமைக்கு எந்தத் தொழிற்சங்கம் வழிவகுக்கும்?

விடியற்காலையிலிருந்து அர்த்த ஜாமப் பூஜைவரை இடையில் இரண்டொரு மணித்தியாலங்கள் தவிர மீதிப்பொழுதெல்லாம் கோயிலில் கஷ்டப்படுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மடைப்பள்ளிப் புகையில் வேர்த்துக்களைத்து வெந்து போவதும், குடம் குடமாகத் தண்ணீர் அள்ளி அபிஷேகம் பண்ணுவதுமாகக் கஷ்டப்படுகிறேன்.

'எனது வேலைக்கேற்ற ஊதியம் தரப்படுவதில்லை. அது மட்டுமல்லாமல் கிடைக்கின்ற தக்ஷிணைப் பணம்கூட கோயில் எசமான் என்ற முதலாளியால் அரக்கத்தனமாகச் சுரண்டப்படுகிறது. என்னை இப்படி வாட்டி வதைத்து அவர் பெரிய மாளிகையில் சொகுசு வாழ்க்கை வாழுகின்றார்.

நான் ஒரு தொழிலாளியாக இருக்க முடியாதோ?

ஜாதி இல்லை என்று சொல்கிற அதே பிரமுகர்கள் ஜாதியை வைத்தே தொழிலாளி முதலாளி பேதத்தை இன்று நடைமுறைப்படுத்துகிறார்கள்.

ஒருவேளை மதமும் மதச் சடங்குகளும் மானுடத்திற்கு வேண்டாதவை என அவர்கள் கருதுவதால் நானும் வேண்டாதவன் என்று ஒதுக்க முயற்சிக்கலாம்.

ஆனால் இன்று மதம் மக்களால் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அந்த ஏழைத் தொழிலாளருக்கு மனச்சாந்திக்கு இந்த வழிபாடு அவசியம் தேவை.

நான் இல்லாவிட்டாலும் கோயில் வழிபாட்டை அவர்கள் நிறுத்தப் போவதில்லை. அதுமட்டுமல்லாமல் மதம் வேண்டாம் என்று சொல்கிற 'பெரிய கை'கள் கூட சமயத்தில் பகட்டாக வந்து காளாஞ்சி வாங்கிக்கொண்டு போக ஆலயமும், ஐயரும் தேவையாக இருக்கிறதே!

பலவித சிந்தனைகள் அலைமோத - இன்றைய சமூக நிலைகளையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் வர்க்க பேதங்களையும் சிந்தித்தவாறு அந்த மெல்லிய குச்சி உருவம் நடந்து கொண்டிருந்தது.

தொழிலாளர் சிந்துகின்ற வியர்வை பற்றிக் கதை கதையாக எழுதுகிறார்கள். நான் தினமும் சிந்துகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வையெல்லாம் அபிஷேக ஜலத்தோடு கலந்து கழுவப் பட்டுப் போய்விடுவதால் யாருக்கும் தென்படுவதில்லையோ?

இந்த ஜாதி அமைப்பு ஏன்தான் வந்ததோ?

என் மகனுடைய வாழ்க்கை பாழாவதற்கும் என்னுடைய இந்த நிலைதானே காரணம்.

மகனை வேலைக்கு வரச்சொல்லி ஒரு சின்னக் கொம்பனியிலிருந்து போன கிழமை கடிதம் வந்தது. அவன் கொழும்பில் கண்ட கண்ட இடங்களிலும் சாப்பிடவேண்டிவரும். அப்படி வந்தால் நான் பூஜை பண்ணத் தகுதியற்றவன் என்று என்னை நீக்கிவிடப்போவதாக எசமான் மிரட்டினார்.

பூசாரியின் மகனுக்கு உத்தியோகம் என்ன வேண்டியிருக்கு என்பது எசமானின் நினைவு.

வயிற்றுக்குச் சோறுபோடும் இந்த அறுபது ரூபாவை விட்டால் எனக்கு வேறு வழி ஏது? வேலை வேண்டாமென்று மகனைத் தடுத்து நிறுத்திவிட்டேன்.

"இப்ப அவனுடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்லாமல் என்னுடைய இந்த நிலைமைக்கும் இந்தச் சமுதாய அமைப்பு முறை தானே காரணம்.

நான் ஒரு பெரிய சாதிக்காரன் என்றதாலே நான் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தாலும் பூர்ஷ்வா என்ற பேரை மாற்றமுடியாது. எனக்கு உதவயாரும் முன்வர மாட்டார்கள். என்னைத்தொழிலாளி என்று ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.

இன்றைக்கு முற்போக்குப் பேசுபவர்கள் கூட எசமான் போன்றவர்களைப் பின்னால் நின்று திட்டித்தீர்த்து விட்டு முன்னால் வந்து நின்று பல்லிளிப்பதைத்தான் காண முடிகிறது.

இந்த சமுதாயத்தில் இருக்கிற ஜாதிகளை நான் இன்றைக் குத்தான் புரிந்து கொண்டேன். பிராமணன், வேளாளன், பள்ளன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையன் என்பதெல்லாவற்றையும் விட உள்ளவன் இல்லாதவன் என்ற இரண்டும்தான் ஜாதிகள்.....!

அன்றிரவு எசமான் வீட்டில் திறப்பைக்கொடுத்து விட்டு,

"நாளைக்குத் தொடக்கம் திறப்புவாங்க வரமாட்டேன்"

என்று கூறி விட்டு வேகமாகத் திரும்பி நடந்தார்.

"மகனை நாளைக்குக் கொழும்புக்குப்போக ஆயத்தப் படுத்தச்சொல்லவேணும். உடனே போய் அந்த வேலையை ஒப்புக் கொள்ளவேணும்"

என்ற எண்ணத்தோடு நடந்த அவரது கூனல் முதுகுகூடச் சிறிது நிமிர்ந்திருந்தது.

சுடர் தை 1976
சுடர் மாதாந்தப் போட்டியிலும்
தகவம் காலாண்டுச் சிறுகதைத் தேர்விலும்
பரிசுகள் பெற்ற கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றிற்குப் பிறகு

"இஞ்சேர் கனகரத்தினம்! உனக்கு நான் சொல்லிறது பகிடியாய்க் கிடக்கோ? நான் என்ன பொய்யே சொல்லுறன் இஞ்சை உன்ரை கிரகக் கோட்டிலை இருக்கிற கிரகங்களும் உன்ரை கைரேகையும் சொல்லுறதை அப்பிடியே சொல்லிறன். நீ நம்பினால் நம்பு, இல்லாட்டிப்போ"

சாத்திரி சின்னத்தம்பி, கனகரத்தினத்தின் கையைப் பார்த்துக்கொண்டு உறுதியாகக் கூறினார். கனகரத்தினத்துக்கு நம்பிக்கை வரவில்லை.

"இல்லை பாருங்கோ..... எனக்கிப்ப நாற்பத்தியெட்டு வயதாகுது. மனிசிக்கும் ஒரு நாப்பத்தஞ்சுக்குக் கிட்ட வரும். கலியாணம் முடிச்சு இருவது வரியத்துக்கு மேலையாச்சு. இவ்வளவு காலமாயில்லாத பிள்ளை இனி என்னண்டு வரப்போகுது. அதுதான் எனக்குப் புரியேல்லை".... என்று இழுத்த அவரை இடைமறித்து.

என்ன, என்ன? பிள்ளை என்னண்டு வரப்போகுதெண்டு புரியேல்லையோ? நான் அது வாற விதத்தை விளங்கப் படுத்திறதோ?" என்று கேட்டுத் தனது வயதுக்குச் சற்றும் பொருத்தமில்லாத அபத்தமான ஒரு நகைச்சுவையை அவிழ்த்து விட்டார் சாத்திரியார். கனகரத்தினத்தார் சிரிப்பதாக இல்லை யோசனையில் ஆழ்ந்தார்.

"என்ன கனகரத்தினம் யோசனை, உனக்கு இனிப் பிறக்கப் போற பிள்ளைதான் உன்ரை ஏகப்பட்ட சொத்துகளெல்லாத் துக்கும் வாரிசு. சிங்கக்குட்டி போலை ஒரு அதிர்ஷ்டக்காரன் பிறக்கப் போறான் பாரன். இன்னும் ரண்டு வரியத்துக்குள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குப் பிள்ளையில்லையென்டால் நான் சாத்திரம் பாக்கிறதை விட்டிடுறன்.... அது சரி, எனக்கு இனி ஒரு பொம்பிளைப்பிள்ளை பிறந்தால் உனக்குப் பிறக்கப் போற பொடியனுக்குக் கட்டிப்போடலாம். எனக்குத்தானே இனிப் பிள்ளை இல்லை... என்ன செய்யிறது?” என்று கூறிச் சிரித்தார் சின்னத்தம்பியர்.

இப்போது கனகரத்தினத்தாருக்கும் கொஞ்சம் சிரிப்பு வந்தது.

“ஏன் உங்களுக்கு இனிப் பிள்ளை இல்லையென்டு சொல்லுறியள். உங்களுக்கும் என்ரை வயதுதானே இருக்கும். மனிசிக்கும் ஆக மிஞ்சினால் நாற்பது வயதிருக்குமெண்டு நினைக்கிறன்.” என்றார் கனகரத்தினம்.

“நான் ஆரெண்டு தெரியுமோ? இருவது வயதிலையிருந்து சாத்திரம் பாக்கத் தொடங்கினனான். இப்ப எனக்கும் அங்கை ஒரு நாற்பத்தி ஒன்பது வயது முடியுது. இந்த முப்பது வரியத்திலை நான் சொல்லி ஒரு சாத்திரம் பிழைச்சிருக்குதோ? இல்லைக் கேக்கிறன் சொல்லு!... எனக்கும் என்ரை மனிசிக்கும் மூண்டு பிள்ளையள். மூண்டும் கலியாணம் கட்டி நல்லாயிருக்குதுகள் இதுக்குமேலை என்ரை கிரகக் கோட்டின்படி பிள்ளையள் இல்லை”

சின்னத்தம்பியின் சுயபுராணத்தை அதற்குமேல் கேட்கப் பொறுமையில்லாமல் புறப்பட்டார் கனகரத்தினம்.

பஞ்சாங்கத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சாத்திரியார் உள்ளே ஏதோ சத்தம் கேட்டு எழுந்து ஓடினார். அவர் மனைவி சரசு வாசற்படியிலிருந்து ஓங்காளித்துக்கொண்டிருந்தாள்.

“என்ன சரசு? என்ன விஷயம்?”

என்று கேட்டுக்கொண்டு அருகில் வந்து ஆதரவோடு மனைவியின் தலையைப் பிடித்தார்.

“விடுங்கோ, அதெல்லாம் சரிவந்திடும்”

என்று சொல்லிக்கொண்டு ஒருமுறை சத்தியெடுத்த சரசு நாணத்தோடு நிமிர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு காலத்துக்குப் பிறகு இந்த வயதிலே தோன்றிய அந்த நாணத்துக்குக் காரணம் புரியாத சின்னத்தம்பி,

"ஏன் சரசு! இண்டைக்குச் சாப்பாட்டிலை ஏதும் வித்தியசமோ?" என்று வினவினார்.

சரசு தலையைக் குனிந்து கொண்டே

"வித்தியாசமொண்டுமில்லை.... இது மூண்டு மாசம்..."

என்று கூறிக் கொண்டு உள்ளே விரைந்தாள்.

"என்னடீ? மூண்டு மாசமோ? அடி பாதகீ" என்று கத்திக் கொண்டு பின்னால் தொடர்ந்து வந்த கணவனை அதிசயமாகப் பார்த்துக்கொண்டே,

"அந்தப் பாதகத்திலை உங்களுக்கும் பங்கு இருக்குதெண்டு நினைவில்லையோ?" என்று கேட்டாள் சரசு.

"அதுசரி, ஆனால் என்னுடைய சாதக பலன், கைரேகை ரண்டின்படியும் எனக்கு மூண்டு பிள்ளையளுக்கு மேலை இல்லை. இது எனக்கு நிச்சயமாய்த் தெரியும்"

என்று உறுதியாகக் கூறிக்கொண்டு அவளை உறுத்துப் பார்த்தார்.

"அப்பிடியெண்டால்.... இந்தப்பிள்ளை?" என்று இழுத்தாள் அவள்.

"அது என்னுடையதில்லை, அதுக்குத் தகப்பன் ஆரெண்டு நான் அறியோணும், சண்டாளி எனக்குத் துரோகம் செய்திட்டியே...?"

என்று குமுறிய சாத்திரியாரின் கால்களில் விழுந்து கதறினாள் சரசு. தனது இதயசுத்தத்தையும், உடற் பரிசுத்தத்தையும், நிரூபிக்க முயன்று சத்தியங்கள் கூறி ஒப்பாரி வைத்தாள்.

சாத்திரி சின்னத்தம்பியின் நினைவில் அவரது முப்பது வருட சோதிட வாழ்க்கை சுழன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வநிச்சயமாக கனகரத்தினத்தாரிடமும் அவர் போலவே வேறும் பலரிடமும் தாம் அடித்துக்கூறிய தமது சோதிட அறிவும் மனக் கண்ணில் நிழலாடியது.

தமக்கு நாலாவது பிள்ளை உண்டு என்பதை நம்பமுடியாத அவர். காலடியில் விழுந்து கதறிய மனைவியை உதறித்தள்ளிவிட்டு,

"உன்ரை முகத்திலையே முழிக்கிறது பாவம்" என்று கூறிக்கொண்டு வெளியேறினார்.

வாசற்படியில் இறங்கிய சின்னத்தம்பியை நோக்கி ஓடிவந்த ஒருவர் மூச்சிரைத்தபடி அவசரமாகக் கூறினார்.

"சாத்திரியார்! புதினம் தெரியுமே? சந்தியிலை ஒரு அக்சிடெண்டல்லே"

சாத்திரியார் சுரத்தில்லாமல்,

"என்ன நடந்தது" என்று கேட்டார்.

"எங்கடை கனகரத்தினத்தாரும் மனிசியுமாய்க் காரிலை போய்க்கொண்டிருந்தவை. பஸ் ஒண்டு அடிச்சு உடனை அதிலை ரண்டு பேரும் முடிஞ்சினம். இப்பதான் வீட்டை கொண்டு போகினம்."

வந்தவர் போய்விட்டார். சின்னத்தம்பியர் ஒரு கணம் விக்கித்து நின்று விட்டார். கனகரத்தினத்தாருக்குக் கிடைக்க விருக்கும் சந்தான பாக்கியம் பற்றியும் தமது சோதிடத் திறமை பற்றியும் பெருமையோடு கூறியவை மறுகணம் நினைவில் சுழன்றன.

மனைவி சரசுவும் மனக் கண்ணில் தோன்றினாள் வாசற்படியில் ஒரு காலும் வெளியில் ஒரு காலுமாக நின்றிருந்த அவரது கால்கள் ஒரு கணம் நிதானித்துவிட்டு மீண்டும் வீட்டினுள் திரும்பி நடந்தன.

- சுடர் ஆனி 1976.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைப்பற்றி.....



கோப்பாய் சிவத்தின் பல்துறைசார்ந்த ஆக்கங்களின் கனத்திற்கு, மறுமலர்ச்சிக் குழுவின் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுள் ஒருவரான பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மாவின் மகன் என்பதும் அதனால் பண்டைய தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியத்தை யும் நவீன இலக்கியத்தின் போக்குகளையும் புரிந்து கொள்ளக் கிடைத்த வாய்ப்பின் விளைவு என்பதும் ஆதார ஏதுக்களாகும் என நம்புகின்றேன்.

"ஈழநாடு" பத்தாவதாண்டு நிறைவுக் கவிதைப்போட்டி (1969), நீலாவணன் நினைவுக் கவிதைப்போட்டி (1972), "சுடர்" சிறுகதைப் போட்டி (1976), "செவ்வந்தி" கவிதைப்போட்டி (1978), "வீரகேசரி" திறனாய்வுப் போட்டி (1981), "தாரகை" சிறுகதைப்போட்டி (1983), "களம்" சிறுகதைப்போட்டி (1984), நீர்ப்பாசனத்திணைக்களக் கடன்வழங்குசபைக் கட்டுரைப் போட்டி (1984) முதலியவற்றில் கோப்பாய் சிவம் பரிசுகள் பெற்றிருக்கிறார்.

1984இல் ஆக்கவுரிமைகள் வியாபாரக்குறிகள் பதிவகம் நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் ரூபா 5000/= முதற்பரிசாகப் பெற்றமை அவரது இலக்கிய முயற்சிகளுக்குச் சிகரம் வைத்ததாகும். அவ்வாறு வெற்றியீட்டிய சிறுகதைகளின் தொகுப்பு "நியாயமான போராட்டங்கள்"

நவீன சிறுகதைகளின் போக்கினைக் கோப்பாய் சிவம் நன்கு புரிந்திருக்கிறார் என்பதற்கு அவரது கதைகள் தக்க எடுத்துக்காட்டுக்கள். மனித உணர்வின் ஒரு சிறு முறுகலை அவிழ்த்து விடும்போது இவர் கதைகள் பூரணம் பெற்று விடுவதைக் காணலாம். தத்துவார்த்தமான வார்த்தையாடல் கள் மூலமும் இனிமையும் இறுக்கமும் கொண்ட உரைநடை மூலமும் கதைகளைக் கோப்பாய் சிவம் நகர்த்தி முடித்துள்ளார்.

– செங்கை ஆழியான் –

Cover Print: Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org